AE-5

உ

கடவுள் துணை

சுப்பிரமணியர் அகஸ்தியருக்கு

உபதேசித்த

கந்தர் நாடி

K. RANGANATHA RAO
BOOK SELLERS & COMMISSION AGENT
MAIL ORDER SUPPLIERS
AGENT: KALI RUBBER STAMP WORKS,
No. 50-A, Kalyana Ramier Street,
KUMBAKONAM,

இதில்

பனிரெண்டு ராசிகளுக்கும் சக்கரங்களமைத்து

அச்சிட்டிருக்கின்றன.

இஃது

மைசூர் சமஸ்தானம் சோதிடர்

ஸ்ரீ. வீரோஜிராவ் அவர்களாலும்,

சோதிடத்திற் சிறந்த வாழப்பந்தல்

முனிசாமி முதலியார் அவர்களாலும்

பரிசோதிக்கப்பட்டது.

சென்னை:

B. இரத்தின நாயகர் அண்ட் ஸன்ஸ்

அவர்களால்

திருமகள் விலாச அச்சகத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

காப்பிரைட்] [விலை ரூ. Rs 3/50

உ

கடவுள் துணை

ஜாதகரகசிய மென்னும்

கந்தர் நாடி

விநாயகர் துதி—கலி விருத்தம்

மைந்தனுதித்த இராசிலக்கினமும்
சுந்தரநவக்கோளின் வலுக்களும்
வந்திடுந்திசையொடு முன்சனனமும்
கந்தர்நாடிசொல் கணபதிகாப்பரே.

அகத்தியமாமுனிதனக்கு குருவாய்வந்து
அருந்தமிழைபோதித்த கந்தரென்கோன்
ஜெகத்திலுள்ளபல்லோர்க்கு வேணுமென்று
செப்பினுர்சாதகர்க்கு கந்தர்நாடி
வகுத்தயிந்தசோதிடத்தை கையிலேந்தி
வருஞ்சுதனுக்கிப்பலனை வரைவாயாகில்
மருத்துவமாங்குமரனென்று வுலகிலுள்ளோர்
மலரடியைதுதிசெய்து வணங்குவாரே.

	லக்ன	சனி சந்திர	புதன் சூரிய சுக்ரன்
செவ்	முதலாவது மேஷராசி		குரு ராகு
கேது			

1-வது மேஷலக்கினம்

சந்திரன்மைந்தன்சேயில் சார்ந்திடசாடியாறல்
புந்தியுமலரிசுங்கன் புகழ்வீணைசிகிசுருவாம்
வந்திடமன்னன்ராகு வளம்பெரும்நண்டில்மேவ
சுந்தரசுதன்தனக்கு இலக்கினமேடமுற்றுல்.

இரவியொடுவக்கிரியும் பார்ப்பான்தானும்
இசைவாகமறையதனி லிருக்கவேணும்
குறைவின்றியரன்ருளின் பூசைசெய்வான்
குவலயத்தில்பாலனவ னுதிக்கும்போது
தெருவதுவேவொருபாலி லில்லமாகும்
திக்கறிவாய்கிழக்குடனே மேற்கேயென்று
வருகுமொருயில்லமூனம் தெற்குவாசல்
வரையக்கேள்முன்ஜெனனங் கந்தர்வாக்கே. 1

திருவாதவூராருக்குச் சீஷனுகி
தெளிவாகவளமல ரெடுத்துநாளும்
மருகயவனுள்ளம்போல் நடத்துநாளில்
மகிமைபெரும்வற்றுளைப் பெற்றிடாமல்
பொருமையிலான்கடுத்தமொழி யிவனுங்கூற
பேசியதோர்கண்டவர்கள் சாபத்தாலே
வருகவேசடிலவிந்த பலாபலத்தை
வகுத்திடவேகந்தர்மொழி வாக்கைக்கேளே. 2

பிறந்தவுடன்மதலையன்னே யிறந்தேபோவாள்
பின்புயிவன்தந்தை அயலூரில்நின்று
சிறந்திடவேயிவன்சேற யிவனின்மூத்தோன்
செப்பியவொருவனே யாகும்பாரு
ஒருவனின்தென்பாலில் ஐந்தினுக்குள்
ஓதுபொருவெகுதூரத் துள்ளானென்று
திருவுருவாம்மதலைகட்கு செந்தமிழையோதி
ஜெகமதினில்கீர்த்தியென்ருர் கந்தர்வாக்கே. 3

தந்தையொடுபிறந்தவர்க ளிருவர்தன்னில்
தான்வேருய்குடும்பமது வாழ்வான்பாரு
விந்தைபெருங்கல்விரெண்டு விவேகமுண்டு
விளங்கிடுமகுதிகட்கு வன்னமீய்வான்

சிந்தையுருங்குடும்பமது ஸ்திரீயால்குன்று
சித்தமுரும்சீஷரால் வுயிர்நிதியுண்டாகும்
நிந்தையென்றசத்தியங்கள் செய்யான்பாரு
நேசித்தோர்க்குதவியென்ருர் கந்தர்வாக்கே. 4

பதினுறுபாஷைகளும் பலிதமாகும்
பரிந்தீன்றதாய்வழியில் வந்தகன்னி
நிதியாகமணம்புரிவான் நீள்கவிதான்ரெண்டில்
நிலைதவறிகடன்கொள்ளான் வீண்வார்த்தைபேசான்
இதமாகயிருபதா மாண்டில்புத்திரர்
இணங்குவது ஆண்பெண்ணு மாறுபேர்கள்
ததியாகும்வாண்மூன்று கன்னியொன்று
தக்கினதுதீர்க்கமென்ருர் கந்தர்வாக்கே. 5

கெட்டதோர்பிணியெதுவு மணுகிடாது
கேட்டிடுவாய்அப்படியே அந்தபோதும்
வெட்டிடவேயோடுமது அதிர்ஷ்டமில்லை
விளம்புமொருயெழுபத்தி யொன்றில்கேளு
அட்டியன்றிமீனமாத மமரர்லோகம்
அடைகுவான்சதுர்த்திதனில் பதவியென்று
கட்டினூர்சாதகத்தின் பலனைநன்ருய்
கைலைமலையோன்சுதனுன் கந்தர்வாக்கே. 6

இந்தநற்பலனைநாங்க ளிசைந்தனவைக்கோளாலே
முந்தியகருமகாண்டம் முறைப்படிபவமொழித்தால்
சுந்தரன்தனக்குச்சொன்ன சுகமெலாமனுபவிப்பான்
இந்திரன்சுதலாள்நேயன் யியம்பியேகந்தர்வாக்கே.

முதலாவது மேஷலக்கினம் முற்றிற்று.

	லக்ன	செவ்	
குரு	2 - வது மேஷராசி		ராகு
கேது			சந்திர
		புதன் சூரிய சுக்ரன்	சனி

௨-வது மேஷலக்கினம்

சந்திரன்புலியிற்கன்னி சனியுறநந்தியாறல்
புந்தியுமலறிசுங்கன் புகழ்துலைமானிற்கேது
சுந்திரமன்னன்சாடி சூழ்பணிகடகமேவ
இந்தவார்நவக்கோள்நின்று யிலக்கினம்மேடமுற்றால். 1

இந்தசேய்பிறந்தவீதி யியம்புவேன்கிழக்குமேற்கு
அந்தயில்தான்பால்வாசல் அதன்வடக்கதனில்சந்தாம்
சுந்தரசிங்கமீசன் சூழ்துலைகரியுங்காரி
வந்திடஞ்சூழும்மீனில் வளர்சத்திசுழிக்காவாரி. 2

இந்தநல்லடையாளங்கள் இணங்கியசித்தூர்தன்னில்
முந்துசெய்தவத்துவேளாளன் முயர்தவசேயர்முன்னோன்
சுந்தரசேயன்செய்த சூழ்வினையின்னதென்று
வந்திடுநவக்கோளாலே வரையக்கேள்கந்தர்வாக்கே. 3

முன்னவன்செனனந்தன்னில் மொழிகுவோமுற்றுங்கேளாய்
மன்னியமருவூர்தன்னில் மருத்துவகுலத்தில்தோன்றி
அன்னையுந்தந்தைமிக்க அருந்துணையில்லஞ்சேயும்
நன்னயமணியுஞ்செம்பொன் நலம்பெறவாழுநாளில். 4

தன்னினத்தோருக்கெல்லாம் தலைவனாயிருந்துக்கொண்டு
பொன்னதைகொடுக்கல்வாங்கல் புகழ்மறையொருவன்வந்து
யென்னுடசேயுமில்லும் யீடதாய்வைத்துக்கொண்டு
பொன்னதைத்தாருமென்றான் புகன்றசொற்படியேயீந்தான். 5

அந்தணன்பொருள்கைகொண்டு அகமகிழ்ந்திரண்டாந்தாரம்
சுந்தரமாகச்செய்து சுகம்பெறவாழிலின்னேன்
அந்தணன்மனைக்கங்கேகி வரும்பொருள்தன்னைக்கேட்க
தந்தனயென்செய்யில்லான் தனத்தினிற்கரிதியென்றான். 6

என்னுடதனத்திற்கீடு யிசைவுருதினஞ்சேயில்லும்
பொன்னறவளித்துநீயும் போவெனமரிக்கவன்னேன்
வின்னமாய்வெருண்டுசித்தம் விளம்பியமொழியைக்கேட்டு
அன்னவனெழுந்துகையால் அரைந்துவாயதட்டிசொல்வான். 7

உன்னுடமனைவிதன்னை யுறுதியாயெனக்குயீந்தால்
என்னுடபொருளுக்கீடு யிதுசரியாகுமென்றான்
சொன்னசொல்மறையோன்கேட்டு சுகமருள்கங்கைக்கேக
மன்னியமறையோன்தேவி மனமறியாமலின்னேன். 8

அன்றிராயவன்பால்சென்று அமளியிலுறங்கியேதான்
கண்டிவன்வகையால்வரவை கழறிடாதகற்றிப்போக
பண்டுநாளிருந்தகர்ப்பை பரித்திடும்பாவிகேளாய்
வண்டுநற்குழலாள்தானும் வரைகுவாள்சாபங்கேளே. 9

மன்னியமனைவிமைந்தர் மாரகமடைவாயென்று
உன்னிடதனுவிற்பீடை வுறுதியாயடைவாயென்று
அன்னவள்தீயில்வீழ்ந்தா னவ்வினையிவனைச்சூழ்ந்து
இன்னிலத்தியல்புநீங்கி யெழில்சடத்தாவிநீத்தான். 10

தென்றிசையேமநாடு யத்திவன்கழிந்தபின்பு
வென்றிகொள்மலரோன்திட்ட விளங்கிடவந்துபாலன்
நன்றியைமறந்துசெய்த நற்பவமிச்சென்மத்தில்
சென்றதுசெய்யும்வாரு செப்புவேன்கந்தர்வாக்கே. 11

ஜாதகனுக்குப் பரிகாரம்

முந்தியபவத்தைநீக்க முரைக்கிறேம்சேதுக்கேகி
அந்தணன்மனையாளுக்கு ஆடையுமடைக்காயேமம்
நந்தொடுபதுமையீந்து நர்ப்பதம்வணங்கிபோற்றில்
முந்தியபாவங்கள்போகும் முகித்தசேய்தீர்க்கமாகும். 12

ஜாதகன் குடும்பஸ்தான பலன்

தந்தையின்துணைபனேழில் ஆண்ணுலுகன்னியொன்று
தந்துணையேழில்தீர்க்கம் ஆண்மூன்றுகன்னியொன்று
வந்திடுமாணில்மூத்தோன் வளம்பெறுயிளையோனுக்கு
வந்ததேயிருசிகப்பு வளர்த்தியுமற்பதேகம். 13

வந்தசேயிருசெகப்பு வளர்த்தியுமற்பதேகம்
வந்ததுதமிழேகல்வி வளமுருங்கேள்வியுண்டு
சிந்தையுமனதில்நெஞ்சம் செப்புவான்வினேதவார்த்தை
தொந்தமாயிவன்தன்கீர்த்தி செப்புவேன்யின்னங்கேளாய். 14

நல்லவன்நல்லவர்க்கும் நலமிலார்தங்களுக்கும்
புல்லற்கும்விரோதியாவான் புகழ்பூமியதனுற்செல்வம்
செல்லுவைநிதிகைகுடும்ப சகோதரர்சொற்சமையஞ்சொல்லும்
மல்லுரைதமக்குஅஞ்சான் மாத்தானேயெதிர்த்துவெல்வான். 15

பனேயொடுயேர்பெருக்கம் பாக்கியமனேயாளுண்டாம்
இனேசுகசயனம்மெத்தை யிகல்பெரும்பணிதிசூடும்
புனேதுயில்தீர்க்கமாகும் பிறமாதர்போகமற்பம்
கனேவிழியமுதேயெங்கள் கந்தரின்வாக்கேசொல்லும். 16

முன்னிவன்முதியோர்பூமி முதிர்ந்தனமணியுமற்பம்
மின்னிவன்னிலமும்பூமி பிலமுறவந்துசேரும்
தன்னிடதுணேகளுக்கு தந்தைபொற்குளிர்ந்துகாப்பான்
முன்னுறும்பவத்தைப்போக்கி முதித்தசேய்தீர்க்கமாகும். 17

கருத்திடுங்குழலாய்கேளும் காரியமறிந்துசெய்வான்
பொருந்திடுங்குணமுமுண்டு பொய்புரையற்பமுண்டு
பொருத்திடவொருவர்பாலும் வீணுரைபகர்வானுவால்
செருத்தவர்தமக்குச்செய்வான் தேவரைவணங்கிக்கோர்வான்.

மந்திரமறையுணர்ந்த மாமறையோகிகட்கும்
சிந்தைவைத்தீவானுகும் செப்பவன்வினேதமாகும்
முந்தியதவணமோறன் முகுந்தனன்குடியதாகும்
சந்ததியற்பமுண்டு சாஸ்திரமறிந்தோர்க்கீய்வான். 19

தன்னினத்தவர்க்குநல்லோன் தயவுளான்குணவானுகும்
பொன்னெடுபணிதிசேற்க புரிகுவன்பொய்கள்சொல்வான்
நன்னயமிகுசொல்மிக்கான் நல்லவர்பெரியோர்நேயன்
சொன்னசொல்பிசகான்வால சோர்வரவுரைத்திடானே. 20

அன்னியர்க்குதவிசெய்வான் அகுதிகட்கன்புமுண்டு
பொன்னதுசேர்க்கையுண்டு புத்திரனுென்றுதீர்க்கம்
சொன்னசொற்பிசகிராது தொடுத்திடுங்கருமம்வெல்வன்
சென்னலும்யிராசிசேரும் செய்தொழில்பனிதமாமே. 21

கடன்கொளான்யிடுக்கம்வந்து காரியமறிந்துசெய்வான்
உடன்படான்பிழைக்கோளென்றும்வுபாயங்களதற்குச்செய்வான்
விடவுரைபகர்வான் உள்ளம் வெகுளிபோலெவர்க்குந்தோன்றும்
மடவலர்போகங்கொள்வான் மனமதுயிரக்கவானே. 22

தந்தையால்புகழுங்கீர்த்தி தனமொடுசேயுமில்லை
வந்திடுமற்பமாக வளர்சுதன் தன்னுற்போகம்
முந்தியதந்தைக்கின்பம் மொழிந்திடபுதல்வரில்லை
பிந்தியதந்தைமைந்தன் பிலனுறுமனமில்லானே. 23

தன் துணைக்கன்னியொன்று தலைவணைச்சேர்ந்துவாழ்வான்
மைந்தரும்பணிசேயோடும் மரிவிடும்சின்னுளென்றே
தந்துணையிரண்டுபேரும் தனமொடுபணிசேயில்லும்
முந்தியமையனுலே முதித்திடுஞ்செல்வமென்றே. 24

அன்னையும்புத்திசாலி அன்புடனன்னையேவாள்
சொர்ணமும்பணிநற்றூசும் சுகம்பெறும்கணவன் தன்னுல்
தன்னுடதுணைகள்வந்து தறித்திடுந்தீர்க்கமில்லந்
தன்னுடதனயனுலே தரித்திடுஞ்செல்வமென்றே. 25

திசாபலன்

இன்னிலங்குடும்பஞ்செல்வம் இசைந்தனநவக்கோளாலே
நன்னியதிசாபலத்தின் நயந்தனையுரைக்கக்கேளாய்
மன்னியபூரம்நான்கில் மகிழ்சுங்கின் புந்திபுத்தி
தன்னிலேயுதித்தசேயின் தவமுறைகந்தர்வாக்கே. 26

புந்தியின்சிகியின்தன்னில் புகழ்தந்தைவன்னைநன்மை
தந்தையின் துணையால்நன்மை தனமுதற்க்ஷேமலாபம்
வந்திருவர்க்கத்துஷ்டம் வமைபெருதனுவில்பீடை
சுந்திரஅலதிதன்னில் சுகமுறமறப்பமென்றே. 27

தந்தையின் துணைவிரோதம் தந்தையின் துணைவன் கண்டம்
பிந்தியேதுணையுண்டாகும் பிலமில்லைசெய்யலாபம்
தந்தனுஅலுப்பப்பீடை தருவதியாறில்ராகும்
தந்தைதன் துணைவர்கண்டம் தன்துணைதனக்குண்டாமே. 28

நன்னையவித்தையோதல் நலம்பெருவர்க்கப்பீடை
மன்னியவர்க்கவட்டம் மன்னவனுனபுந்தி
தன்னிலேதுணைகள்நன்மை தனமுருஞ்செய்யலாபம்
அன்னையோபிணியால்கண்ட மடைகுவேன்தந்தையென்றே. 29

சிகியொடுசுன்னும்பானும் சிவதலம்தீர்த்தவாசம்
நகையொடுவெங்கலங்கள் நாணயந்தருவனுலே
பகைவரும்அகன்றுபோகும் பாக்கியப்பெரியோராலே
அகமகிழ்வாலேமோதும் ஆறலின்முரைப்பத்தாலே. 30

அன்னையும்வர்க்கமெட்டில் அழகியஅரிஷ்டப்பீடை
நன்னயபிரையாகத்தில் நலம்பெறசுகமுண்டாகும்
மன்னியகடககோணம் மங்களசுபமும்லாபம்
அன்னியராலேசெல்வம் அடைந்திடுமற்பமென்றே. 31

பணியொடுமன்னமைந்தன் பாக்கியம்பலவாறுண்டாம்
அணிபணியாடையுண்டாம் அழகியசேயுண்டாகி
பிணியிஞல்மனைவிகெண்டம் பின்ஞெருமனத்தைச்செய்வான்
அணிபணியெவருக்கீந்து அழகியபோகந்தவிர்ப்பான். 32

சுந்தரசேய்வந்தெய்து சுகம்பெறும்மதனுல்நன்மை
புந்தியும்சிலையுஞ்சுன்னும் புகழ்திரும்செய்யலாகும்
வந்திடுஅன்னைவர்க்கம் வரும்பினுங்கண்டமுண்டாம்
இந்தநற்பலனைக்காண யியம்பிஞர்கந்தர்வாக்கே. 33

தன்னுடதுணைவனெட்டில் தன்னுடவர்க்கேவெட்டில்
மன்னியசெய்யலாபம் மலினமாய்வழக்குதீரும்
கன்னியால்கலகமுண்டாம் கைப்பொருள்செய்யலாபம்
அன்னையும்பிணியரிஷ்டம் அருந்தவமாவர்க்கம்வெட்டில். 34

அலறியிஞலோன்ஆறல் அற்புதசெல்வமுண்டாம்
நலமிகுதுணைக்குவோதி நடந்திடமுயற்சிசெய்வான்
குலமதிலுதித்தார்கேடு கொடுமையும்துணைவிரோதம்
தலமில்லைபெரியோஞலே பிணக்கதுநன்மையுண்டாம். 35

பின்ஞெருதுணைவனுக்கு பிலமதுச்செய்யுமீவான்
அன்னையுமரிஷ்டகெண்டம் அழகியதீர்த்தவாசம்
முன்னுருபவத்தைப்போக்கி யுதித்தசேய்தீர்க்கமாகும்
மன்னவன்மைந்தன்புந்தி மாதுவும்அடைவள்கண்டம். 36

தன்னுடன்துணைவனுகும் தனக்கிருகன்னியாகும்
மன்னியவேட்டலுண்டாம் மங்களசுபமுமுண்டாம்
தன்னுடபவத்தைப்போக்கில் தனயனும்தீர்க்கமாகும்
பின்ஞெருதுணைக்குமைந்தன் பிறந்திடும்தீர்க்கமாமே. 37

சிகியொடுசுன்னும்பானும் சிலதலமுகூர்த்தவாசம்
நகையொடுவெங்கலங்கள் நாணயம்பலவாறுண்டாம்
இகல்துணைவந்துநீங்கும் எளியவன்சேய்வந்தெய்தும்
துகையதாய்தனமுண்டாகும் தூய்மதியாறில்ராகில். 38

கன்னியர்தனக்குமைந்தன் கன்னியும்வந்துதோன்றும்
தன்னுடதுணைவனுக்கு தளையதுவந்துநீங்கும்
முன்னுருபவநீக்கானுல் முதிர்ந்துணைசெய்யாநன்மை
நன்னயமைந்தன்புந்தி நற்சிகிசெய்யலாபம். 39

மைந்தனுக்கின்பம்வேட்டல் மருதுணைமைந்தன்வேட்ட
சுந்தரசுங்கன்பானு சூழ்மதியாறல்தன்னில்
சுந்தரபுதல்வனுலே சுகமுறும்செல்வமேலாம்
வந்திடுஞ்செல்வந்தன்னை வளம்பெறமகவுக்கீவான். 40

அன்னையேரிடபதிங்கள் அருந்திருசதுர்த்திதன்னில்
நன்னியசயம்விட்டாவி நற்பிதிருலகஞ்சார்ந்து
மன்னியபூமியுற்றும் மருத்துவதலத்தில்தோன்றி
பின்னையுமனேகஜென்ம மென்றுரைகந்தர்வாக்கே. 41

இந்தநற்பலனையாங்கள் யிசைந்தனம்நவக்கோளாலே
முந்தியகருமகாண்டம் முறைப்படிபவமொழித்தால்
சுந்தரன்தனக்குச்சொன்ன சுகமெலாமனுபவிப்பான்
இந்திரன்சுதலாள்நேயன் யியம்பியகந்தர்வாக்கே. 42

இரண்டாவது மேஷலக்கினம் முற்றிற்று.

சூரிய	சுக்ரன் ராகு	லக்ன குரு	சனி
சந்திர செவ்	முதலாவது ரிஷபராசி		
	புதன்		கேது

1-வது ரிஷப லக்கினம்

சந்திரன்றுறல்சாடி சார்ந்திடவிடையில்மன்னன்
புந்தியும்தேளில்மேவ புகழ்ரவிகெண்டைபற்ற
மந்திரசிகியுங்கன்னி மகிழ்பணிசுங்கன்மெத்தை
மைந்தனும்வீணைமேவி பாண்டில்சேய்தையமுற்ருல். 1

இத்தகைநவக்கோள்நிற்க யியம்புவேன்கந்தர்வாக்கு
பெற்றிடுபலன்களெல்லாம் பேசுவேன்வடதென்வீதி
சத்துளாய்வருணனேக்கம் சார்ந்திடுமில்லாமாது
வித்தகன்பலன்களெல்லாம் விளம்புவேனின்னூல்தன்னில். 2

பிறந்ததுபேருராகும் பேசுவன்பலதெய்வங்கள்
சிறந்திடுமிடத்தில்வந்து சேய்களுமாண்பாலாகும்
குறைந்திடாகுலமேதன்னில் கூறுவேளாளனுகும்
மறைவிலாப்பரீட்சையோடு மகிழ்ந்துகேள்கந்தர்வாக்கே. 3

பாலகன்சன்னயோகம் பரிந்திடுந்தந்தையோகம்
சீலமாமன்னேயோகம் சிறந்திடுமவன்முன்ஜென்மம்
கோலமாம்பலன்களெல்லாம் கூறுவேனின்னூடன்னில்
வேலவன்வாக்கிதென்று விபரமாய்கேட்டிடாயே. 4

வேறு விருத்தம்

சொல்லுவேன்கொச்சிதனில் சூத்திரனுகும்
சுந்தரனுமாலயத்தை புதிக்கிவைக்க
கல்லில்லாவெகுமனுக்கள் சொத்துஞ்சேர்த்து
கனமூள்ளபாலனிடம் நம்பவைத்தார்

அல்லலாந்திருப்பணிக்கு கொஞ்சமீந்தான்
அழகானசிலபொருளை யபகரித்தான்
வல்லமையாயிருந்ததொரு பேரினாலே
வயன்விதியைபகறலுற்றார் கந்தர்வாக்கே. 5

கண்டுமேமுன்ஜென்மம் விஸ்வனாக
காசினியில்தான்பிறந்து கவலையுற்று
அண்டிவந்தபேர்களுக்கு பணிந்துசெய்து
அதனாலுஞ்சீவனங்கள் செய்துகொண்டு
வண்டாடுங்குழலுடைய பாசனாறை
மனதடக்கிமூன்றுதினம் தவமேச்செய்து
சென்றிருந்ததேசாதி தேசமெல்லாந்
சுத்தியெங்தம்நடுவணையுந் தேறித்தேற்றி. 6

ஏற்றியேதானிருந்தாற் பதவியாவான்
எழிலானபாலகனே போபோவென்றான்
வேற்றுமைகளில்லாத பூமிவந்த
வெகுளிதான்பாலகனு மிவள்தானப்பா
சாத்திரத்தைவேணபடி யுகந்துபார்த்து
சற்குணனுமிருஜென்மங் கழித்துவிட்டான்
நேத்தியுள்ளயிச்சென்ம மந்தமாகும்
நினைவில்லாமறதியுமே யிவனுக்குண்டு. 7

உண்டானபோதிலுமே குற்றமில்லை
உண்மையுள்ளவாதார மறிந்தானானல்
பண்டுசெய்தவினையெல்லாம் நீங்கும்நீங்கும்
பார்த்திபனாற்பூசையது செய்யவேண்டும்
அண்டர்தொழும்படியில்லம் வேலும்வைத்து
அழகானசண்முகனை பூசைசெய்தால்
சென்றுவரும்ஹூழெல்லாம் நிவர்த்தியாகும்
சிதறாதுவுன்குடும்பம் வாழ்வுமுண்டே. 8

தந்தைக்குதாரமது யிரண்டுண்டாகும்
சற்குணவான்பின்தாரம் புதல்வனப்பா
முந்தியேயிருதாரம் புதல்வர்சேதி
உறுதியுமேயெந்தன்மனம் ஒப்பவில்லை

கந்தியுமேவெகுபாவஞ் செய்தானுகும்
கருத்ததினலவன் குறிப்பை கண்டுகண்டு
சிந்தையிலேயிவனுடைய குடும்பந்தன்னை
செப்புகிறேன்யெந்தன்மனக் கந்தர்வாக்கே. 9

குடும்ப பலன் - வேறு விருத்தம்

இன்னவன்தந்தைவர்க்க மெடுத்துநானுரைக்கக்கேளு
நன்னயமாகவேதான் நாட்டுவேன்வாண்பால்ரெண்டு
மன்னியகன்னியொன்று மரிகிடுமென்றுசொல்லு
வன்னியயிதற்குமேலால் வன்புடன்ஜெனித்தபோதும். 10

உன்னியேநிலைத்திடாது உரைப்பனேமேலுங்கேளே
இன்னவன்தந்தைதீர்க்க மியற்றுவேன் துணைபாகத்தை
சொன்னதோராண்பாலைந்து துலங்கிடுங்கன்னியைந்து
மன்னியேதீர்க்கமாகும் வழுத்துவேன்சின்னுள்நஷ்டம். 11

சாதகன்தீர்க்கமாகும் சாற்றுவோம்நிறங்குணத்தை
யேதவேயிருசிகப்யன் யெழிலுளசமேதகத்தன்
போதவேநிகக்ஷியில்லான் புகன்றனன்மேலுங்கேளே
ஆதியாந்தெய்வபக்தி யணிந்திடுமென்ருர்கந்தர். 12

பிந்திநாள்பெரியோர்நேயம் பெருகிடுமெவற்குநண்பன்
விந்தையாம்வார்த்தைகூர்வன் விளக்கமாமனத்தனுவன்
எந்தலேவன்னையர்நேச மிலகிடும்நல்லோனுலே
சந்திரன்காந்தியுள்ளாய் சாற்றுவேன்தளர்வேதாந்தம். 13

வித்தையும்பலிதமாகும் விளங்கிடுமன்னியபாஷை
புத்திரவதனங்கூற குணமுளவதனனுகும்
நத்தியேவருவோர்க்கன்னம் நாடியேவளிக்கவல்லான்
வெத்தியாங்காரியத்தில் விளங்கியேசனிப்பானுமே. 14

சித்துண்டிபிரியனுகும் சிறந்திடும்பெரியோர்நேயன்
நத்திலக்கபடந்தோற்றுன் நங்கையர்மோகனுகும்
பத்தியேலோகனுகும் பார்க்கின்றதுணைவர்கட்கு
சித்தமாம்யோகம்வாக்கும் செப்பியகந்தர்வாக்கே. 15

தேவதாபத்தியுள்ளான் கிருத்தவர்க்குதவிசெய்வான்
ஏவலர்சயனமெத்தை யெழில்மஞ்சமிவனுக்குண்டாய்
நாவலர்முதலாயுள்ள நற்றமிழுணர்ந்தோர்க்கன்பன்
ஆவலாய்ஞானந்தேற வணுகிடும்பெரியோர்நேயன். 16

அரசனின்மூலத்தாலே மணிபலயினத்தினுலும்
குறைவிலாதொழிலும்வாக்கும் கோளேகேள் நிதிமென்மேலாய்
தரமுடன்கீர்த்தியெய்தி தழைத்திடவாழ்வானுகும்!
அரந்தனின்சுதனுய்வந்து வரைந்திடுங்கந்தர்வாக்கே. 17

இத்தகையுடையோனுகு யியற்றுவேன்மணத்தின்காலம்
சத்துளாய்நாலேழாண்டில் சார்ந்திடும்யாழின்கோணம்
வெத்தியாயுதித்தாடன்ணே வித்தகன்மணமேகொள்வான்
அத்திமாமுகனுக்கிளேய வறுமுகன்கந்தர்வாக்கே. 18

கொண்டிடுமாதுக்கேதான் கூறிடும்புத்ரவிர்த்தி
விண்டிடுமாண்பால்ரெண்டு விளங்கிடுபெண்பால்மூன்று
அண்டியேதீர்க்கமாகு மருளினேனிதற்குமேலாய்
மண்டியேசெனித்தபோதும் மரிவிடாதென்றுசெப்பே. 19

காசியில்சுருக்கஞ்சொல்ல கண்டிடுஞ்சபையோர்தன்னில்
தேசிகவிஸ்வாமித்திரர் செப்புவாரதிலோர்சங்கை
மாசிலாதுமதுவாக்கு வழுத்தினீர்புத்திரதீர்க்கம்
பாசமாம்பஞ்சமாதி பகருவீர்கந்தரென்கோன். 20

சனியவன்மூன்றில்நின்று சார்புடன்நோக்கலாலும்
இனித்திடும்பஞ்சமத்தி லிணங்கியசிகியும்நின்று
கொனித்திடும்மதியுங்காரி குணமுளவரவுநோக்க
சனியனுமஷ்டமாதி காலகந்தன்னேநோக்க. 21

இப்படிபுத்ரர்பாகம் யியற்றியேவருவதென்றூர்
ஒப்பியேயவர்கள்தாமும் ஓதுவர்மூன்னூழி
செப்பியபாலனுக்கு சேர்ந்துமேயிருப்பதாலும்
இப்படிகந்தர்வாக்கை விரித்திடயின்னங்கேளே. 22

இன்னவன்மனைவியோடே யெழிலுளபழநிக்கேகி
நன்னயத்தீர்த்தந்தோய்ந்து நலமுளவறுமுகர்க்கு
சொன்னதோரசிமந்தன்னுள் தோர்விலாவேலுசாத்தி
மன்னியவதிதிக்கன்னம் வளமுடனளித்துப்பின்னும். 23

வேலனைப்போற்றிசெய்து விளங்கியவுள்ளூர்மீண்டு
சீலமாம்சஷ்டிநோம்பு திறமுடன்பஞ்சவாண்டும்
கோலமாயனுஷ்டிசெய்தால் கூறியபுத்திரபாக்யம்
ஏலவேதீர்க்கமாகு மியம்பியமனைவிதீர்க்கம். 24

இவ்விதச்சாந்தித்தன்னை யிளவலுமனிஷ்டிக்கானேல்
ஒவ்வியமனைவிதோஷம் உரைத்திடும்புத்திரதோஷம்
பவ்வமாய்வந்துதீரும் பகரியமொழிதன்றுது
திவ்வியமானகந்தர் தெளிவுறும்வாக்கிதாமே. 25

இன்னவன்யோகச்செய்கை யியற்றுவேனினிமேலாக
மன்னியசனனந்தொட்டு வழுத்துவேனொருபதாண்டும்
சொன்னனேயிதற்குயோகம் துலங்கிடும்நயமதாக
பொன்னனேயானுஞ்சொன்ன புகழ்பெருங்கந்தர்வாக்கே. 26

அதுமுதலோரைந்தாண்டு மருளுவன்பாலனுக்கு
விதியுளவித்தைலாபம் விர்த்தியாம்பிதுர்க்குநன்மை
சதியதுவடைந்தபோதும் சாந்திடானிவர்த்தியாகும்
கதியுருமியாவுநன்மை கழருவேன்கந்தர்வாக்கே. 27

செப்பியவாண்டின்மேலாய் சுகமுளவொருபதாண்டும்
தப்பிலாகந்தர்வாக்கை சாற்றுவேன்பத்தையோகம்
ஒப்பியபலயீனத்தால் வுரைத்திடுஞ்சமயோகந்தான்
வெப்பமும்லகுவிலுண்டு விளங்கிடானிவர்த்தியாமே. 28

சாத்தியவாண்டின்மேலே சாதகன்றனக்குயோகம்
போற்றியவொருவதாண்டு புகமுளவரசராலும்
தோற்றிடும்பலயீனத்தால் சுகபலன்விர்த்தியுண்டாம்
நாற்றிசைசென்றபோதும் நாடியகீர்த்தியோங்கும். 29

மறுதேசம்சென்றுயின்னேன் மருவியவரசமூலம்
திருவுளபலயீனத்தால் செய்குவான்ஜீவனங்கள்
உறமுளபதனுலாபம் உரைந்திடுமின்னேனுக்கு
பிரபலங்கீர்த்திமேன்மை பெருகிடுமென்றுசொல்லே. 30

சொல்லியவாண்டின்மேலாய் சுந்தரனையுள்மட்டும்
வல்லனேயத்தயோகம் வளமுருமியாவுநன்மை
அல்லலுமிவனுக்கில்லை அணிதனம்விர்த்தியுண்டாம்
தொல்லையொன்றடைந்தபோதும் துலங்கிடாதென்றுசெப்பே. 31

பாக்கியத்ததிபனுன்னேன் பத்தியேதனத்தில்நின்று
ஆக்கியதனத்தினுதன் அற்புதனுதையம்நிற்க
தாக்கியகாதிபன்ருன் தரித்திடும்லாபமேற
போக்கியலக்கினுதி புகன்றிடுமாட்சியாக. 32

இத்தகைநவக்கோளிவ்வா றிருப்பதால்பாலனுக்கு
சித்தியாம்பலத்தயோகம் சேர்ந்திடும்பணிதிபாத்ரம்
வெத்தியாமென்மேலாக விளங்கிடும்பலத்தயோகம்
அத்திமாமுகனுக்கிளைய வறுமுகர்கந்தர்வாக்கே. 33

பிரபலங்கீர்த்தியோங்கும் பின்வெகுநிதியுஞ்சேரும்
அரசனின்மூலத்தாலும் மனுகியபலயீனந்தான்
திரவியம்வந்துசேரும் தீங்கதுயாதுங்காணேம்
அரன்தனின்சுதனுய்வந்த வறுமுகர்கந்தர்வாக்கே. 34

அற்பமாம்பலன்களெல்லா மனேகமாய்வந்தபோதும்
சொற்பமாய்நிவர்த்தியாகும் சொல்லுவேனிவனுக்குக்கண்டம்
விற்கரங்கொண்டகோனே வித்தகனீராருண்டில்
சொற்பமாம்பதவியாவன் சொல்லுவோம்தந்தைகாலம். 35

அதுமுதலீராருண்டு அற்புதன்தந்தைமாய்வன்
விதியுறும்பாலனுக்கு விளம்புவேன்சிறுகெண்டங்கள்
கதியுடன்வந்தபோதும் கழறியபண்டிதத்தால்
சதியிலானிவர்த்தியாகும் சாற்றுவேனிவனுயுள். 36

அறுபத்தியெட்டாமாண்டி லரிமலியெட்டாமாண்டு
பெருகியஉடலம்வாடி பொன்னவன்பதத்தில்சேர்ந்து
மருகியபோரூர்பக்கல் வளமுளசித்துரொன்று
திருவுளவாயானுக ஜெனித்துமேவாழ்வானுமே. 37

		லக்ன குரு ராகு	செவ்
புதன் சூரிய சந்ரன்	2 - வது ரிஷபராசி		
சுக்ரன்	கேது		சனி

2-வது ரிஷப லக்கினம்

சந்திரன்அலரிபுந்தி சாடியில்கன்னிமைந்தன்
சுந்திரமன்னன்ராகு சூழ்விடையாறல்வீணை

மந்திரசிகியன்தேளில் மகிழ்சுங்கன்தனுவில்நிற்க
இந்தவார்நவக்கோள்நிற்க யிலக்கினவிடையிலுதித்தால். 1

வீதியும்வடக்குதெற்கு விளங்கிடும்சுணங்குவாசல்
ஓதுவோம்ஒருபாலில்லம் உயரில்லாகூரையென்ப
மாதெனும்கன்னிவில்லில் மருவிடும்சத்திசூழி
வாதுருகாரியாணே வளமிலாதீசன்மாதா. 2

இந்தநல்லடையாளங்கள் யிலகியசித்தூர்தன்னில்
முந்துசெய்தவத்துவேளான் றுதவியபுதல்வனின்னேன்
முந்துசேய்பவத்தைதானும் மொழிகிறேம்சோழனுட்டில்
செந்திருவணங்குமாதே செப்புவேன்கந்தர்வாக்கே. 3

முன்னவனிருந்தஜென்மம் மொழியுறேம்சோழநாட்டில்
மன்னியமறையோனுகி மறைமொழியொழுக்கந்தேரு
இன்னிலத்தெவர்க்குந்தேசு யிணங்கிடமணிபொன்னுலே
உன்னிததனங்களாலே உயர்நிதிதனக்குமாகி. 4

இல்லிடத்திருந்துவப்பு யிருந்திடவனேகஞ்செம்பொன்
புல்லிடக்கீர்த்திமிக்க புரவலன்தன்னைப்போலே
யல்லலற்றிருக்கும்நாளி லிவன்பாவம்துடர்ந்துவந்து
சொல்லிடக்கந்தர்நாடி சோதிடங்கேட்டிடாயே. 5

மாதவர்புதல்வனுலே வாக்குறபிசாசனென்று
சூதறவரசநீந்தி சுதன்தனைவனுவழைத்து
போதுரைப்பவளும்வாணி பொன்னடிக்கேவல்செய்யும்
வேதங்கள்தேடிக்காணு வெண்பொடியணிவான்ருகம். 6

சங்கரிக்கினியநாகா பரணமுஞ்சமைக்கச்சொல்லி
இங்கிதமணிகளெண்ணி யிவன்கையில்துகையாயீந்து
பங்கமொன்றனுகாவண்ணம் பார்த்தபெண்கொடுவாவென்ன
அங்கதையகர்ச்சாலேக்கு ராகுறவிருந்துபொற்பு. 7

மிஞ்சியபணிதியென்று விநேதமாய்செய்யும்போது
மிஞ்சொலிரத்தினத்தில் விளக்கொளிபோலேவொன்றை
நெஞ்சுறவபகரித்து தினமணியொன்றுவேருய்
வஞ்சகம்செய்தமைத்து மன்னவன்செய்கையீந்தான். 8

அங்கதைவாங்கிமன்னேன் அன்னைக்கிவன்பாய்சாற்றி
பங்கயமலரைப்போற்றி பரிந்தனங்குளிர்ந்தானப்பால்
இங்கிதமணிக்கியாசை யிசைந்ததையெடுத்துப்பாவம்
தங்கியமதனைத்தன்னை தானதுருழ்ந்துவாழ்வான். 9

வேறு விருத்தம்

பங்கமுறும்ஆவியது நரகம்புக்கி
பலதுன்பம்பட்டதிலும் பலநாள்போக்கி
பங்கயத்தின்வதிபிரம ணிலக்கம்புக்கி
பாரதனில்இப்பிறவி பலிதமாகி
தங்கியிந்தசுதனாக வருவாயென்று
சாற்றுமொழிபெற்றுவந்தோ மிவனேயிந்த
திங்கள்முதற் சுதனெனவும் செப்புகின்றோம்
தெரியவேஉரைத்திட்டேன் கந்தர்வாக்கே. 10

விடம்பயின்றான்மணியிச்சை வைத்ததோழன்
வினந்திவனையிச்சென்மம் செப்புங்குற்றம்
விடந்தப்பிவேறிடத்தில் உதிக்கச்செய்யும்
எழில்தந்தைசெய்தனமும் யிணங்கலற்பம்
செடந்தனிலேவாயுவினால் மேகமுண்டாம்
சஞ்சலங்கள்மிகவுமணி மிணங்கற்றேபம்
துடந்துபத்தீராலதற்கு சுருதிசொல்வேன்
தோகைமயில்வாகனனாற் கயிலைக்கேகி. 11

இரத்தனிறசந்தனத்தால் தயிலஞ்செய்து
இருவருக்குமொருநாளில் முடிக்கொப்பாட்டி
செங்கநிரைப்பட்டாடை மேல்நிரைத்து
செழுந்தங்கம்ரத்தினத்தால் வேல்நிறுத்தி
அங்குறையும்அதிதிகட்கு அன்னமீந்து
ஆண்டுரெண்டுமவன்பதிக்கு யேகுவானேன்
சங்கையறும்பவம்போகும் மகவுஞ்சேயும்
சகலகுணசம்பனனும் வாழ்வான்பாரே. 12

இந்தவகைசெய்யாம லெதுசெய்தாலும்
இப்பிணியும்தீராது பவந்தீராது
வந்தசுதன்குடும்பபலன் ஆதியந்தம்
வகிக்கிறோம்கந்தருட வாக்கைக்கேளு
தந்தைதுணையினத்திற்கும் ஆணையொன்று
கன்னியொன்றும்மற்றதையும் கழறக்கேளே
தன்துணைகளாண்மூணு கன்னிரெண்டில்
தான்திறமாய்ஆணிரண்டு பெண்பால்ரெண்டே. 13

நல்லகுணமுடையனுமாம் சிவந்தமேனி
நளினமுகம்சமதேகம் நாரியற்பம்
சொல்கிறதுமிகயெதுவும் பிரட்டிராது
சுயமதியால்சிவசவ்யச் சுதனென்றேது
வல்லமையும்சமத்துமிக உடையோனுகும்
வருங்கீர்த்தியுடையனுமாம் நிதிகையுண்டு
அல்லலொன்றுமணுகாது பிரபாகத்தில்
அரசனுடதயவதினுல் அதிகயோகம். 14

போசனத்தில்அற்பவுண்டி மதுமேலிச்சை
புகழ்வித்தைநடைபரியும் வண்டியுண்டு
மாசகலக்கிடைக்குமது பிதுர்நாடாண்டு
பொக்கலேமிக்கானமது வாஞ்சையோடு
நீசரறசாக்ஷிசபை நேயந்தேர்வான்
நிருபனுடதயவதனே நிலேக்கப்பெற்றேன்
தேசுடையசிவனடியை சிந்தையோடு
தெரியஉள்ளத்திருத்திதினம் புரிவான்பூசை. 15

செய்நன்றிக்குன்ருதான் தீரன்புத்தி
செகத்திலொருபெரியோரை சேர்வான் உண்மை
கையில்வடிவேலுடையான் கருத்திற்கொள்வான்
கணம்பெரியபெரியோர்க்கும் கருத்தாயீவான்
மெய்பணியும்தார்செய்யும் மிகவேசேர்ப்பான்
மேலானபெரியோர்கள் தயவுண்டாகும்
பொய்புரட்டுக்குரியாரை நேயங்கொள்ளான்
பொறுமைமிக உடையனெனப்புகலலாமே. 16

மனக்கவடநடந்துவெல்லா ரில்லஞ்செய்வான்
வருந்துணேவிமணமொன்று சேயன்ரெண்டு
இனமதில்கீர்த்தியுண்டாம் இரக்கநெஞ்சம்
எப்போதும்ராஜசபைக் குரியோனுவான்
தனமுடையன்மறைபெரியோற் கன்னமீய்வான்
தந்தைபுகழ்பணிதிசெய்யும் பொருளுமற்பம்
இனமுடையோர்துணேவுண்டு இரக்கநெஞ்சம்
ஈன்றவன்னேகற்புடையாள் இன்சொல்மிக்காள். 17

அரசனிற்பக்கஞ்சார்ந்து அயந்திநிலக்கந்தீர்ந்து
படியொடுதந்திகாலாள் பாவலர்பல்லோருக்கும்
குறைவறவன்னமீய்ந்து குவலயமெச்சவாழ்வான்
விரவதாய்யிந்தலக்கம் விளங்கவும்செய்வல்லோனே. 18

மங்களவாரஞ்சஷ்டி வளமிகுகார்த்திகைக்கு
இங்கொன்றுகூடுவாரம் மின்புறநாதன்பூசை
சங்கையில்லாமற்செய்தால் சடத்தினேயெல்லாந்தீரும்
சங்கரனருளினாலே சம்பத்துமிகவுண்டாமே. 19

அன்னைகேள்மனைவிதன்னால் ஆடையாபரணமுண்டாம்
பொன்னொடுசெய்யுமுண்டாம் புகழ்மணந்தந்தைதன்னால்
நன்னயவெங்கலங்கள் நலந்தரும்பெரியோராலே
மன்னியவேலையேர்வான் மானிதியுண்டாமென்றே. 20

வித்தையில்புராணநூலில் விளங்கிடான்கேள்வியுண்டு
சத்தியமென்றுலச்சம் தான்கொள்வான்வீணனெல்லாம்
புத்தியில்கீர்த்திவானேன் புகழ்பெறயெவற்தநல்லோன்
வெத்தியாம்தொடுவழக்கு விசுவாசமுள்ளனுமே. 21

தன்கையும்மரசுசார்ந்து தனமொடுசெய்யுமில்லும்
வந்திடும்பணிதான்லாபம் வண்டியும்பரியுமுண்டாம்
செந்திருகடாட்சமுள்ளோன் செப்புவன்மொழிகுன்றுது
சந்ததமரசுசார்வான் சாந்தமாம்குணமுள்ளோனே. 22

அன்னையும்புத்திசாலி அன்புடனன்னமீவாள்
சொர்ணமும்பணிதியாவும் சுகம்பெறுங்கணவனாலே
தன்னுடதுணைகளைந்தில் ஆண்மூன்றுகன்னிரெண்டு
தன்னுறுமகவுந்தீர்க்கம் ஆண்ரெண்டுஅரிவைரெண்டே. 23

முன்னொருமூத்தோனுக்கு மொழிந்திடுமனைவிமைந்தர்
பொன்னொடுமுன்னுள்வாழ்வான் புகழில்லைபெருமையில்லை
முன்னிறுபின்னோனுக்கு மூழ்வினைபிரமசாரி
கன்னிகள்இரண்டுபேரும் கணவனால்சிலநாள்வாழ்வர். 24

திசாபலன்

இன்னிலங்குடும்பசெய்கை யிசைந்தனஙவக்கோளாலே
நன்னியதிசாபலத்தின் நயந்தனையுரைக்கக்கேளாய்
மன்னியசதையம்ரெண்டில் மகிழ்பணிபுந்திபுத்தி
தன்னிலேயுதித்தசேயின் தானுரைகந்தர்வாக்கே. 25

புந்தியும்சிகிசுன்பானுள் புகழ்தந்தையன்னை தன்மை
சுந்தரவரசன்தன்னால் சுகமிகுகனமுண்டாகும்
பிந்தியதுணையுண்டாகும் பெரும்புகழ்லக்கந்தன்னால்
வந்திடுசுபாசுபங்கள் வர்க்கத்திலுண்டாமென்றே. 26

சந்திரனுறல்மன்னன் சார்ந்துமுன்துணைக்குவேட்டல்
தந்தையாலதிகயோகம் தனபதிதன்னால்நன்மை
வந்திடுவித்தையோதல் வளம்பெறுமூத்தோனுக்கு
சிந்தையுமகிழகந்தர் செப்பிடுவார்த்தைகேளே. 27

புந்தியுஞ்சிகிசுன்பானும் புரவலன்தன்னால்யோகம்
தந்தைக்குயரிஷ்டகெண்டம் தந்திடுமறவோனாலே
முந்தியதுணைக்குகெண்டம் மொழிபிதுர்வேலைதன்னை
மந்தனும்பெருவானாதும் மகிழ்ந்துரைகந்தர்வாக்கே. 28

சுந்தரபணியுமந்தன் சுகமிகவருக்குகெண்டம்
புந்தியின்சிகிசுன்பானும் புரவலன்தயவினாலே
தந்தையின்குணபாலாக தன்னுடயினத்தோன்கன்னி
சொந்தமாய்பணிகளிந்து சுகம்பெறுமணங்கள்செய்வான். 29

வந்துமாதுலனால்யோகம் வளம்பெறுமுற்பாகத்தில்
சந்திரனுறல்ராகு சாற்றுவீறரிஷ்டகெண்டம்
முந்தியதமையனுக்கு முதாரத்தில்வாய்வால்பீடை
வந்தனமனையாளுக்கு வளம்பெறமகவுண்டாகும். 30

தன்னுடமனையாளுக்கு தந்தையால்பணியுஞ்செய்யும்
சொர்னமுகர்ப்பமுண்டாம் சுகமுறும்பெரியோனாலே
மன்னியயில்லஞ்செய்வான் மங்கள அணைக்கரிஷ்டம்
பின்னுறும்பெரியோனாலே பிலனுறும்பலனுண்டாமே. 31

மன்னவன்புந்திகேது மகிழ்விளையடைவன்கண்டம்
தன்னுடமன்னைதந்தை தருமுபகாரங்கொள்வன்
அன்னவள்மதலிசேர்வாள் யருந்துணையொன்றுகண்டம்
மன்னனால்கலகமுண்டாம் மாந்தர்கள்தன்னால்நன்மை. 32

சுங்கனுமலரிமாலோன் சுகங்களுமைந்தருக்கு
மங்கையும்வந்துதோன்றும் மகிழ்துணையோனுங்கண்டம்
இங்கிதபெரியோனாலே இனமுறும்வேலையுண்டாம்
வெங்கலம்பணிதிசெம்பொன் வியப்புறுமைந்தருண்டாம். 33

ஆறலுமறவுமன்னன் அற்புதசெல்வமுண்டாம்
சீர்பெறுமகவுவேட்டம் சிற்றிடைமங்கைவேட்டல்
காரமுமரிஷ்டபீடை தையலாள்தனக்கரிஷ்டம்
பேர்பெறும்பெரியோனாலே பிலமுறும்லாபமுண்டாம். 34

மைந்தனில்தேகவாதை மாறகப்பீடையெய்தும்
சுந்தரக்கோள்களேகும் சூழ்சிகிதிசையதன்னில்
சிந்துவும்சிவாலயங்கள் சிவபக்திமிகவுண்டாகும்
மைந்தனால்யோகமுண்டா மகிழ்ச்சியுஞ்செய்யலாபம். 35

வந்திடுமைந்தன்யோகம் வளமவன்குறிப்பில்சொல்வோம்
தந்தனுபித்தவாய்வு தனுவதிலவத்தையுண்டாம்
சிந்திடுகடாட்சித்தின்பம் சிறுவணையடையலாகும்
வந்திடும்பூமியில்லம் வாங்கிடும்நிதிக்குயற்பம். 36

இந்தநற்செல்வமெல்லாம் யெழுலுளமகவுக்கீந்து
மைந்தனும்யோகவானாய் மகிழ்ச்சியையடைவானாகும்
முந்தியதலம்விட்டேகல் முதிர்தனங்கொடுக்கல்வாங்கல்
பந்துவாலதிகநன்மை பெற்றிடுமைந்தர்க்கென்றே. 37

அன்னமேதேளின்திங்கள் அமைந்திடுமேகத்தேசி
மன்னியசடம்விட்டாவி மகிழ்கனலோகமெய்தி
பின்னையும்பூமியுற்று பிரபலசேயனாகி
மன்னியங்கிருப்பன்சிலநாள் மறுபடியுதிப்பானென்றே. 38

இந்தநற்பலனையாங்கள் யிசைந்தனன்நவக்கோளாலே
முந்தியகருமகாண்டம் முறைப்படிபவமொழிந்தால்
சுந்திரன்தனக்குச்சொன்ன சுகமெலாமனுபவிப்பான்
இந்திரன்சுதலாள்நேயன் இயம்பியகந்தர்வாக்கே. 39

2-வது ரிஷப லக்கினம் முற்றிற்று.

	புதன் சூரிய சுக்ரன்	குரு	லக்ன சனி
ராகு	1 - வது மிதுனராசி		
	செவ்	கேது	சந்திர

1-வது மிதுன லக்கினம்

சந்திரன்கன்னிமேவ சார்ந்திடவிடையில்மன்னன்
மைந்தனும்வீணபற்ற வாறலும்தேளில்நிற்க
புந்தியுமலரிசுங்கன் புகல்தகர்பணிலோன்சாடி
மைந்திரசிகியுந்துலேயில் இலக்கிணங்கவிஞ்சையுற்றால். 1

விதியும்வடக்குதெற்கு விளங்குமில்குடைக்கின்பார்வை
ஆதியாம்பலதெய்வங்க ளமர்ந்திடுஞ்சமவூர்தன்னில்
நீதியாயிந்தபாலன் நிறைவுடன்சனிப்பதென்று
காதலாள்வள்ளிமோகன் கந்தரின்வாக்குத்தானே. 2

இன்னவன்சனனயோகம் எழிலுளதந்தையோகம்
சொன்னதோறன்னையோகம் துலங்கியயிவன்முன்சென்மம்
நன்னயப்பலங்களெல்லாம் நாட்டுவேனின்னூல்தன்னில்
அன்னவன்முந்திநாளி லமர்ந்திடுஞ்செனனஞ்சொல்வேன். 3

வேறு விருத்தம்

பேசுவேன்இவன்முன்ன மிருந்தசன்மம்
பிரயாகையெனுந்தீர்த்த நதிக்குதென்பால்
தேசுகொளுமூவுதைய லிங்கனூறில்
சிவயோகஞானிகட்கு தொண்டனாகி
பூசைபுரிவணிகனிவன் னிவனோர்க்காளாய்
புகுந்துநெடுநாள்பணியா லூழைநீக்க
ஆசையொடுபல்நாளு மன்பாலோர்ந்து
யனுதினமுமவர்க்கடிமை யானென்றுன்னி. 4

இனியுலகிலணைவயிற்றி லெளியோன்புக்கி
இச்செடிலமெடுக்காம லடியேன்றன்னை
தனியொளியைதெரிசித்து வினையை நீக்கி
தந்தருளுங்கிருபையெனச் சரணம்போற்ற
முனிவனிவன்செய்கையெலா முற்றுமோர்ந்து
மோர்கலையுமொழியாது சனனந்தன்னில்
மருவழியிலினிப்பிறவி வந்துதோன்றும்
வரும்வழியையுரைக்கக்கேள் கந்தர்வாக்கே. 5

இச்சென்மமொழியாது பிறவிதானும்
இனிபிறவிஞானவா னாகனீண்டி
நிச்சயமாய்நீபிறந்து விவேகமுற்று
நெறிமுறையேகடமுறையில் ஞானம்பெற்று
உச்சிதமாய்ஞானவெளி யுறைவாயென்னும்
உபதேசமப்போதே யுகந்துகூறி
மெச்சிவந்தகாளையவ னிவனேயப்பா
விளம்புகிறேன்வசியதலச் சேயென்றோதே. 6

இந்தவிதம்வரும்பால னிச்சென்மத்தில்
இலகிவரும்பலன்களெலா மினிமேற்சொல்வேன்
வந்தவனின்குடும்பபல னுரைக்கக்கேளு
வாகுடையதந்தைவர்க்க மாண்பால்ரெண்டு
விந்தையுளகன்னியுமே வொன்றுநிற்கும்
விளக்கினேன்இதற்குமேல் சனித்தயோகம்
ஏந்தலேதீர்க்கமாம் சனித்துவாழ
இயம்பினேன்இவன்துணைக ளாண்பால்காணோம். 7

வேறு விருத்தம்

வந்திடுங்கன்னியொன்று வழுத்தியகந்தர்வாக்கு
சிந்தையிலிதற்குமேலாய் செழித்திடபலத்தைக்காணோம்
விந்தையாயிவன்தந்தைக்கு விளங்கிடுமனைவிரெண்டில்
ஏந்தலேமறுமாதீன்ற மெழில்சுதனிவனேயப்பா. 8

பாலகன்தீர்க்கமாவன் பகருவேனிறங்குணத்தை
சீலமாமிருசிகப்பன் சிறந்திடும்சமதேகத்தின்
ஏலவேநீட்சியுள்ளான் இன்சபைபிரியனாவன்
சாலவேயெவர்க்குநண்பன் சரசவானென்றுகூறே. 9

மனமதுவழுத்தமுள்ளான் மங்கையர்மோகனுகும்
இனமதாய்பேசவல்லா னிவன்தெய்வபக்தியாவன்
நனிமையாமற்பப்பொய்யன் நல்லடக்காயுநேயன்
தனிமொழியுடையவேந்தே சாற்றுவேன்கந்தர்வாக்கே. 10

முந்தியகோபியாவன் முதுநூலில்கொஞ்சந்தேர்வான்
தந்திரங்கொஞ்சமுண்டு தயிரியவானுமாவன்
சுந்தராவணிபமூலம் சோர்விலாபலிதமாகும்
பிந்தியகாலந்தன்னில் பிரபலயோகவானே. 11

அந்தணர்தெய்வபக்தி யனுதினங்கருத்தில்கொள்வன்
வந்திடாகடினவார்த்தை வன்மமுள்ளோனுகும்
சுந்தரக்குழவிதோழி தோகைமேல்பிரியனப்பா
இந்திரன்சுதலாள்நேயன் இயம்பியபலனேக்கேளே. 12

வாணிபச்சமர்த்தனுகும் வளமுறுமன்னைபக்ஷம்
ஆணிபோல்பொருளுஞ்சேரும் மற்பலமுடையானுகும்
பேணியேபசித்தோர்க்கன்னம் பெட்புறவளிக்கவல்லன்
காணவேசெங்கைதன்னில் கருத்திடும்ருத்திரரேகை. 13

தந்தமும்தவளம்போலாம் தரித்திடுங்கரங்கால்தானும்
வந்திடும்சமமாய்நிற்கும் வகையுறும்நாசிகூர்மை
சுந்தரன்சொகுசனுவன் தொகுத்திடும்ருத்திரரேகை
இந்திரப்பதிபோல்செல்வ மிலகிடுமிவனுக்கென்றே. 14

பலபலமனுக்கள்நேயன் பாரினில்கீர்த்திவானும்
குலவியவரசர்க்கன்பன் கூர்விழிசமமாய்நிற்கும்
கலகங்களடைந்தபோதும் கருதியேசெயிக்கவல்லான்
நலமுறுமனத்தனென்றே நாட்டுவாருலகுமாண்பர். 15

இன்னெறியுடையானுக்கே யியற்றுவேன்மனத்தின்காலம்
பொன்னனேயீரொன்ருண்டுள் புவியறியுதித்தமாதை
சொன்னனேவதுவைசெய்வன் துலங்கிடுமம்மாதுக்கு
நன்னயப்புத்திரவிர்த்தி நாட்டிடுங்கந்தர்வாக்கே. 16

புத்திரவிர்த்தியாண்பால் புகன்றவுன்மூவராகும்
சத்தியபெண்பாலாவார் சார்ந்திடுமென்றுசொல்லு
வைத்ததுபலமதாகும் வழுத்தியமொழிகுன்ருது
அத்திமாமுகனுக்கிளைய வறைந்திடுங்கந்தர்வாக்கே. 17

சுத்தியாங்கந்தர்வாக்கு சொல்லதுபிசகாதென்றும்
சித்தியாம்வதிஷ்டர்தானும் செப்புவாரதிலோர்சங்கை
வெற்றிவேல்கையோனெங்கள் விளம்பியபாலனுக்கு
புற்றியேபுத்திரபாகம் புகலுவீர் தீர்க்கமாக 18

பஞ்சமத்திடையகோனும் பரிதிமாலதனைச்சேர்ந்து
பஞ்சமாம்பூமனில்லில் வளமுடனிருந்ததாலும்
மிஞ்சியேகாரகன்றான் யியற்றினிலிருந்துசேயும்
துஞ்சமாய்நோக்கலாலும் சொல்லினீர்புத்திரதீர்க்கம். 19

பாலன்முன்மூன்றுஞ்சென்மம் பரத்தையர்போகந்துய்த்து
சீலமாமதனால்வந்த சிறப்புளக்கருவைமாய்த்து
கோலமாதோஷந்தானும் குறுகிடாதிருப்பதாலும்
ஏலவேயின்னோனுக்கு எப்படிவிரித்துச்சொன்னீர். 20

சொன்னதுசரியேநீரும் சுகமுளபாலனுக்கு
நன்னயநவக்கோள்தோஷம் நவிலுமுன்மூன்றும்சென்மம்
தன்னயத்தோஷஞ்சூழ்ந்து சரமுடனிருப்பதாலே
வன்னமாமதனைதீர்க்க வழுத்துவேன்கிரியைக்கேளே. 21

சாதகன்மனைவியோடு சார்ந்திடுமருணைக்கேகி
போதவேதீர்த்தந்தோய்ந்து புகலரன்பதத்தைப்போற்றி
யேலவேயிரசிதந்தன்னால் நல்கியமகனைச்செய்து
காதலையகற்றவல்லாய் கருதிடுமறையோருக்கே. 22

ஆடையுங்கந்தபுஷ்ப மணிதனமடைக்காய்கூட்டி
தேடியேதானமீந்து தியங்கிடாதடியார்க்கன்னம்
நாடியேவளித்துபின்னும் நவின்றிடும்முள்ளூர்மீண்டு
தோடையமில்லாமல்தான் துலங்கியநவக்கோள்சாந்தி. 23

விதிப்படியிந்தபாலன் விளக்கமாய்செய்வானானால்
சதியிலாதோஷமில்லான் சார்ந்திடநிவர்த்தியாகும்
கெதியுளபலனுநன்மை கேவலமணுகிடாது
பதியதுவுயருமென்று பகரினேன்நவக்கோள்தன்னால். 24

சொல்லியசாந்திதன்னை சுந்திரன்வனுஷ்டங்காணேல்
வல்லனேபுத்திரதோஷம் வகுத்திடுமனைவிக்கீனம்
கல்லதுமனேகமுண்டாம் கழரினேனின்னோனோக்கி
தொல்லையாமேலுமங்கை துலங்குவாளென்றுகூறே. 25

இன்னிலமுடையானுக்கு இயற்றுவேனினிமேல்யோகம்
சொன்னதோர்செனனந்தொட்டு துலங்கிடுமீரேழாண்டும்
மன்னியேபிதுர்க்குயோகம் வந்திடும்நயமதாக
கன்னலின்சுவைபோலொத்த கனிமொழிக்கந்தர்வாக்கே. 26

வாணிபம்சமமாயோங்கும் வர்த்திக்கும்நாணயங்கள்
பேணியேநஷ்டங்கொஞ்சம் பிலமிலாநிவர்த்தியாகும்
கோவணனருளுமுண்டு குறித்திடுமாண்டின்மேலாய்
நாணியோயொருபத்தாண்டு நயமானயோகஞ்சொல்லே. 27

வித்தையும்பலிதமுண்டு விளங்கிடும்நாணயங்கள்
பத்தியேபொருளுஞ்சேரும் பணிகளும்விர்த்தியுண்டாம்
நத்தியேகலகங்கொஞ்சம் நல்கிடாநிவர்த்தியாகும்
சித்தியாமதின்மேல்மூன்று செழிப்புளயோகமப்பா. 28

அதுமுதலீரெட்டாண்டு மழகுளயோகம்வாக்கும்
பதியதுமேன்மேல்வோங்கும் பரிதியவணிபமேன்மை
சதியதுவடைந்தபோதும் சார்ந்திடாநிவர்த்தியாகும்
விதியதுநேருமென்று விளம்பியகந்தர்வாக்கே. 29

நாணயம்பலிதமாகும் நல்கிடும்பணிதருவும்
கோணவன்ரசுமுண்டு குறித்தனன்பெரியோர்நேயன்
வாணிபமூலமாக வர்த்திக்கும்செட்டுமப்பா
ஈனமொன்றடைந்திடாம லெழில்சுதன்வாழ்வார்சொல்லே. 30

சொல்லியவாண்டுதொட்டே சுகந்தருமறுபதாண்டும்
நல்லவாம்பலத்தயோகம் நல்கிடுமியாவுநன்மை
தொல்லையொன்றடைந்திடாமல் சுகமுளதனமும்தேடி
வல்லவனிந்தசெல்வன் வளமுடன்வாழ்வானப்பா. 31

தானியம்விர்த்தியுண்டாம் தரணியில்கீர்த்திமென்மேல்
யீனமாமதின்மேலொன்றும் இலகிடும்நஷ்டயோகம்
மானமாய்வந்துதீரும் வழுத்தியவாண்டின்மேலாய்
தானமாயிவனிருயுள் சார்ந்திடுங்காலமட்டும். 32

தனமதுகையில்சேர்த்து தாஷ்டிகபிரபுவாகி
இனத்தவர்மெச்சியின்னேன் எழில்பொருள்கையில்சேர்த்து
கனத்திடும்யோகம்பெற்று காலையும்வாழ்வானென்று
அனைத்துயரதனைச்சொன்னே னருளியபலனிதப்பா. 33

பாக்கியத்ததிபனுனேன் பரித்திடவுதையந்தன்னில்
வாக்கினிற்குடையகோனும் வந்திடச்சுகத்தின்மீது
தாக்கியநாலாமாதி தகர்தனிலமர்ந்துநிற்கும்
போக்கியபாலனுக்கு புகன்றனன்பெலத்தயோகம். 34

பிரபலங்கீர்த்திமேன்மை பெருகிடும்நாணயங்கள்
திறமையாய்பொருளுஞ்சேரும் தீங்கதுயாதுங்காணேம்
குறைவதுயடைந்தபோதும் குணமிலாநிவர்த்தியாகும்
இரவனுங்கேசபூபா யியம்பியகந்தர்வாக்கே. 35

அற்பமாய்பலன்களெல்லா மணுகியேவந்தபோதும்
சொற்பமாய்நிவர்த்தியாகும் சொல்லுவேன்தந்தைகாலம்
கர்ப்பமாமிருநான்காண்டுள் காளையுந்தந்தைவீழ்வன்
சொற்பமாம்நாற்பாண்டுள்ளே சுந்தரவன்ணைமாய்வள். 36

பாலகன்கண்டகாலம் பகருவேன்சிறுகண்டங்கள்
சீலமாய்வந்தபோதும் சிறப்புளபண்டிதத்தால்
ஏலவேநிவர்த்தியாகு மியற்றுவேனிவனினுயுள்
சாலவேயறுபானெட்டில் சாதகனுடலம்வாடி. 37

சேருவன்பதவிக்கின்னேன் செப்புவேன்யிவன்பின்சென்மம்
பாரினில்மைசூர்பக்கில் பகருவேன்சத்திரியனுக
தேரியேசனித்துயின்னேன் திருவருள்பதைத்துவாழ்வன்
மாறிடாநவக்கோளாய்ந்து வழுத்தியபலனிதாமே. 38

முதலாவது மிதுன லக்கினம்

முற்றிற்று.

	புதன் சுக்ரன்	சூரிய செவ் ராகு	லக்ன
	2-வது மிதுனராசி		குரு
சனி	கேது		சந்திர

2-வது மிதுன லக்கினம்

சந்திரனுங்கன்னிதனில் வந்துமேவ
சாற்றுமொருதனுவதனில் மைந்தன் நிற்க
புந்தியுடன்சுங்கனுமே மேடம்பற்ற
புகழானகுருவவரும் நண்டில்துன்ன
சுந்தரமாமலரியுடன் ஆறல்தானும்
சூழ்பணியோடிவைமூன்றும் விடையிலேற
மந்திரமாம்சிகியவனும் தேளில்நிற்க
மகிழ்சுதனும்வினையுற்றால் பலனைக்கேளே. 1

விதியதுகிழக்குடனே மேற்குமாகும்
விளங்கிடும்வாசலது வடக்கென்றோது
ஓதிடுவோம்கந்தர்மொழி யொருபால்சந்து
உயர்கன்னியீசனுட சூழியாகும்
நீதியாம்கடகமதில் காரியாகும்
நிலைத்திடும்மாரியோ வாகும்வீணை
போதுருமானதொரு வீசானியத்தில்
புகழுருவானதொரு சுழிரெண்டாமே. 2

இந்தநற்பலனையாங்க ளியங்கியசித்தூர் நன்னில்
சுந்தரமாகனில்லிற் சுதனவதாரமானான்
வந்தவனின்னோன்செய்கை வரும்வினையின்னதென்று
சுந்தரபவக்கோளாலே சொல்பலன்கந்தர்வாக்கே. 3

வேறு விருத்தம்

முந்தியிவனிருந்துவந்த செனனந்தன்னை
மொழிகிறேமதின் விபரம்மொழியக்கேளு
கந்தர்பதியேநகர்க்கு தென்பாலாக
கங்கைவரதனில்வணிகன் சேயுமாகி
தந்தையொடுமனைவிசுதன் நேக்கல்மிக்கான்
தன்பனதிசேயில்லும் தனிப்போமாடி
விந்தையதாய்காடிநற வாகனங்கள்
விளங்கியநன்மணிகளினால் வியாபாரந்தான். 4

இந்தவிதம்நாடோறும் பலவியாபாரம்
எழில்பெறவேநடத்திவருங் காலந்தன்னில்
கந்தபதிதனில்வாழும் மறையோன்சேய்க்கு
கல்யாணம்செய்வதற்கு மனதிலெண்ணி
சொந்தமதாம்முதற்கொண்டு வணிகனில்லீர்
சுகமதாய்வந்தபணி விலைக்குக்கேழ்க்க
விந்தையதாய்பவபணிதி யெடுத்துஈந்து
வேண்டியதைப்பாரெனவே மறையோன்சொல்வான். 5

அய்ல்வணிகன்பார்ப்பதற்கு விலைதாளாமல்
அன்புடனேயிவனென்னத் திற்குநொந்து
நயமுடனேபொருள்வாங்கி பணியியென்றான்
நற்றவனுமயல்வணிகன் தன்னைக்காட்டி
தயவுடனேயிதுபோறு தென்றுவோத
தளர்வடைந்துமறையோனு மிவன்பால்வந்து
இயல்புடையவுனதுபணி விலைக்காணாது
எனதுபொருள்எனக்களிக்க வேண்டுமென்றான். 6

வந்தபணிதான்கலந்து நிதியீயாமல்
வாயிடக்காயுரைத்திடவும் வாய்பேசாமல்
அந்தணனுமச்சபையார் தனக்குமோத
அன்புடனேயழைத்தவனைக் கேழ்க்கும்போது
எந்தனிடம்வந்ததுண்டு எழில்வியாபாரம்
இசையாமற்போயினனே னென்றுகூற
அந்தமொழிகேட்டுகரி யில்லாதாலே
அந்தணன்சொல்விருகையால் போற்றிசெய்தான். 7

கயிலைநாயகன்பாதத்தைக் காண்பாரென்று
  கடினமொழிஉரைத்துமே மனைக்கங்கேகி
முறைமுறையேபலமறையோர் வந்துகூடி
  யினமானயிச்சுதனை கேட்கனல்லோர்
இழிவாகமொழியதனை யெடுத்துப்பேச
  மோசமிவைதனையறிந்து மொழிவார்வல்லோர்
குறையுரையார்பவங்கூடி வணிகன்தன்பால்
  கொடும்பிணியால்உடல்வாடி யாவிநீத்தான். 8

அந்தகனாருலகடைந்து நகரம்புக்கி
  லதுகழிந்துவயன்கரத்தா லமைத்துவிட்ட
சுந்தரனாமவனிவனா மென்றுயரங்கள்
  சொல்லுகிறோமிவன்பலஞ்செய் குற்றங்கேளா
வந்தஇந்தமனைவிசுதன் அரிஷ்டமாகும்
  வளர்தந்தையரிட்டமுறும் வயதொன்பானுள்
இந்தபாவம்தனைநீக்கி சுகமடையவேண்டி
  யெழிலுடையதிருப்பழநி மலைக்கங்கேகி. 9

சுந்தரமாங்கந்தனுக்குப் பயத்தாலாட்டி
  சுயந்தங்கம்களஞ்சியத்தால் வேலுஞ்சாற்றி
கந்தனிருபாதமதை யர்ச்சித்தேற்றி
  கருதுசிவமறையோர்க்கும் சேய்க்கும்பொன்னால்
விந்தையதாயடையோடு யேமங்கூட்டி
  விரைந்தவன்தன்கரந்தீய்ந்து விளம்பக்கேளும்
முந்துபணியந்தணன்போல் முறைமைகூறி
  மோசமிவையொழிந்ததென வாக்கால்சொல்லி. 10

அந்தமொழிகேட்டுமறை யதிதிகட்கு
  அன்பாகமறுசுவையோ டன்னமீந்து
வந்துதமதூரடைந்து வாழுநாளில்
  வாழ்முருகன்தனைப்போற்றும் பாவநீங்கும்
முந்திசெய்தபவநீங்கும் நன்மையுண்டாம்
  முக்கியமாயாயுயிராங் கண்டமுண்டாம்
சுந்திரமாமாணிரெண்டு கன்னிமூன்று
  சுகமாயுள்பெற்றிருக்கும் சுருதிவாழ்வே. 11

இந்தமட்டும்முன்ஜெனனத் திருத்தஞ்சொன்னோம்
இனிகூடும்பப்பலனனைத்து மியம்பக்கேளும்
தந்தைதுணையொன்பதினிற் றீர்க்கம்ரெண்டிற்
றானொன்றுகன்னியொன்று மற்றதீயும்
தன் துணைகளுண்டாகும் தரித்தாலற்பம்
தான்முந்துவினையொழித்தால் ஐந்துமூன்று
முன்மூவில்ரெண்டதிலே தனிலரிட்டம்
முறைந்திட்டவறுமுகவர் கந்தர்வாக்கே. 12

வேறு விருத்தம்

இருசிகப்புடையமேனி யிளநகைப்புரியுந்தந்தம்
மருவியசமதிரேகந்தான் வளர்த்தியில்மலர்முகத்தான்
திருவினாற்கிருபையுண்டு திகழொளிக்கீர்த்தியுண்டு
தருக்கருத்துடையநெஞ்சம் தயவுடன்முனியுண்டாமே. 13

மனைவியோரொருவருண்டு மதலையும்பிறந்துஈயும்
கருவினையொழியானாகில் கதித்தனோய்தீர்க்கமாகும்
அனமெனும்நடையாள்பெற்ற ஐயனாற்செல்வமுண்டு
கனமெனுந்தனங்களுண்டு காளையுமடைவானென்றே. 14

பூமியுமதிகமுண்டு கண்ணியங்கீர்த்தியுண்டு
சேமநிதியுமுண்டாம் சிறந்திடும்பணிதருவும்
சாமியாலையந்தடாகம் சர்ச்சனற்குதவியாவன்
நேமமும்பலமாயுண்டு யெதிரியுமெதிர்த்துதாழ்வான். 15

வாலிபந்தன்னில்வேறு மாதரைபோகஞ்செய்வான்
பாலுளபசுக்களுண்டு பலித்திடும்செய்யிலாபம்
ஏலுளதந்தைநாளே யெழில்பெருஞ்செல்வமுண்டாம்
சீலனாமிவனாள்தன்னில் செய்யினால்பொருளுண்டாமே. 16

அன்னமேல்பிரிதியுள்ளா னாடையாபரணமுள்ளான்
பொன்னதுகொடுக்கல்வாங்கல் புகழுறுங்கீர்த்தியோயான்
அன்னமும்பெரிதாயீவான் வழகியசந்திசேயில்
நன்னயமாகவெய்து நலம்பெறுந்தந்தையாலே. 17

சொன்னசொல்மருத்துகூறான் சுகம்பெறுமனைவிதன்னால்
நன்னயசெல்வமுண்டாம் நற்பொருள்பணிநற்றூசு
மன்னியராலேசேரும் மக்களுந்தராவுமில்லை
நன்னயமாகப்பெற்று நலம்பெறவாழ்வாய்நன்றே. 18

புத்திமதியுமுள்ளோன் புகலுறுமற்பகோபி
வெத்தியாம்தொடுவழக்கு வீண்வம்புதன்னிற்செல்லான்
சுத்தத்தார்தோகையுள்ளான் சுயம்பிரகாசியாவான்
யெத்தொழில்செய்தபோதும் இணங்கிடும்செல்வமுண்டாம். 19

தன்னுடன் தந்தைமேலாம் தனயனுல்வாழ்வானுகும்
பொன்னதுபுதையல்செய்வான் புகழ்நந்திசேயுமில்லும்
நன்னயப்பரியும்காடி நற்றூசுபரியுந்தாரு
சொர்னமும்செய்வன்றன்னுற் ஜெகம்பெறமேன்மையுண்டாம். 20

வித்தையுமொன்றுண்டாகும் விளம்புவன்பெருமையாக
புத்தியாலெதையும்வெல்வன் புத்திரவாஞ்சையுள்ளோன்
வெற்றியாம்தொடுவழக்கு வீண்வம்பன்தன்னைச்சாரான்
சத்தியசௌக்கியமுண்டு சம்பத்துசேயினுண்டாம். 21

அன்னையேமஞ்சைமெத்தை அடிமையோர்பெருக்கமுண்டாம்
பொன்னதுகொடுக்கல்வாங்கல் பூமியாய்செல்வமெய்தல்
தன்னினத்தவர்க்குமேலாய் தனிகனுய்வாழ்வானுகும்
மன்னியமாமன்றன்னுல் மகிழ்ச்சியாங்கந்தர்வாக்கே. 22

வேறு விருத்தம்

பிதுர்பெருக்கஞ்செல்வமொடு கீர்த்தியுண்டு
பேசுவதிலிவனுதித்த பிறகேவேறு
ததியறிந்துபரமாதர் போகஞ்செய்யான்
தாயாதிவர்க்கசுகம் தழைத்துவாழும்
யெதிரிதனைஜெயிப்பதற்கு சமர்த்துமுண்டு
எப்போதுநல்லோர்களிணக்கமுண்டு
சதிசெயலாலுறவுகொளான் பகையுங்கொள்ளான்
சம்பத்தையுடையனென்பர் சகலபேரும். 23

வேறு விருத்தம்

புண்ணியமறிவர்நீதி புராணநூலுணர்ச்சியற்பம்
மண்ணிடையோர்பெருக்கம் மாதவர்க்குண்மையுள்ளான்
நன்னயவாஞ்சைதேட வுபாயங்கள்மிகவுமுண்டு
எண்ணியகருமம்யாவு மிசைவுறமுடிக்கவல்லான். 24

பலநதிதீர்த்தங்கூடி பரனடிவணங்கிப்போற்றி
நலனுறசெய்கையாவும் நடத்துவன்வம்பிற்செல்லான்

குல்மகன்வம்பிற்செல்லான் குற்றமொன்றுரைக்கொணாது
நலனுறும்புராணநூலில் நயப்புண்டுகந்தர்வாக்கே. 25

தன்தனம்கொடுக்கல்வாங்கல் தார்புயமெச்சவாழ்வன்
சொந்தமாம்ஏவலாளர் சுகம்பெறசேயிலுண்டு
வந்திடும்பணிதருவும் வளம்பெறமெத்தையுண்டு
சிந்துறப்பரியுங்காடி சேயிலம்மணிதூசுண்டாம். 26

அடுத்தவர்க்குபசரிப்பான் அலங்கிருதவடிவனாகும்
கடுத்தசொல்மொழியக்கூறான் காரிழைதனக்குநேயன்
வடுத்திடுங்கன்னிதன்னால் வளம்பெறப்பொருளுமுண்டாம்
கொடுத்திடமனதுவைத்தால் கொற்றவன்தனைப்போல்ஈவான்.

தந்தையின்புகழைச்சொன்னோம் தன்னுடவன்னைசெய்கை
சுந்தரவழகுமுள்ளான் சுயம்பெருங்கணவனாகும்
விந்தையாயுபசரிப்பாள் வேண்டியபணிதியுண்டாம்
தந்துணையைந்துநாலு தரிப்பதுமூன்றுமென்றே. 28

ஐந்தொடுவேழொன்பானுள் வணுகிடுமரிஷ்டகெண்டம்
முந்தியபவந்துறந்து முதிர்நவக்கோளினுக்கும்
சுந்தரமுடிக்குமாட்டிற் சுந்தரநதிஷ்டம்போகும்
இந்தவாறுசெய்யாவிட்டால் யெழில்வினையகலாதென்றார். 29

திசா பலன்

இன்னிலக்குடும்பச்செய்கை யிசைந்தனன்நவக்கோளாலே
நன்னயதிசாபலத்தின் நயத்தினையுரைக்கக்கேளாய்
மன்னுமுத்திரத்தின்மூன்றில் மகிழ்கதிர்பிற்பாகத்தில்
தன்னிலேயுதித்தசேயின் தவத்தைக்கேள்கந்தர்வாக்கே. 30

அலரியின்பிற்பாகத்தில் அன்னையுந்தந்தைநன்மை
குலவியமாதுர்வர்க்கம் கொடும்பகையரிஷ்டப்பீடை
நலமில்லைபிதுர்வர்க்கத்தில் நற்பொருள்சிலவுநஷ்டம்
பிலமில்லைபணியுண்டாதல் பிதாவர்க்கம்பிணியுண்டாமே. 31

சந்திரனுறல்ராகு சகலமுமன்னைப்பீடை
தந்துணைதனக்குண்டாதல் தாயவன்தனக்கரிஷ்டம்
தந்தையின்வாக்குகண்டம் தாய்குலம்நன்மையுண்டு
தந்தையின்வர்க்கம்வேட்டல் தனமுறுங்கந்தர்வாக்கே. 32

மன்னவன்மைந்தன்புந்தி மகிழ்ந்திடவித்தையோதல்
அன்னையும்பீடையற்பம் அற்பமாவழக்குண்டாதல்
பொன்னொடுபணிவுண்டாதல் புகழுறும்தந்தைநன்றே
தன்னினத்தவர்க்குமேலாய் தனிகனும்கந்தர்வாக்கே. 33

சிகியொடுசுன்னும்பானுள் சிவதலம்தீர்க்கவாசம்
பகையிடாஅன்னைக்குண்டாம் பலமுறுமற்பகண்டம்
நகையொடுவெங்கலங்கள் நாணயஞ்செந்நெலுண்டாம்
துகையதாய்தனமுண்டாகும் துயர்நீங்கும்கந்தர்வாக்கே. 34

மங்களம்அன்னைவேட்டல் மங்களம்தனக்குண்டாகும்
இங்கிதசெல்வஞ்சேயா லெய்திடும்பிதாவினாலே
சங்கரபணிகள்மன்னன் சார்ந்திடும்சேயிலுண்டாம்
அங்கமுமரிஷ்டமுண்டாம் அருந்துணைவேட்டலுண்டாம். 35

புத்தியுஞ்சிகிசுன்பானும் புகழுறும்செந்நெல்தன்னால்
மைந்தனும்வந்துதோன்றும் மதியொடுயாறல்தன்னில்
வந்திடும்நந்திநாடி நலமுறும்பணிதியாவும்
செந்திருகடாக்ஷமுண்டாம் சேய்பலன்கந்தர்வாக்கே. 36

மன்னவன்மைந்தன்புந்தி மக்களுக்கின்பவேட்டல்
தன்னுடதுணைக்குநன்மை தனியில்லமொன்றுசெய்வான்
பொன்னதுகொடுத்துசேய்கை புகழ்பெறவாங்கலாகும்
அன்னதால்வழக்குண்டாகி யரசரால்நன்மையாமே. 37

சிகியொடுசுன்னும்பானும் சிவதலம்தீர்த்தவாசம்
நகையொடுவெங்கலங்கள் நாணயமிகவுண்டாதல்
இகலினுர்தந்தைகெண்டம் எய்திடும்தெய்வபூமி
வகையுறும்மைந்தன்தன்னால் வகுத்தனர்கந்தர்வாக்கே. 38

சந்திரனுறல்ராகு சகலரும்புகழவாழ்வன்
சந்திரன்தன்னால்யோகம் சார்ந்திடுங்கீர்த்தியுண்டாம்
சுந்திரப்பரியுங்காடி சுகமுறும்பணிசேயில்லும்
வந்திடுந்தனத்தாலியல் வரும்யோகம்கந்தர்வாக்கே. 39

மைந்தனும்புந்திகேது மாரகப்பீடையுண்டாம்
செந்திருகோளாலேகும் செய்யினுற்பலனுண்டாகும்
சுந்தரசுங்கன்பானு சுகங்களுமெத்தவுண்டாம்
சந்திரனுறல்ராகு சார்ந்திடுங்காலந்தன்னில். 40

மன்னியசடத்திரேகம் மருவொடுமனவெருக்கும்
நன்னயமாகதிங்கள் நலமுறுஞ்சதுர்த்திதன்னில்
இன்னில்த்தாவிநீங்கி யெழில்பிதுருலகஞ்சார்ந்து
வந்துமேயுதிப்பானென்று வரைந்தனர்கந்தர்வாக்கே. 41

இந்தநற்பலனையாங்கள் யிசைந்தனன்நவக்கோளாலே
முந்தியகருமகாண்டம் முறைப்படிப்பவமொழிந்தால்
சுந்தரன்தனக்குச்சொன்ன சுகமெலாமனுபவிப்பான்
இந்திரன்சுதலாள்நேயன் இயம்பியகந்தர்வாக்கே. 42

இரண்டாவது மிதுன லக்கினம் முற்றிற்று.

சந்திர			கேது
புதன் சூரிய செவ்	1 – வது கடகராசி		லக்ன
சனி சுக்ரன்			
ராகு			

1-வது கடக லக்கினம்

சந்திரன்மன்னன்கண்டை சார்ந்திடசிகிதான்வீணை
புந்தியுமலரியாரல் புகழ்சாடிதன்னில்மேவ
மந்தனுசுங்கன்மானில் மருவிடதனுசில்ராகு
இந்தவாறுநவக்கோள்நின்று இலக்கினம்கடகமுற்றால். 1

இலகிடும்பலனைச்சொல்வோ மெழிலுறுங்கீழ்மேல்வீதி
நலமுறும்வடக்குவாசல் நல்குமில்லொருபானுண்டு
நிலமதியெதிரேயில்லம் நின்றிடாதோட்டமாமோ
பலனுறும்பாலனுக்கு பகர்ந்தனன்கந்தர்வாக்கே. 2

ஆமிதுவருணன் திக்கில் ஐங்கரன்கோயிலுண்டு
தோமெனுமனுவுநட்பு துலங்கிடும்தாதுதிக்கில்
தேமுறுபலவர்ணத்தோர் செழிப்புறப்பணிந்துபோற்றி
தாமிகக்கீர்த்திகொண்ட சமயநற்குரவர்தானே. 3

தங்கியேபெருமையோங்கி தழைத்திடமடமொன்றுண்டு
இங்கதில்திக்கில்தானே யெழில்மோட்சந்தியானஞ்சொன்னேம்
நங்கையின்மூலதன்னில் நலமுறுமம்மைகோஷ்டம்
தங்கியவடையாளத்தில் தரித்தமில்லதனிற்பாலன். 4

பிறந்தனன்மாமனில்லில் பேருருமென்றேயோது
சிறந்திடும்விமலனுக்கும் செப்புறும்மாலினுக்கும்
வரைந்திடும்பலதேவர்க்கும் வண்மையாமாலயங்கள்
நிறைந்திடும்தலமென்றேது நிகழ்த்தியகந்தர்வாக்கே. 5

தந்தையினுடன்பிறந்தார் தரிப்பதுமூவராகும்
இந்தநற்சுதன்றந்தைக்கு யேகமர்மனைவியாகும்
வந்தவள்சுதனேயின்னேன் வகுத்திடுந்துணையைக்கேளு
விந்தையாம்யாண்பால்ரெண்டு மெல்லியளொருத்தியாமே. 6

சாதகன்தனக்குமுன்பாய் தரிப்பதுஆண்பாலொன்றில்
பேதையுமவ்வாருகும் பின்னுங்கனிஷ்டனென்று
மாதுகேள்மூன்றுதீர்க்கம் வளமுளசிரேஷ்டனுக்கே
தோகையர்மனைவிரெண்டாய் சொல்லிடுங்கந்தர்வாக்கே. 7

அங்கதில்மூத்தபெண்டீர் அரிவையாம்புதல்வனென்றில்
தங்கிடமரணமாவாள் தான்பின்னல்து திக்கைகொள்வான்
பொங்கிடும்புத்திரவிர்த்தி பேசுதற்குற்றங்காணேம்
இங்கிதமுடையான்யோகம் இயம்பியகந்தர்வாக்கே. 8

அன்னியபாஷைதன்னை யறிந்ததால்கீர்த்தியோங்கி
சென்னியவரசாங்கத்தில் கிளர்த்திடும்வாய்மூலத்தால்
உண்ணுவன்றன மஞ்சேரும் வுயறமாம்பிலமதாவன்
இன்னயமுடையான்யோகம் இயம்பியகந்தர்வாக்கே. 9

பின்னெனுங்கனிஷ்டன்செய்தி பேசுவன்குறிப்பிற்காண்பாய்
வின்னமாம்தந்தைநாளில் விளம்பிடப்பலனைக்காணேம்
சொன்னனம்வறுமையாவான் தொகுப்புளமாமன்வர்க்கம்
உன்னியவுபகாரத்தால் உயரவரிவரென்றேதே. 10

ஓதுவேன்பாலன்முன்னூ ளுற்றிடுஞ்செனனங்கேளு
நீளமாங்காஞ்சிதன்னில் நிர்மலன்கோவல்கிட்டான்
தோதருமிதற்குவீதி தொகுப்புளவடக்குவாயன்
யேதுருமிலத்திலிந்த யிளவனும்வணிகனுமே. 11

தோன்றியேவறுமையோனுய் சுற்றத்தார்பெண்டீர்மக்கள்
தான்றிட வாணிபங்கள் தானற்பமாகச்செய்து
தூன்றியவாயுங்கொண்டு துலங்கவேகாலக்ஷேபம்
நீன்றவறினந்தப்பாமல் நெறியொடுகோயில்சென்றே. 12

கங்கைவேணியனைப்போற்றி கரமதுசிரமேலேந்தி
பொங்கமாங்கண்ணீர்சோர பேதையென்வறுமைநீக்கி
இங்கிதமளிப்பாயென்றும் இருபதந்தருவாயென்றும்
பொங்கமாய்ப்பணிந்துமீள்வன் பின்னிந்ததவத்தினாலே. 13

அச்சென்மமாக்கைநீக்கி அடுத்தவிச்சென்மந்தன்னில்
உச்சிதமறையோன்கோத்ரம்உற்றிவன்செனித்தான்சொன்னோம்
மெச்சிடுமந்தநாளில் விமலனைப்பணிந்ததாலே
கச்சியாயிச்சென்மத்தில் கழற்செல்வம்விர்த்தியுண்டே. 14

உண்டிவன்தனதுமேனி உரைப்பன்யான்சிகப்பனாகும்
வென்றிகோள்செருக்கள்நீச்சி விளங்கிடும்பித்ததிரேகி
நன்றிடும்புலைகளற்பம் நலங்கிடுமழுத்தநெஞ்சன்
ஒன்றியன்விழியின்பக்க லோதொருகருத்தமச்சம். 15

மங்கையர்மோகனுவன் வலமையாயிச்சைகொள்வன்
இங்கிதவார்த்தைகூறுன் நிறுக்குமுன்கோபமுள்ளான்
துங்கமிழ்த்தமிழின்தேர்வன் துயரின்றியன்னியபாஷை
இங்கிதமுடனேகற்ப மியைபதால்யோகந்தானே. 16

துணைகளைப்பகையாய்க்கொள்ளான் சூதுகள்மிகவேதேருன்
குணமொடுநாலைந்தாண்டுள் குறித்தவூர்நினைத்ததிக்கில்
இளமுளகாதம்ரெண்டில் இருந்திடுபேரூரொன்றில்
மணமதுபுரிவானந்த மாதுமேலிச்சையாமே. 17

புத்திரவிர்த்தியுண்டு பிறந்திடும்சிலதுநஷ்டம்
சித்திரஉருவாமுன்னேன் சிறந்திடானரிஷ்டமாவான்
பத்துவன்துதிகைமாது பாலகர்விர்த்தியுண்டு
நத்தியயிருமாதுக்கும் நாட்டுவோம்சுதனைக்கேளே. 18

தீர்க்கமுமாண்பாலொன்று சேயிழையிருவராகும்
மார்க்கமாமீரைந்தாண்டுள் வளர்சுதன் தந்தையீவன்
யேர்க்கவேயதின்சின்னாள்பின் னியம்புலக்கீழ்பாலாக
வேர்க்கண்ணாய்திறகமொன்று வியப்புறவமைத்தல்சொல்லே. 19

வந்ததில்நெடுநாள்வாழ்வர் வண்மைசேர்சுதனில்யோகம்
விந்தையாமிருப்பான்ரெண்டில் வியப்பிலையற்பமாகும்
பிந்தியும்நயத்தகாலம் பேசியகல்விதன்னால்
வந்திடுமுறையோகந்தான் வண்மையுமதினாலுண்டே. 20

தரந்தரமாகயேறும் தழைத்திடுங்குடும்பவிர்த்தி
சிறந்திடும்தனமும்சேர்க்கை செய்வினைவழுவாதொன்றும்
நிறைந்திடுமெழுநான்கின்மேல் நிகழ்ந்ததியோகமேரும்
வரைந்தனனரசர்நேசம் வாய்த்திடுங்கீர்த்தியுண்டே. 21

சொன்னனல்வருஷமேலாய் சுதனுரையாயுள்மட்டாய்
பின்னதில்இடரைக்காணும் பெருகிடும்தனமுமென்மேல்
நன்னயம்பூமிசேரும் நவிலில்லம்புதிதாய்செய்வர்
பொன்னுறும்பணிதிபாத்ரம் பெருகிடும்சகடமென்றே. 22

இந்தவாறுடையானுக்கே யெழிலுறுபொதுயோகந்தான்
சொந்தநற்கிரகமுண்டு துலங்கியசகலதீரம்
விந்தையாம்பூஷணாதி விளங்கிடுமற்பபூமி
உந்திடவாகனந்தான் உற்றிவன்சுகிப்பானென்னே. 23

முப்பத்திமூன்றாமாண்டுள் மொழிந்தனமன்னைகண்டம்
செப்பதுநிவர்த்தியாகில் திறமேழேயேழில்வீழ்வாள்
தப்பிலாமுப்பானாண்டுள் தையலார்க்கரிஷ்டமுண்டு
ஒப்பதுவவதிமிக்க வுற்றிடுமென்றுகூறே. 24

கூறதுநிவர்த்தியாகில் குறிதிரியாண்டுகாயம்
நேரதுக்கிரண்டாண்டுள்ளாய் நிகழ்த்துசோபனமுங்கூடும்
நாரிகேள்சாதகர்க்கு நவிலுவோம்கெண்டமாயுள்
ஏறதாஞ்சிறுகண்டங்க ளியம்பலாம்வந்தபோதும். 25

தானதுலகுவிற்றீறும் தகையுளநாளெட்டொன்றுள்
யீனமாம்பலத்தகண்ட மெய்திடும்சூட்டின்மூலம்
மானமாங்காலந்தன்னில் மந்தணர்சாந்திசெய்வார்
கோனவன்தன்னைப்போற்ற குணமொடுநிவர்த்தியாகும். 26

பிந்தியீரெண்டாண்டுள் பெற்றிடும்வாய்வால்சூட்டால்
வந்திடுங்கண்டமொன்று மங்கையேயதுவும்நீங்கி
வந்துமென்னுருருண்டுள் நவில்சுதன்மரணமாகி
விந்தையாயாடிநட்டில் வேதியவருணந்தானே. 27

இந்தநற்பலனையாங்கள் யிசைந்தனன்நவக்கோளாலே
முந்தியகருமகாண்டம் முறைப்படிப்பவமொழிந்தால்
சுந்தரன்தனக்குச்சொன்ன சுகமெலாமனுபவிப்பான்
இத்திரன்சுதலாள்நேயன் இயம்பியகந்தர்வாக்கே. 28

முதலாவது கடக லக்கினம் முற்றிற்று.



உ-வது கடக லக்கினம்

சந்திரனலரிபுந்தி சதியோடுமன்னன்தேளில்
சுந்தரசுங்கன்வில்லிற் சூழ்ச்சிகடகம்பெற்ற
மந்திரபணியுமானில் மங்களகன்னிமேவ
இந்தவாறுநவக்கோள்நின்று யிலக்கினங்கடகமுற்றால். 1

சந்திரவாஸ்த்துவீதி சாற்றுவோம்குணக்குவாசல்
அந்தயில்தென்பால்சந்து யரனுமைவீணைஞாங்க
சுந்தரத்தேளில்ஞாங்கள் சூரியங்காரியொன்று
வந்திடுமீனல்சத்தி வளர்புரிஞாங்கர்க்காவாய், 2

இந்தநல்லடையாளங்கள் யிலகியசித்தூர்தன்னில்
முந்துசெய்தவத்தால்வந்த முதுமறைகுலத்தின்சேயாய்
வந்தவனென்னசெய்கை வருஞ்செயலின்னதென்று
சுந்தரநவக்கோளாலே சொல்லுடுங்கந்தர்வாக்கே. 3

வந்தசேய்செனனமுன்னாள் வரைகுவேன்கந்தர்வாக்கே
சுந்தரபொன்னின்சேர்ந்த சுகமரும்வளையார்தன்னில்
அந்தணர்குலத்துக்கேற்ற வப்பெருமகவாய்தோன்றி
சுந்தரமறைகளோதி சுயகுலத்தொழுக்கந்தேர்ந்து. 4

செல்வமொத்திருக்குநாளில் தீங்குவந்துற்றவாறு
சொல்லுவோமதனை யெங்கள் துர்வினையகற்றியாண்ட
யல்குறுகுழலாயெங்க ளாத்துமத்துறவோசொல்லும்
வில்லுதலன்னையீன்ற விளங்கியத்திதியின்வாரும். 5

பலபலமாதர்போகம் பரிந்திவன்செய்வதானான்
குலமதுயிவனையீன்ற கோதையின்தமையக்கன்னி
சிலநாளில்மேதனாவன் சிறுவன்தன்மனையில்வந்தான்
நலமவளுருவங்கண்டு நாடினானவள்மேலிச்சை. 6

வைத்தவள்தன்னையெய்து மருவியபோகந்தோய்த்து
உத்தவள்வயிற்றில்கெர்ப்பம் யுடனதுவந்துதோன்றி
பெத்திடவுருவுண்டாகி பிறந்திடாதேழாந்திங்கள்
மெத்தமாதவளையிவார் பிசகினையெய்தாரென்ன. 7

சொல்லினாலிவனையென்ன சுயமதிகொடுத்தாரென்ன
வல்லியிவ்வாறுகூற வயித்தியன்விஷமுமீந்தான்
அல்லியுங்குழலாள்செய்யும் வவதியாலிறந்தாளப்போ
சொல்லுளதாயைக்கேட்டு யேக்கமுற்றிவனைச்சொல்லார். 8

கார்ந்திடவென்றுமென்னும் பெரும்பிழைசெய்தமைந்தா
கூர்ந்தினின்பிறவிதோறும் எய்துமேவுனக்குசெய்யும்
அரந்தனைமறந்தாரேனும் யவமங்கைமாதைக்கூடார்
துகர்ந்ததோன்மதியினாலே சோர்வத்தாயளவேடன்றால். 9

இருபிழையிவனால்குற்றம் இணங்கியதிவனுக்குண்டாம்
பெருகியநரகம்புக்கி பொருந்தியேயதனைவிட்டு
திரும்பியுமதலையாகி யுதித்தசேயிவனேயாகும்
வருகுமப்பழியுந்தீர வகுக்குறோம்கந்தர்வாக்கே. 10

சேதுக்குச்சென்றினேனும் செழுமறையோனுக்குந்தான்
நீதிசேர்ந்ததாலே நீள்சுதன்தோற்றஞ்செய்து
சூதறவாடைசொர்ணம் சுந்தரமறையோர்க்கீந்து
காதலியுடனேகூடி கலந்தவிலக்கம்புக்கி. 11

சந்திவன்சோமவாரம் இயம்புவோம்பண்டுந்தாகும்
ஓந்திடாவிரதமன்னுள் முறையுமப்படியேகொண்டு
தேய்ந்தனின்னிடையாள்தேவிதிகழ்வெள்ளிவிரதங்கொண்டால்
ஆய்ந்துமுப்பழியுந்தீரும் அடாதுலம்விர்த்தியுண்டாம். 12

குடும்ப பலன்

வந்தவன்குடும்பப்போக்கை வழுத்துவேன்கந்தர்வாக்கு
தந்தையின்துணையேழைந்துள் ஆணதுவொன்றுதீர்க்கம்
தந்துணையைந்துண்டு வாண்மூன்றுகன்னிரெண்டு
தந்திறக்கன்னிகண்டம் தாய்துணைவேழில்ரெண்டே. 13

அன்னமேமறையோன்செய்கை யறைதவேன்கந்தர்வாக்கு
உன்னிதமிருசிகப்பு வுயர்திடான்தூலமற்பம்
நன்னியமிருதுவாகும் நற்புளான்சமமேதிரேகம்
நன்னியயிரண்டுகல்வி மதியதுயூகவானே. 14

நல்லவன்குணவானுகும் நயமறிந்துரைக்கவல்லன்
சொல்லிலேகபடமுண்டு சுற்றத்தார்ஞாதியுண்டு
நல்லவெங்கலங்கள்செம்பொன் நற்பணிநற்றூசுண்டு
இல்லொடுசெய்யாலுண்டு யின்பமுமிகுதியுண்டே. 15

அன்னேயும்புத்திசாலி அன்புடனன்னமீய்வாள்
சொர்ணமும்பணியுமில்லும் சுகமதுஅற்பமாதம்
நன்னியபுதல்வன்தன்னுல் நற்பலனனுபவிப்பான்
அன்னமும்சொர்னமாடை அரும்பிதாதன்னுல்யோகம் 16

திசாபலன்

இன்னிலகுடும்பச்செய்கை யிசைந்தனநவக்கோளாலே
நன்னியதிசாபலத்தின் நயந்தனேயுரைப்பேன்கேளாய்
மன்னியகேட்டைநான்கில் மகிழ்புதன்மைந்தன்புத்தி
தன்னிலேயுத்திசேயின் தவமுறைகந்தர்வாக்கே. 17

சிகிதனில்முற்பாகத்தில் சீர்பெருமன்னை தந்தை
நகையொடுவெங்கலங்கள் நற்றுயிலற்பபீடை
இயல்பகைவந்துதீரும் எழில்நதிதீர்த்தவாசம்
சிகியவன்பிற்பாகத்தில் செழும்பிறவர்க்குகண்டம். 18

நல்லவர்சேர்க்கையுண்டு நயமுறும்பெரியோர் தன்னால்
அல்லலுமகன்றுபோகு மன்னையும்பிதுரால்செல்வம்
நல்லநற்றுணையாங்கன்னி நலமுறும்துணைக்குநன்மை
வில்லினன்னுதலாள்வித்தை விளங்கிடும்தனமுண்டாமே. 19

சுங்கனுமலரிமாலோன் சுங்கொடுமெத்தையுண்டாம்
இங்கிததுணையும்வித்தை யிருவர்க்குமரிஷ்டகண்டம்
பங்கினாற்பலனுண்டாகும் பலபலவிதத்தால்லாபம்
வெங்கலம்பணிதிசெம்பொன் வியப்புறுமன்னைதன்னால். 20

மாறலுமறவுமன்னன் நறுந்துணைதனக்குவேட்டல்
சீர்பெறும்செய்யலாபம் செழும்பணைபிதுருகண்டம்
தினமுநற்றூசுசெய்து திகழ்பணிவெங்கலங்கள்
கோரமாயிவர்க்குகண்டம் கொடும்பகைசெய்யிலுண்டாம். 21

மந்தனும்புந்திகேது மகிழ்துணைசுபங்கள்வேட்டல்
தந்தையுமடைவன்கண்டம் தன்னுடதுணையாநன்மை
விந்தையாயரிஷ்டகோணம் விளங்கியகன்னிதன்னை
சுந்தரமணங்கள்செய்வான் சுகமுறும்தனமுண்டாமே. 22

அலரியின்முற்பாகத்தில் வருபிதுர்வாக்குகெண்டம்
தலமொடுதீர்த்தவாசம் தனமொடுமகவுந்தீதாம்
கலகமுமற்பமுண்டு காரிழைதனக்குப்பீடை
விலைதனக்காடையாலும் விரைவழக்கற்பலாபம். 23

அலரியின்பிற்பாகத்தி லடிவிருவர்க்குகெண்டம்
நலமுறும்பலபேராலே நற்பணிநளினதூசும்
கலகமும்செய்யலாபம் கைப்பொருள்செந்நெலுண்டாம்
பிலமுறும்மூத்தோன்தேவி பிணியினால்மரணமாவாள். 24

சந்திரனாறல்ராகு சார்பவன்துணைதுலைப்பன்
தந்துணைபின்னோன்முன்னோன் தவமதால்வேட்டலுண்டாம்
சுந்தரப்புதல்வருண்டாம் சூழ்பவம்தீர்த்தால்தீர்க்கம்
தந்தையின்துணைவன்கண்டம் தந்திடும்பலனுண்டாமே. 25

மன்னவன்மந்தன்புந்தி மைந்தனும் வந்துதோன்றும்
பொன்னெடுபணிவந்தெய்தும் புகழ்துணைவிரோதமாகும்
மன்னரால்பெருமையுண்டு மங்களமணியிலுண்டு
செந்நெலும்சொர்னமுண்டு சேய்தனக்கரிஷ்டமுண்டு. 26

சிகியொடுசுன்னும்பானுள் சிவதலம்தீர்த்தவாசம்
நகையொடுவெங்கலங்கள் நாணயம்பலவாயுண்டாம்
இகல்பகைதுணைக்குமைந்தன் எழிலுளவன்னைகண்டம்
அகமகிழற்பமெய்தும் ஆடையும்தனமும்நஷ்டம். 27

ஆறலின்முற்பாகத்தில் அன்னையுமவர்க்குகண்டம்
பேர்பெறும்புதல்வனுக்கு பூணுநூல்வதுவைசெய்வான்
சீர்பெறும்பிற்பாகத்தில் தந்ததம்துணைகள்வேரும்
வார்பெறும்முலையாள்பீடை வாயுவாலரிஷ்டகண்டம். 28

பணியொடுமன்னன்மைந்தன் பருந்துணைபிணியால்கண்டம்
மணியெனுங்கன்னிகெண்டம் மாதுவுமரிஷ்டமாகும்
மணியொடுவெங்கலங்கள் மகினமாம்தூசுசெந்நெல்
அணிபணியாடையாவும் அலங்கிர்தமகவாலெய்தும். 29

புந்தியுஞ்சிகிசுன்பானுள் புகழ்பெறுமகவுக்கீய்வன்
தன்னுடல்இளைத்துவாடும் தனித்தவாவணியுந்திங்கள்
தந்திடும்சதுர்த்திதன்னில் வளர்சடத்தாவிநீத்து
இந்திரலோகத்தெய்தி யெழின்பூமிமறையுதிப்பன். 30

இந்தநற்பலனையாங்கள் யிசைந்தனன்நவக்கோளாலே
முந்தியகருமகாண்டம் முறைப்படிப்பவமொழிந்தால்
சுந்தரன்றனக்குச்சொன்ன சுகமெலாமனுபவிப்பான்
இந்திரன்சுதலாள்நேயன் இயம்பியகந்தர்வாக்கே. 31

2-வது கடக லக்கினம்

முற்றிற்று.

கேது		சந்திர	
	1-வது சிம்ம ராசி		
குரு			லக்ன
சூரிய	புதன் சுக்ரன் சனி	செவ்	ராகு

1-வது சிம்ம லக்கினம்

சந்திரன் விடையில்நின்று சார்ந்திடதெரிவைராகு
புந்தியுஞ்சுங்கன்காரி புகழுறும்தேளில்பத்து
சுந்திரமன்னன்மாலில் சூழ்சிகிகண்டமேவ
விந்தையா அலரிவில்லில் வீற்றிடதுலையில்சேயும். 1

இத்தகைநவக்கோள்நின்று இலக்கினம்புவியுதித்தால்
பெத்திடுங்கிழக்குவாசல் பேசுமில்கீழ்மேல்வீதி
சத்தியம்பலத்தேரூழும் சார்ந்திடும்பேரூர்தன்னில்
உத்தமன்சனிப்பானென்று உரைத்திடுங்கந்தர்வாக்கே. 3

முன்னவனிருந்தசன்மம் மொழியுரைகந்தர்வாக்கு
பன்னகன்புணர்ந்தோன்வாழும் பாண்டியில்தெற்குவீதி
தன்னதில்சைவசேயாய் தானவன்சனனமாகி
பொன்னெடுபணிதியோங்கி புகழ்ச்சியாய்வாழுநாளில். 8

அந்தணன்நகரிற்பெம்மா னடியிணைபோற்றிசெய்தும்
சுந்தரயதிக்கன்னம் சோர்விலாதெந்தநாளும்
விந்தையாயளித்துச்செல்வன் விளங்கியேவருங்காலத்தில்
ஏந்தலேவோர்நாடன்னில் இளப்பவனடியார்தோன்றி. 4

தன்னுடபசியைமாற்றி சலிப்பிலா தன்னைநோக்கி
சொன்னதோர்பாலா நீதான் துலங்கியபின்சென்மத்தோடு
பொன்னெடுபணிதியோங்கி புகழ்ச்சியாய்வாழ்வாயென்று
அன்னவர்வாக்குகூறி அடியவர்மறையலானார். 5

பரமனுரடியார்வாக்கு பலித்துமேயின்னேனுக்கு
திரமுளவன்னுள் போக்கி செழிப்புளகஞ்சந்தன்றல்
உறமுடன்வரியபட்டு உண்மைகேளிச்சென்மத்தில்
பரவுபகாராளர்சேயா வந்தவனிவனேயாகும். 6

தந்தையின்குடும்பவர்க்கம் சாற்றுவேன்வாண்பால்ரெண்டு
பிந்தியுங்கன்னிமூன்று பேசினேன் தீர்க்கமாக
யெந்தலேசிலநாடன்னில் யியம்பினேன்சிலது நஷ்டம்
செந்திருமருகனென்கோன் செப்பியகந்தர்வாக்கே. 7

பாலகன்துணேகளாண்பால் பகருவேன் நால்வர்தீர்க்கம்
சீலமாங்கன்னிமூன்று சிறந்திடும்சிலநாடன்னில்
கோலமாம்சிலநாள்தன்னில் கூறுவேன்சிலதுநஷ்டம்
யேலவேபாலன்தீர்க்கம் இயற்றுவேனிறங்குணத்தை. 8

சாதகன்நிறங்குணத்தை சாற்றுவேன்கந்தர்வாக்கு
போதவேதீட்சையில்லான் புலேகுலேயதனில்தேருன்
ஏதவேயமுத்தநெஞ்சன் இனசனப்பிரியமுள்ளான்
காதலாமோகமுள்ளாய் கழருவேனின்னங்கேளே. 8

பொய்யுரைபகரான்மிஞ்சி புத்தியிலறிவுந்தேர்வன்
அய்யன்மேல்பக்தியுண்டு ஆகமம்நாலுங்கற்பன்
நய்யவேவார்த்தைகூருன் நவிலுமுன்கோபமுண்டு
துய்யநல்லணேவோர்நேயன் துட்டரினிணக்கம்வையான். 10

இத்தகையுடையானுக்கு யிலகிடுமணத்தின்காலம்
பத்தியேயெடுத்துச்சொல்வேன் பலிவுளயிருபான்மூன்றில்
நத்தியேயாழின்கோணம் நலமுடனுதித்தாடன்ணே
வெத்தியாமணமேகொள்வன் விளம்புவேன்புத்திரவிர்த்தி. 11

புத்திரவிர்த்தியாண்பால் புகலுவேன்மூவருண்டு
சத்தியாம்பெண்பால்ரெண்டு சார்ந்திடும்தீர்க்கமாக
வெத்தியாயிதற்குமேலாய் மேவியேநிலேயாதெண்ணு
அத்திமாமுகனுக்கிளேய அறுமுகன்கந்தர்வாக்கே. 12

யோக பலன்

பாலகன்யோகசெய்தி பகருவேன்கந்தர்வாக்கு
சீலமாம்செனனந்தொட்டு செப்பியலொருபதாண்டு
கோலமாம்பிதுர்க்குயோகம் கொண்டிடும்பணிதருவுன்
ஏலவேபொருளும்வாக்கும் எழில்நிதிதரமென்றேதே. 13

அரசர்கள்தன்னுல்லாபம் அணிபணியினத்தாலுண்டாம்
குறைவுருதவத்தின்மேலாக் கூறுகேளிருநான்காண்டும்
திரமுளபாலனுக்கு தீங்கதுவடைந்திடாது
தரமுளவித்தைலாபம் சாற்றுவேன்கந்தர்வாக்கே. 14

அதுமுதலீரெட்டாண்டும் அணுகிடும்யோகஞ்சொல்வேன்
கெதியுளபொருளும்வாக்கும் கேவலமடைந்திடாது
விதியதுவளருமென்று விளம்பியகந்தர்வாக்கு
சதியதுவந்தபோதும் சார்ந்திடாநிவர்த்தியாமே. 15

பிரபலங்கீர்த்தியுண்டாம் பின்வெகுபூமிசேரும்
அரசர்கள்தன்னுல்லாப மணிதனபெலமாயோங்கும்
குரவதுலகுவாயுண்டு குணமிலாநிவர்த்தியாகும்
இறைவன்தன்னருளினுலே யெழிலுறும்பலத்தயோகம். 16

சொல்லியவாண்டுதொட்டு சுந்தரன்வாயுள்மட்டும்
வல்லனேபெலத்தயோகம் வளர்ந்திடும்நிதிமென்மேலாய்
நல்லதுமடைந்திடாது நரிதியவில்லமேங்கும்
வில்லமும்கீர்த்தியோங்கும் விளங்கிடும்பஞ்சுமெத்தை. 17

தானியவிர்த்தியுண்டாம் தரணியில்கீர்த்தியற்பம்
கோணவனருளுமுண்டு குறித்திடும்பூமியற்பம்
ஆணிபோல்பொருளுஞ்சேரும் அணிதனம்விர்த்தியுண்டாம்
தேன்மொழியுடையகந்தர் தெளிவுறும்வாக்கிதாமே. 18

தந்தையுமீராருண்டும் தரித்திடாதரிஷ்டமாவன்
பிந்தியுமன்னேகெண்டம் பேசுவேன்எட்டாண்டுக்குள்
சுந்தரன்கெண்டகாலம் சொல்லுவன்கந்தர்வாக்கு
விந்தையாம்கெண்டமொன்று விளம்பிடஅதுவுந்தீர. 19

பண்டிதம்பலமாய்செய்ய பகன்றிடுபிணியுந்தீரும்
விண்டிடுமிவன்தன்னுயுள் விளம்புவேன்கந்தர்வாக்கு
வண்டியவறுபதொன்பான் வயதினில்சேயின்திங்கள்
கொண்டிடும்பூர்வபக்கம் குணமுளபிரதமத்தில். 20

இன்னவனுடலம்வாடி யேகுவான்கைலைக்கப்பா
வன்னியயிவன்பின்சென்மம் வழுத்துவேனூர்பக்கல்
நன்னியவிக்குலத்தில் நாயகன்ஜனனமாகி
வின்னமில்லாவின்னேன் விளங்கியேவாழ்வானுமே. 21

இந்தநற்பலனையாங்கள் யிசைந்தனன்நவக்கோளாலே
முந்தியகருமகாண்டம் முறைப்படிப்பவமொழிந்தால்
சுந்தரன்தனக்குச்சொன்ன சுகமெலாமனுபவிப்பான்
இந்திரன்சுதலாள்நேயன் இயம்பியகந்தர்வாக்கே. 22

முதலாவது சிம்ம லக்கினம் முற்றிற்று.

சந்திர		ராகு	செவ்
	2 - வது சிம்மராசி		லக்ன
சூரிய சனி குரு—சு	புதன் கேது		

2-வது சிம்ம லக்கினம்

சந்திரன்மீனராசி சார்ந்திடதனுசில்மந்தன்
புந்தியும்புவியில்துன்ன புகழ்குருஅலரிசுங்கன்
வந்திடநளியில்தேளில் வளர்சிகிலிடையின்ராகு
சுந்தரவிணையாரல் சுதனுதன்புவியுதித்தான். 1

இந்தசேய்பிறந்தவீதி யியம்புவேன்கிழக்குமேற்கு
அந்தியின்தெற்குவாசல் அதிலொருபாவில்சந்தாம்
சுந்தரகுணக்கிருழி சுகமருள்சத்திரெண்டாம்
வந்திடும்குடக்கில்தெய்வம் வளர்தனுக்காரியென்றே. 2

இந்தநல்லடையாளங்க ளிலங்கியசித்தூர்தன்னில்
தந்திரமாயன்குலத்தில் தரித்திடும்சேயாமின்னேன்
வந்ததுமாமனில்லில் வருஞ்சுதன்முன்னுட்செய்கை
சுந்தரநவக்கோளாலே சொல்லியகந்தர்வாக்கே. 3

முன்னிவன் செனனசெய்கை மொழிகுவேன்கந்தர்வாக்கு
மன்னியதேவூர் தன்னில் மறையவன் குலத்தில்தோன்றி
சென்னியாறுடையார்வைகும் செழும்பதிகணக்குபோந்து
பொன்னது அதனுல்பெற்று புகழ்பெறஇருக்குநாளில். 4

அன்னகரரசன் தானும் ஆலயத்திருப்பணிக்கு
பொன்னதுஇவன் கையீந்து பொய்யிலாக்கணக்கீதென்றுன்
சொன்னசொற்படிசெய்யாமல் சூதுகள்பலவாசெய்து
அன்னவன்சொத்திற்பாதி அபகரித்திலக்கமீய்ந்தான். 5

அரசனுமனங்குளிர்ந்து அபிஷேகம்நலமாய்செய்து
திரமுறுங்கணக்கருக்கு திறமதாய்கலையொன்றீந்து
பரதனக்கவனிசென்னி பணியொன்றுசெய்வாயென்று
தரமுறும்பணியும்பொன்னும் தடையிலாதிவன்கையீய்ந்தான். 6

வந்திடும்பணிகள்பொன்னில் நலமதைபொறுக்கிவேறு
அந்திடுமணிகள் தன்னில் அருமைசேர்விசுவனுலே
சுந்தரமாகச்செய்து சூழ்புவியரசன் கையில்
விந்தையாயளிக்கவாங்கி வியல்புறமறைக்களித்தான். 7

ஆலயப்பணிகவர்ந்த யவ்வினையிவனைச்சூழ்ந்து
மாலயன்விதித்தநாளில் மரணமுமடைந்துதண்ட
காலனுல்விதிக்கப்பட்டு கஞ்சனுல்கிட்டவந்து
பாலகனிவனுமென்று பகர்ந்திடுங்கந்தர்வாக்கே. 8

முன்னுறுபவஞ்செய்குற்ற முன்வினையிச்சென்மத்தில்
மன்னியமனைவிமைந்தர் மாதொருசெல்வமில்லை
அன்னவைதீர்க்கவேண்டி லருள் தருவாஞ்சயத்தில்
சென்னியாறுடையோனுக்கு செழிப்புறவபிஷேகித்து. 9

அன்னமுமாடைபொன்னுல் வற்புறவளித்தவ்வூரில்
மன்னியமறையோருக்கு மனமுறவன்னமீந்தால்
முன்னுறும்பவங்கள் தீரும் மூரைந்துஇன்னூல்தன்னில்
தன்னுடதனுவில்கண்டம் தந்திடாதகன்றுபோமே. 10

குடும்ப பலன்

தந்தையின் துணைகள்மூன்று ஆணென்றுகன்னிரெண்டு
வந்துனக்கின்னுளீயும் வளர்தந்தைதீர்க்கமாகும்
தன்துணைநலமதன்னுள் ஆணிரெண்டரிவைமூன்றும்
வந்திடுங்கணவனுலே வளமுறுஞ்செல்வமுண்டாம். 11

வந்தவனிருசெகப்பு வளர்த்தியிலுணத்தல்திரேகம்
சுந்தரவடிவனுகும் சுகமிகுதந்தைக்கென்னும்
தந்தமாய்க்கொடுக்கல்வாங்கல் தயிரியசமர்த்தனுகும்
எந்தநற்சபைசென்ருலு மிவன்மொழியின்பமாமே. 12

வஞ்சகவஞ்சனுவான் வார்த்தையுமிஞ்சிபேசான்
இஞ்சொவில்சோர்விராத எழில்பலவித்தையுண்டு
வஞ்சியில்பலபேர்போகம் வாங்குவனற்பமாக
தஞ்சமென்ருேரைக்காப்பன் தயவுறப்பெருமையோனே. 13

புத்திரவிர்த்தியுண்டு பெண்டீரொன்றுடையோனுகும்
உத்துடன்பூமியுண்டு வுயர்நிதிவேலையாகும்
புத்தியுமதிகமுண்டு புகழ்பெறகீர்த்தியேற்பன்
நத்தியேவந்தபேர்க்கு நயம்பெறவுரைப்பானென்றே. 14

அந்தணர்முதலாய்பல்லோர் அணேவரும்சுகித்துவாழ
விந்தையாம்மேழியில்லம் வியப்புறும்வாகனங்கள்
சுந்தரயிரதாயாவும் சுகத்தொழில்பலவாய்செய்து
வந்திடும்பொருள்கள்என்று வருதனங்கந்தர்வாக்கே. 15

தந்தையின்தந்தைநாளில் தனமொடுநிதிகளற்பம்
தந்தையும்பிறந்தபின்னுல் தன்னுடையயினத்தைச்சார்ந்து
வந்திடுங்குலத்துவித்தை வளமுறயில்லம்நேர்ந்து
சுந்தரப்பெரியோனுலே சுகமுறும்பலனுண்டாமே. 16

தன்னுடதுணையாங்கன்னி தனினளிக்கணவனுலே
அன்னமும்சொர்னமாடை அணிபணிசேயிலுண்டாம்
தன்னுடதுணையாண்பாலும் தளமொடுமணேவிமக்கள்
இன்னமும்பணிதருவும் அழகியபணிசேயுண்டாம். 17

திசா பலன்

இன்னிலக்குடும்பச்செய்கை யிசைந்தனன்நவக்கோளாலே
நன்னியதிசாபலத்தின் நயந்தணேயுரைப்பேன்கேளாய்
மன்னும்ரேவதிகால்மூன்று மகிழ்புகனரவின்புத்தி
தன்னிலேயுதித்தசேயின் தவமுரைகந்தர்வாக்கே. 18

பணியொடுமன்னன்மைந்தன் பகர்பிதுர்மணேவிநன்மை
அணிமணியாடையுண்டாம் அழகியதந்தைதன்னுல்
கணிதமும்பெரியோராலே கைப்பொருள்வந்துசேரும்
பிணியதுஅற்பமுண்டாம் பின்துணேவந்துதோன்றும். 19

அன்னவளால் தடைவந்தெய்து மற்பமும் தனமுமுண்டாம்
தன்னுடவர்க்குகண்டம் தாய்பிணியற்பமுண்டாம்
நன்னயதனுவில்கண்டம் நலமுறுக்கோளாலேகும்
முன்னுமப்பவமொழித்தால் மொழிந்தசொல்லனேகமுண்டாம். 20

சிகிதனில்தலவாசங்கள் செயமுறுமில்லமுண்டாம்
பகையிடர்வந்துநீங்கும் பாக்கியம்பலவிதத்தால்
துகையதாய்தனமுண்டாகும் துணைதனக்கின்பவேட்டல்
நகையொடுவெங்கலங்கள் நலமுறும்வித்தையோதல். 21

அங்கமும்வர்க்கப்பீடை அருளிருவருக்குகெண்டம்
சுந்தரவலறிஆலோன் சுகங்களுமெத்தவுண்டாம்
தங்கள்தன்குலத்துவித்தை தந்தையால்தனமுண்டாகும்
இங்கிதசோதிடங்கள் எழிலுளப்பிதாவாலெய்தும். 22

சீர்பெறும்கடகம்வேட்டல் செழுந்துணை தமக்குஎய்தும்
ஆரலுமறவுமன்னன் அற்புதச்செல்வமுண்டாம்
பேர்பெருங்கடகவேட்டல் பின்துணை தனக்குமுண்டாம்
ஏர்பெறும்பிதுர்வர்க்கத்தில் யெழில்சுபாசுபங்களுண்டாம். 23

மந்தனும்புந்திபுத்தி மகிழ்தந்தையரிஷ்டகண்டம்
தந்துணையொன்றுகண்டம் தாயிவன்தனக்கரிஷ்டம்
வந்திடுமொருவனாலே வளம்பெறும்நிதியுண்டாகும்
செந்திருகடாட்சமுண்டாம் சீரருள்புதல்வன்வித்தை. 24

அலரியின்மனைவிகெண்டம் அடைந்தபின்வேட்டலுண்டாம்
குலமதிலுதித்தார்கேடு கொடும்பகைசிலவுண்டாகும்
நலமிலை மாதுவர்க்கம் நற்சுபாசுபங்களுண்டாம்
பிலமுறுதந்தைகெண்டம் பிறர்மனை தனக்குகெற்பம். 25

சந்திரன்னுறல்ராகு சார்பணிமனைவிகெண்டம்
சுந்திரவில்லமுண்டாம் சுகமுளமைந்தனாலே
வந்திடும்பெரியோனாலே வளமுறும்வேலைதன்னால்
எந்தநற்றொழில்செய்தாலும் யின்பமும்பொருளுண்டாமே. 26

மன்னவமந்தன்புத்தி மக்களுக்கின்பம்வேட்டல்
கன்னியப்பணிநற்றாசு நலம்பெறவந்துஎய்தும்
மன்னியபுதல்வனென்று மாரகப்பிணியுங்கண்டம்
தன்னுடப்புதல்வன்வேட்டல் தனமதுசெலவுண்டாமே. 27

சிகியொடுசுன்னும்பானுள் சிவதலந்தீர்த்தவாசம்
நகையொடுவெங்கலங்கள் நாணயம் நற்றூசுண்டாம்
பகையிடர்தகர்ந்துபோகும் பாக்கியம்பலகால்நன்மை
துகையதாய்தனமுண்டாகும் தூய்சுதன் தன்னால்யோகம். 28

மங்கலன்றிசையதன்னில் மக்களால்சம்பத்துண்டாம்
வெங்கலம்பணிதியாடை வியப்புறும்நந்தியாவும்
பங்குறும்செய்யலாபம் பலனதுஅற்பமெய்தும்
அங்கமுமரிட்டப்பீடை யதுநவக்கோளாலெய்தும் 29

பணியோனுமன்னன்மந்தன் பாக்கியம்பலவாறுண்டாம்
அணிபணியாடையுண்டாம் அலங்கிர்தவேலையாலயம்
கணிதமாய்துகையுண்டாகும் கைப்பொருள்மகவுக்கீய்வன்
பிணியரும்பெரியகண்டம் பேசிடும்பிறகுண்டாமே. 30

அன்னமேதனுவிற்றிங்கள் அருந்தவர்தேசிதன்னில்
தன்னுடசடம்விட்டாவி தனிச்சமயுலகஞ்சார்ந்து
பின்னையும்பூமியுற்று பின்னவர்குலத்தில்தோன்றும்
மன்னிடுமனேகசென்மம் மாருறுவாகுமென்றே. 31

2-வது சிம்ம லக்கினம் முற்றிற்று.

குரு		புதன் கேது	சூரிய செவ்
	1 – வது கன்னிராசி		சுக்ரன்
சனி			
	ராகு		லக்ன சந்திர

1-வது கன்னி லக்கினம்

சந்திரன்கன்னிமேவ சனியவன்மகரந்தூவ
புந்தியும்சிகியும்நந்தி புகர்பெறமன்னன்மீனம்
சுந்தரவலரியாறல் சுகமருவீணை நண்டில்
மந்திரசுங்கன்தேளில் மகிழ்பணிகன்னியுற்றால். 1

வீதியுங்கிழக்குமேற்கு விளங்கிடும்தெற்குவாசல்
ஓதுவோம்கீழ்பால்சந்து வுயர்துலேமாயன்சத்தி
தீதிலாமகரங்காரி திகழ்தனிந்தனுவிற்சூழி
மாதுலன் இல்லந்தன்னில் மைந்தன் வந்துதிப்பனென்றே. 2

இந்தநல்லடையாளங்கள் இலங்கியசித்தூர்தன்னில்
முந்துசெய்தவத்தால்வந்த முதிர்ந்தரூத்திரன் தன்சேயாம்
சுந்தரன்முன்னுள்செய்த சூழ்வினையின்னதென்று
வந்திடும்நவக்கோளாலே வரைகுவோம்கந்தர்வாக்கே. 3

இந்தசேய்செனனமுன்னு ளிருந்தவருரைக்கக்கேளும்
சிந்துசூழ்பெண்ணேதென்பால் சீதரன் திருக்கோளூரில்
சுந்திரசாத்தாணிக்கு சுதனிவனுகத்தோன்றி
வந்தநல்செல்வமோங்கி வனமுறக்கல்விதேர்ந்து. 4

சங்கையில்லாமல்முத்து ஜவுளிபொன்நகைகள்நான்கும்
துங்கமாய்வாணிபங்கள் சுகம்பெறசெய்துநாளும்
இங்கிதசெம்பொன்மிக்க வடைந்ததால்பணிசுந்தேர்ந்து
தங்குலத்தவர்க்குமேலாய் சாற்றுமிக்குணவானுனன். 5

மணம்புரிமாதினேடு மகிழ்வுறதுணேவர்தன்னுள்
குணமருள்வேதந்தேர்ந்த குணமுளமறையோரங்கு
மணேயுளாரொருவர்வந்து பாலகனெருவனுக்கு
மணமதுபுரியசெய்கை வைத்தனன்மீடதாக. 6

வாங்கினன் நிதியுங்கொஞ்சம் வாங்கியமாதிகாலம்
மாங்கவாவந்துவன்னுள் வரைவனபக்கஞ்சார்ந்து
தேங்கியேதெரியப்பெற்று திட்டியேமுரியாவென்ன
பாங்கனற்கேடுவொன்றி பரிதியாய்முரிதந்தாய்நீ. 7

இன்றுவந்தென்னேக்கேட்டா லிவனுமேயீயேனென்று
அன்றவன் தனக்குகூற அவ்வுரையிவர்க்குச்செப்ப
இன்றுறைமோராண்டெய்து வெவ்வுரைபுகன்றுளின்னேன்
நன்றியுந்தயவில்லானுய் நற்றுணேமனதுபோலே. 8

தவத்தவன்ஈசர்க்கோதி தன்னிடையிருக்கைசார்ந்து
இவனவன் துணேவன்சொல்லே யின்புறமகிழ்ச்சிகொண்டான்
பவமதுசூழ்ந்துவந்து பலநாளும்துன்பம்தோற்றும்
மவத்துகைமலரோன்கையால் மருவியகந்தர்வாக்கு. 9

வையகந்தன்னில்மாந்தர் வயத்தினில்பிறவியாகி
செய்திடவந்தோனிந்த சிறுவனுமிவனேயாகும்
மெய்யரிசமயந்தன்னில் விளங்குமோர்சூத்திரனீன்ற
கைதவனிவனுமென்றே கனம்பெறும்சுதனென்றோதே. 10

பூசுரநினைத்தபாவம் பின்துடர்ந்திச்சென்மத்தில்
வேசரசெய்யலாகும் விளம்பிடும்கந்தர்வாக்கு
மாசரதுவர்களாட்கும் மைந்தர்கள்கன்னியர்க்குங்
பாசமாந்தரித்திடாமல் பகையுறுசெய்தாலற்பம். 11

இவையன்றியிவன்றன்னுளில் யிடுக்கங்கள்மிகவேகூடும்
அவையெலாம்தீர்த்துமுன்னும் யகற்றிடவென்றுகின்றால்
நவையுறவுள்ளன்போடு நவதிருப்பதிக்குயேகி
சுவையுறகனிபாலோடு சுகந்தஞ்சவ்வாதுபன்னீர். 12

இவ்விதமாயனுக்கு இன்புறமுடிக்கேயாட்டி
செவ்வையாயலர்மேலுக்கு கோடியரமாடையீந்து
திவ்வியஆரமொன்று தீங்கரவவற்குஈந்து
என்வினையகலவென்று யருமறைக்கன்னமீயே. 13

முற்பவமகன்றுபோகும் முதுபொருளிவனுக்குண்டாம்
சொற்படிசெய்யானாகில் சொன்னசொல்துன்பம்பூட்டும்
விற்பனன்விவேகியுள்ளன் விளங்கிடும்கந்தர்வாக்கே
சொற்பெருங்குடும்பச்செல்வஞ் சொல்விடுங்கந்தர்வாக்கே. 14

தந்தைதன்துணைகளைந்தில் தானதிலிரண்டுதீர்க்கம்
தன்துணையிரண்டிலாண்டில் தானென்றுகன்னியொன்று
பிந்தியேமாதுமைந்நர் பெண்ணென்றுவாணிலொன்று
சந்ததிதழைத்துவாழும் சஞ்சலம்பின்னால்தீரும். 15

இன்னவைகுடும்பச்செய்கை இயம்பிடக்கந்தர்வாக்கு
உன்னிதமிருசிகப்பு வுயர்ந்திடான்தூலமல்ல
நன்னயமிருதுவாகும் நயப்புறசமதிரேகம்
அன்னியகல்வியொன்று அதில்வெகுயூகவாளே. 16

வித்தையும்நாடகங்கள் விளம்புவன்வினோதவார்த்தை
புத்தியில்ஞானந்தன்னை புகலுவனறிவுள்ளோர்க்கு
சுத்தத்தார்சேர்க்கையுள்ளான் சுகமிருகுடும்பமாகும்
உத்தநற்றுணைவரெண்டில் வுயர்ந்தவனிவனுமென்றே. 17

மணையவள்மகிழ்ந்தசொல்லை மனதினிலுறுதிகொண்டு
சினமதுஅற்பமுண்டு தித்திடை திருவேயாகும்
கனவிடையுரியாள்மேலும் கணபணிகற்பின்மிக்காள்
தனதுடல்தன்னில்வாய்வு தரித்திடும்பின்னுலேகும். 18

அருமையோகுடிகளுண்டு ஆளொடுபணிதியுண்டு
செருமதியாவர்க்கேனும் சிருத்துவமுரையான்நல்லன்
வருவிழிமாதர்பேர்கள் வாங்குவனற்பமாக
வடிவுடன்கரத்திலாழி வசித்தடிவழங்குவோனே. 19

தந்தையுந்தந்தைதன்னுல் தனமொடுசெய்யிலாபம்
வந்திடும்தந்தைதன்னுல் வளமொடுசெய்யுமில்லும்
முந்தியகன்னல்செந்நெல் மொழிந்திடும்பணிதராவும்
வந்திடுங்கிராமவேலை வளமுறுந்தனமுண்டாகும். 20

தந்தைதாள்பூமிசேரும் தானதில்குணவாளற்பம்
வந்திவனுளில்பூமி வளமுறும்நிதிக்குகொள்வான்
பிந்தியவிவன்தன்னுளில் பேசிடகுணமுண்டாம்
சந்ததியைந்துண்டாகும் சஞ்சலபுத்தியுள்ளான். 21

தன்னுடதுணையாங்கன்னி தனயனுமகிழன்னேடு
பொன்னெடுபணிதிசெய்யும் புகழுறவாழ்வாளாகும்
பின்னுறுதாரமைந்தன் பெரும்புகழோடுவாழ்வாள்
அன்னவன்துணையான்வாழ்வன் அகமகிழின்பமற்பம். 22

திசாபலன்

இன்னிலக்குடும்பச்செய்கை யிசைந்தனன்நவக்கோளாலே
நன்னியதிசாபலத்தின் நயந்தனையுரைக்கக்கேளாய்
மன்னுமுத்திறமுநான்கில் மகிழ்கதிதிசையின்தன்னில்
தன்னிலேயுதித்தசேயின் தவமுரைகந்தர்வாக்கே. 23

அலரியுமாலோனுரல் அன்னையுந்தந்தைநன்மை
குலமதிலுற்றூர்கேடு கொம்பனுள்தனக்குப்பீடை
பிலமில்லையிருவர்க்கத்தில் பெரும்பிணிபாட்டன்கண்டம்
நலமுறுபணியுமன்னன் நற்பலன்தந்தைக்கெய்தும். 24

மந்தனும்புந்திக்கேது மகிழ்தந்தைவேலைதன்னுல்
வந்திடும்பலனில்நஷ்டம் வளமகிழ்கீர்த்தியுண்டாம்
சுந்தரன்சுதன்தனக்கு சுகமுறுமாமன்தன்னுல்
வந்திடும்சுகங்களுண்டாம் வழக்கொன்றுவலுவிலுண்டாம். 25

சுங்கனுமலரியாறல் சுகமுறுந்தந்தையாலும்
வெங்கலம்பணிதிதூசும் வியப்புறுநிதியுஞ்செய்யும்
தங்களிவர்க்குதெண்டம் தந்தையின் துணைவன்கண்டம்
அங்கமற்பப்பீடை அன்னையின் துணைக்கரிஷ்டம். 26

மங்களன்பிற்பாகத்தில் மாதுலன்செய்யலாபம்
இங்கிதசெய்வினைக்கு இசைந்திடும்தன்னால்வேலை
பங்கினால்பலனுண்டாகும் பாக்கியம்பலவாறுண்டாம்
தங்கையால்தனக்குஇன்பம் தன்னுமேவருக்கரிஷ்டம் 27

பணியொடுமன்னன்மந்தன் பாக்கியம்பலவாறுண்டாம்
துணியொடுகோணம்நல்ல துலங்கியகன்னிதன்னில்
யணிபணியாடையீந்து அலங்கிர்தபணமுண்டாகும்
மணியொடுவெங்கலங்கள் மருவொடுதந்தைகண்டம். 28

தந்தையுமின்னாள் தனத்தினால்வந்தசேய்கை
சொந்தமாதுலனால்கொஞ்சம் சோர்வுறவழக்குண்டாகும்
மைந்தனாலதற்கு ஈடு மனமுறசெய்வனில்லை
சுந்தரவன்னைதன்னாற் சுகம்பெறும்பின்னாலென்றே. 29

பிந்தியமாதுமைந்தர் பிலமுறவளர்வனாகும்
மைந்தனுமுதித்துஈயும் மறுபடிவந்துதோன்றும்
அந்தவூரிவனேவேலை யரசனச்செய்வானாகும்
வந்தலைவழக்குத்தீரும் வளமுறுஞ்செய்யலாபம். 30

புந்தியுஞ்சசியுஞ்சுன்னும் புகழுறுங்கீர்த்தியுண்டாம்
மைந்தனும்வந்துதோன்றி மங்கலக்கன்னிவேட்டல்
தந்தையின்சிரமம்விட்டு தவிர்ந்திடுமானசார்பால்
சொந்தமாயில்லஞ்செய்தால் சுகமுறுமன்னைதன்னால். 31

முன்னுறுஞ்சாபந்தீர்த்தால் முதித்தசேய்தீர்க்கமாகும்
அன்னையின்துணைவன்தன்னால் அணுகிடுஞ்செல்வமுண்டாம்
தன்னுடைவருக்குகண்டம் தாய்துணையரிஷ்டபீடை
பொன்னொடுமணியும்நந்தி புகழுருவழக்குமற்பம். 32

அலரியுமாலோனால் அன்னையின்தனன்னைகண்டம்
நலமுறுமகவுண்டாகும் நற்றவஞ்செய்யலாபம்
குலமதிலுற்றார்கேடு கொம்பன்னாள்தனக்கரிஷ்டம்
விலைதனக்கற்புசெய்ய விரும்புவன்வழக்குண்டாகும். 33

மன்னனைமந்தன்புந்தி மங்களம்கன்னிவேட்டல்
தன்னுடதனுவில்பீடை தாய்தனக்கரிஷ்டகண்டம்
பின்னுறுகன்னியுண்டாம் பிறந்தசேயொன்றுகண்டம்
அன்னையும்ஆடையாவும் அலங்கிர்தசெய்யலாபம் 34

சிகியொடுசுன்னும்பானும் சிவதலம்அன்னைகண்டம்
நகையொடுவெங்கலங்கள் நாணயம்பலவாறுண்டாம்
துகையதாய்தனமுண்டாகும் துலங்கியமைந்தன்வேட்டல்
இகல்பகைவந்துதீரும் எழிலன்னைதுணைக்கரிஷ்டம். 35

சுந்திரன்ஞறில்ராகு சுகுணசம்பத்துண்டாம்
நந்தியும்பணிசெய்யுண்டாம் நற்சுதன்தனக்குஇன்பம்
விந்தையாய்வண்டியெய்தும் விளங்கியதனுவில்பீடை
மந்தனுபுந்திகேது மைந்தனுல்நலமுண்டாமே. 36

தன்னுடதனுவரிஷ்டம் தையலாள்தனக்கரிஷ்டம்
மன்னியசுங்கன்பானுள் மைந்தனின்மைந்தன்வேட்டல்
சொன்னமும்பணிதூசுண்டாம் சொல்விஞலற்பநஷ்டம்
அன்னமேனுலோனுரல் அருஞ்செல்வமகவுக்கீவான். 37

மந்தனில்பணியுமன்னன் மருவியகாலந்தன்னில்
தன்னுடலினைத்துவாடும் தனித்தஆவணியாந்திங்கள்
இன்னுரைசதுர்த்திதன்னில் இச்சென்மத்தாவிநீங்கி
இந்திரன்கணத்திலெய்து மெழிலருந்தனுவிலுதிப்பான். 38

இந்தநற்பலனையாங்கள் யிசைந்தனநவக்கோளாலே
முந்தியகருமகாண்ட முறைப்படிப்பவமொழிந்தால்
சுந்தரன்தனக்குச்சொன்ன சுகமெலாமனுபவிப்பான்
இந்திரன்சுதலாள்நேயன் இயம்பியகந்தர்வாக்கே. 39

முதலாவது கன்னி லக்கினம் முற்றிற்று.

சந்திர	சனி		ராகு
	2-வது கன்னிராசி		செவ்
புதன் கேது சுக்ரன்	சூரிய	குரு	லக்ன

2-வது கன்னி லக்கினம்

சந்திரன்மீனராசி சனிதகர்தேளில்பானு
புந்தியும்சிகியும்சுங்கன் புகழ்தனுமிலையில்மன்னன்
சுந்தரக்கடகஆரல் சூழ்பணிவீணைமேவ
இந்தவாறுநவக்கோள்நின்று இலமதுகன்னியுற்றால். 1

சந்திரவாஸ்துவீதி சாற்றுரேம்குணக்குவாசல்
அந்தியிலொருபாற்சந்தாம் மரைந்தணவீணைசத்தி
சுந்தரன்கன்னியானை சூழியின்துலையில்மாரி
யிந்திரன்தனுவில்தெய்வம் யெழில்புவிக்காவாயென்றே. 2

இந்தநல்லடையாளங்க ளிலங்கியசித்தூர்தன்னில்
சுந்தரக்குலத்துவேளான் சூழ்தவசெய்யாமுன்னோன்
முந்துநாள்செய்தவத்தின் முதிர்வினையின்னதென்று
வந்திடுநவக்கோளாலே வறைகிறேன்கந்தர்வாக்கே. 3

முன்னிவன்ஜெனனம்தன்னை மொழிகுவேன்முதனூலோதி
யின்னில்த்தெவருமெச்ச யெழிற்றமிழ்ச்சுயங்கள்பாடி
யுன்னிதமறையுமற்ற வுலகுளோரெவருமெச்ச
தன்னிடத்திருந்துசெல்வம் தழைத்திடுநாளில்கேளே. 4

அன்னியமாதராலே அணிந்துட்டபிணியும்வந்து
பொன்னிறமேனிவாடி புலம்பியேதவிக்கும்போது
சொன்னசொல்பிசகிடாமல் சுகமுனியிவனைக்கண்டு
உன்னிடவியாதிநீங்கும் யொருதியான்ஈசனுக்காய். 5

நித்தமுமிரண்டுவேளை நீஆவின்பாலைவாங்கு
கத்தனின்முடியிலாட்டி கருத்துளகொடுப்பாயானல்
உத்தனல்வியாதிநீங்கும் உயர்ச்சியையடைவாயென்ருர்
சித்தம்வைத்துநித்தம் செழும்பயமுதவுநாளில். 6

பால்கொடுஈசற்கிய பலபிணிதீர்ந்துமுன்போல்
மால்மகன்போலேமேனி வடிவுளவிருத்தும்நாளில்
சேல்விழிமாதுவோர்நாள் செலும்விழியிவனைக்கண்டு
சீலனேயெனக்குப்பாலைச் சீக்கிரம்நீதாவென்ருள். 7

அன்றவன்மயக்கங்கொண்டு அவனிடபாதிபாலை
நின்றவன்கையில்பெய்யு நேரத்திலிறைவனர்க்கு
தொண்டனல்முனியுங்கண்டு சொல்லுவார்துயரமாக
இன்றுபின்புரப்பாயென்று இயம்பிடவிவனுஞ்சொல்வான். 8

ஆண்டவரடியில்வீழ்ந்து அழுதுவாய்புதைத்துபுலம்பி
ஈன்றெனக்களித்தசாபம் யெளியோனல்சகியேன்சுவாமி
பாண்டுநாள்காத்ததேவர் பக்ஷம்வைத்தாள்வாயென்னை
நீன்றமாதவரவன்றன் நிலைமையாய்உணர்ந்துசொல்வான். 9

புவிதனுலுதிக்கயோத புகழனுதனித்திட்டாவி
நவமுளபாவின்னேன் நற்பவபலன்தான்கேளு
பவமுனஞ்செய்தகுற்றம் பகர்துணைபின்னரிஷ்டம்
அவைதுணைதீர்க்கவென்ரும் அருங்கழுக்குன்றமேவி. 10

அரன்முடிக்கபிஷேகித்து அந்தணர்அறிவன்சேய்க்கு
திரமதாய்பொன்னுலாடை திருக்கரவன்னமீந்து
நரனடியார்க்குமன்னம் பரனைந்துபேர்க்குஈய்ந்தால்
வரும்பவமகன்றுபோகும் மைந்தனுந்தீர்க்கமாமே. 11

முந்தியகருணையுஞ்சொன்னேம்மொழிந்திடநிவர்த்திசொன்னேம்
தந்தையின்துணைவரேழில் தான்மூன்றுகன்னியொன்று
தன்றுணையேழில்தீர்க்கம் தானென்றுகன்னிமூன்றில்
முந்தியகன்னிரெண்டு உதித்தபின்கன்னியொன்றே. 12

அன்னவனிருசிகப்பு அளவிலாச்சதைகள்திரேகம்
கன்னலின்சுவைபோல்வார்த்தை கருதுவன்தமிழேவித்தை
மன்னியசெல்வமுள்ளோன் மகிழ்தந்தைதன்னல்செல்வம்
நன்னயமிருதுவாகும் நயமுறுமன்னைதன்னல். 13

தானுடனுலிற்பூமி தானுண்டுபிதுர்நாலுண்டு
பின்னங்குமனையுங்கொண்டு யிடப்புரவில்லுஞ்செய்து
பொன்னதார்பூமிகொண்டு புகழுளசெல்வம்பெற்று
பின்னெருமறைப்பின்பாலு பெருமிதநேயமுண்டாம். 14

வரும்பிதுர்தந்தைசெல்வம் வந்திடும்செய்யலாபம்
பெருமிகஆடுமாடு பிரபலசேர்க்கையுள்ளான்
தருமதாய்பணிநற்றூசு தார்வொடுநத்திசெய்யும்
அருமையில்கட்டிமெத்தை அமைத்திடும்தனமுண்டாமே. 15

தந்தையால்தனமும்பூமி தந்திடும்பின்னுள்தன்னில்
தன்துணைகன்னிமூத்தாள் தலைவனைச்சேர்ந்துமைந்தன்
சுந்திரப்பணிசேயில்லும் சுகம்பெறவாழ்வாளாகும்
பிந்தியதுணைவன்கன்னி பிரபலசெல்வமற்பம். 16

திசாபலன்

இன்னிலம்குடும்பசெல்வம் இசைந்தனநவக்கோளாலே
நன்னியதிசாபலத்தின் நயந்தனையுரைக்கக்கேளாய்
மன்னுத்திரட்டாதிமூன்றில் மகிழ்சனிசிகியின்புத்தி
தன்னிலேயுதித்தசேயின் தவத்தினையுரைப்பேன்கேளே. 17

ஆரலுமறுவுமன்னன் அன்னையும்தந்தைநன்மை
சீர்பெறுந்தந்தைதன்னால் செப்பினுற்பலன்களற்பம்
நேர்துணைவந்துதோன்றும் மேதினிவருக்கரிஷ்டம்
தீரமும்வித்தைபீடை இதுபிதுர்வர்க்கவேட்டல். 18

புந்தியும்சிகியும்சுன்னும் புகழுறுஞ்சேய்வந்தெய்தும்
தந்தையின்துணைவராலே தந்திடும்செல்வமுண்டாம்
பிந்தியதுணையுண்டாகும் பிதிர்மதிர்வாக்குகண்டம்
சுந்தரமலரிமாலோன் சுகம்பெறுநாளைதன்னில். 19

தந்தைபின்னடைவன்கண்டம் தந்திடும்பூமிலாபம்
முந்தியதுணைக்குநன்மை மொழிபிதுர்துணையால்நன்மை
நந்தியும்பணிசெய்யில்லம் நலம்பெறுதுணையால்நன்மை
செந்திருகடாட்சமுண்டாம் செயம்பெறுமன்னைதன்னால். 20

பணியொடுமன்னன்மைந்தன் பாக்கியம்செய்யலாபம்
அணிபணியாடையுண்டாம் அலங்கிர்தநந்தியுண்டாம்
மணியெனுந்துணைக்குவேட்டல் மருவியகன்னியாலே
அணிபிதிர்க்கிரகம்வேறு அருந்துணைசெய்யலாபம். 21

தந்தையின் துணைவிரோதம் தத்துவின் நன்மையாகும்
நந்தியும்பணிசெய்பாகம் நலம்பெறும்செந்நெலுண்டாம்
தன் துணைகணவனாலும் தந்தையின் துணைதானாலும்
சிந்திடும்கடககோணம் வளர்கன்னிவேட்டலுண்டாம். 22

வகிதனில்முற்பாகத்தில் சீர்பெறும்சுகங்களுண்டாம்
நகையொடுவெங்கலங்கள் நாணயஞ்செய்யலாபம்
இகல்பகைதுணியின்மைந்தர் இன்பமுமரிட்டமுண்டாம்
தொகையுறுமறுவர்க்கத்தில் துன்பமுமரிஷ்டகண்டம். 23

அன்னைசெய்சிகிபிற்பாதில் அரும்பிதுர்தனக்கரிஷ்டம்
மன்னையமரிஷ்டபீடை அழகியமகவுண்டாகும்
பொன்னொடுமணிநற்றூசும் புகழுறவில்லம்செய்வான்
நன்னியதீரஞ்செந்நெல் நலமுறுந்தனமுண்டாமே. 24

சுங்கனுமலரிமாலோன் சுகம்பிதிரடைவன்கண்டம்
வெங்கலம்பணிதிசெம்பொன் வியப்பதாய்சேய்வந்தெய்தும்
இங்கிதபுதல்வன்மங்கை யிவர்களாலின்பமுண்டாம்
சங்கரனருள்வந்தெய்தும் சாற்றுவோமன்னையரிட்டம். 25

ஆரலுமறவுமன்ன னற்புதசெல்வமுண்டாம்
நேர்துணைஒன்றுகண்டம் திகழ்மைந்தன்தனக்குவேட்டல்
சீர்பெறும்சேய்வந்தெய்தும் சிறுபிதுருக்குகண்டம்
பேர்பெறும்பெரியோனாலே பெறுஞ்செல்வமுண்டாமென்றே. 26

மந்தனும்புந்திகேது மகிழ்துணையொன்றுகண்டம்
சுந்தரமகவுவேட்டல் சுகம்பெறும்செய்யலாபம்
மந்திரவயித்தியங்கள் மாதுருக்கரிட்டகண்டம்
சுந்தரதனுவில்பீடை சுகம்பணிஆடையுண்டாம். 27

அலரியின்முற்பாகத்தில் அரும்பிதிர்சேய்வந்தெய்தும்
கலகமுமுற்றார்கேடு கடும்பகைதனமுநஷ்டம்
நலமுறுநந்தியாவு நற்பணிநளிநற்றூசும்
பிலமுறவந்துஎய்தும் பெரும்பகைவந்துதீரும். 28

அலரியின்பிற்பாகத்தில் அரும்பிதிர்வருக்குகண்டம்
நலமிகுபந்துவர்க்கம் நாட்டியமகவுவேட்டல்
விலைதனக்கில்லும்செய்யும் வேண்டியில்நத்தியெய்தும்
பலபலமணிதன்னாலே பாக்கியம்பலவாலாபம். 29

சந்திரனுறல்ராகு சகலசம்பத்துமுண்டாம்
நந்தியும்பணிசேயில்லும் நலம்பெறவந்துதோன்றும்
சுந்தரமங்கைகண்டம் சுகமில்லைகன்னிகண்டம்
வந்திடும்வல்வழக்கு வளர்மனைவிரையமாமே. 30

பணியொடுமன்னன்மந்தன் பாக்கியம்செய்யலாபம்
அணிபணியாடையுண்டாம் அலங்கிர்தநந்தியுண்டாம்
துணையொடுபுந்திகேது துக்கமுமகன்றுபோகும்
மணியெனும்சுங்கன்பானு மகிழ்சுதன்தன்னால்யோகம். 31

அன்னையேஆரல்தன்னில் அருந்தனுமிளைத்துவாடும்
மன்னிமாமணியுந்திங்கள் மகிழ்ந்துவர்தேசிதன்னில்
மன்னியசடம்விட்டாவி மகிழ்பிதிருலகஞ்சார்ந்து
பின்னையும்பூமிதன்னில் பிறந்திடும்வேளான்சேயே. 32

2-வது கன்னி லக்கினம் முற்றிற்று.

சூரிய சனி	புதன் சந்திர	செவ்	
சுக்ரன்	1 - வது துலா ராசி		கேது
ராகு குரு			
		லக்ன	

1-வது துலா லக்கினம்

சந்திரன்மாலோன்தகரில் சார்ந்திடவிடையிலாறல்
மந்தனுமருக்கன்மீனில் மருவிடசுங்கன்சாடி
அந்தணன்பணியுமாறல் அமர்ந்திடசிகியோனண்டில்
இந்தவாறுநவக்கோள்நின்று இலக்கினம்துலையதாகில். 1

வீதியும்கிழக்குமேற்கு விளங்கிடும்பார்வைதெற்காம்
ஓதினேன்ஒருபாலில்லம் உள்ளதுஎதிரில்சந்தாம்
நீதியாம்பிலத்திராது நிகழ்த்தினேன்மேற்பாலாக
ஆதியாமூத்தோன்கோயி லணுகிடிலென்றுகூறே. 2

இப்படியுதித்தபால னிணையுளதந்தையோடு
மைப்படிமேனியுள்ள மாலவனருளினாலே
ஒப்பிணையாகத்தாமு முதித்தவனீருராகும்
தப்பிலாஜனனகாலம் தரித்திடுமூவர்சொல்லும். 3

இன்னவன்குணத்தைச்சொல்வேன் இயல்புளகந்தர்வாக்கு
வன்னமாஞ்சிவலையாதும் மருவுமேயிடையனாகும்
தன்னதாஞ்செல்வங்கொஞ்சம் தங்கிடும்நிலமுஞ்சேர்க்கை
பின்னமாம்பிதாவின்சொத்து பெலத்திடாதென்றுகூறே. 4

தந்தையும்யூகவானும் தான்பலவயித்தியஞ்செய்வான்
வந்ததுபிற்காலத்தில் வகுத்தனன்சிலநாள்கூட்டம்
சொந்தமாம்பூமியாலும் சொல்லுவாணிபத்தாலும்
விந்தையாஞ்சீவனங்கள் விளம்பினேனிவனுக்கென்றே. 5

பாலகனிருசிகப்பன் பற்றியசமவளர்த்தி
சீலமாமெவர்க்குநேயன் சிறக்குமுன்கோபியாவான்
சாலவேதமிழுந்தேர்வன் தருமுடல்தூலம்பின்னால்
ஏலவேதெய்வபக்தி யிருந்திடுமென்றார்கந்தர். 6

நித்திரைவிருப்பன்மிக்க நீர்தனில்தோயவாஞ்சை
குத்திரைவாஞ்சைகூறான் குணமுளன்மிருதுவாக்கு
வெற்றிசேர்மனத்தோனாகும் விருப்பமாமதின்மேல்மிக்க
பெற்றவன்தனக்குநண்பன் பெலமுளசமர்த்தனாமே. 7

இவன்முனம்பிறந்தவாண்பா லிருந்திடுமொன்றுதீர்க்கம்
கவனமாம்பெண்பால்தன்னைக் கழறுவோம்பெலத்தைக்காணும்
பவமுளமிவன்கனிஷ்டன் பகர்ந்தனன்ஆண்பாலொன்று
தவமுளமுன்னாள்சன்மம் தானெடுத்தியம்பக்கேளே. 8

இச்சுதன்முன்னாடன்னி லிருந்திடுசெனனஞ்சொல்வேன்
உச்சிதவடனாடன்னில் உய்குவோம்காஞ்சிதென்பால்
மெச்சிடும்சித்தூர்தன்னில் வியப்புறும்ரெட்டியாகி
இச்சையாயுதித்தானென்றே யியம்பியகந்தர்வாக்கே. 9

ஓங்கிடவாணிபங்கள் உயர்பலஇனத்தால்செய்து
தீங்கறத்தருமவானாய் செழிப்புறவிருக்குநாளில்
பாங்குளபிரமனென்றி பகலவன்கையிலுற்ற
தாங்கியசெம்பொன்தன்னை தானிவன்பாலிலீந்து. 10

அந்தணன்நகரம்நீங்கி அருந்தவக்காசிக்கேகி
முந்தவனாயுள்போக்கி முடிந்தனனவனின்பெண்டீர்
இந்தநற்செய்கைகேட்டு ஏங்கியேயிவன்பால்வந்து
சொந்தநற்கேள்வணிந்த தோகைநிதிக்கேழ்க்குங்காலை. 11

அரத்தினன்நெறியைத்தப்பி அரிவையின்வார்த்தைகேட்டு
திரத்துடன்சொத்தேதென்று செப்பினான்மாதுகேட்டு
கரத்தொருமழுமான்வைத்த கடவுளைத்தொழுதுமீண்டாள்
தரத்துடன்பிரமன்சொத்தைத் தானிவன்மறைத்ததோஷம். 12

அந்தநற்சடமுநீங்கி யமருலகடைந்துபன்னாள்
சொந்தமாய்புக்குமிக்க சொற்பிரிபிரமன்லக்கம்
வந்தவளிந்தசென்மம் வாகுடன்நடுநாடன்னில்
இந்திரைவசியனாக யிருந்தனன்முன்னான்தோஷம். 13

செய்திடுமிடரேதென்னில் சிறுவனும்பூமிதோன்றி
நைந்திடும்வாலிபத்தில் நணுகிடுமரிஷ்டம்வாய்க்கும்
எய்திடுங்களத்திறந்தன் னாலிடாவதினாலுண்டு
செய்மிகுவல்லவந்தான் செப்புவேன்நிவர்த்திக்கேளே. 14

ஆதியாம்பரமன்றங்கு மாலையந்தனக்குப்புக்கி
வேதியர்தனக்குதானம் விருப்பமாயளித்துதீர்த்தம்
நீதியாய்முறைபோற்றோய்ந்து நிமலநின்பாதம்போற்றி
காதரமுடையதன்னாள் கற்பகவடிவைப்போற்றி. 15

உரைத்திடும்தலத்திற்புக்கி வுயர்குசன்வாரம்நோன்பு
நிரைத்திடும்ஆண்டுமட்டே நெறிமுறைத்தவறாவண்ணம்
சிறத்திவன்முடிப்பானாகில் தீவினையாவும்நீங்கும்
அரன்சுதன்வானவெங்கள் அறுமுகன்கந்தர்வாக்கே. 16

ஈரெட்டோராண்டினுள்ளாய் இவனூரிலிந்திரதிக்கில்
சீரிட்டகன்னியொன்றைச் செய்குவன்மணமேயப்பா
வாரிட்டதனத்தாள்வந்து வாய்த்தபின்செல்வஞ்சேரும்
நேரிட்டவம்மாதுந்தான் நிகழ்த்தினாளொன்பானாண்டுள். 17

விண்ணுலகடைவாள்பின்பு மேலதுக்கடுத்தவாண்டுள்
பண்ணுவன்வதுவையந்த பாவையுந்தீர்க்கமாவாள்
நண்ணியவிருமாதுக்கும் நங்கையனிருபனாகும்
எண்ணறுபுதல்வர்மூன்று யிருப்பர்கள்தீர்க்கமாக. 18

இன்னவன்பூமிதோன்றி யேறிடும்நாட்குநாளாய்
மன்னியபிறப்புதன்னால் வருந்தனன்தீர்க்கமப்பா
கென்னியமிகவேகாட்டும் கிளர்பிதுர்தமக்குநன்மை
அன்னமாஞ்செம்பொன்சேரும் அவலமாய்போகாதப்பா. 19

பதினைந்தாமாண்டுமட்டே பலனதுசமமாய்நிற்கும்
அதினந்தாமாகபின்னா லமையுமேயாவுஞ்சித்தி
விதிவந்துசூழ்ந்ததிந்த விவகாரந்தன்னால்நஷ்டம்
மதியுறுங்கந்தர்வாக்கு மகிழ்ந்துநீகேட்டிடாயே. 20

முப்பத்தினாலுமட்டும் முன்னுரைப்பலனேயாகும்
செப்பமாயதின்மேலாக சிறுவனுமாயுள்மட்டும்
தப்பிலாமிருந்தயோகம் தாட்டிகன்பிரபுவாகும்
துப்பதாய்மூவெட்டின்மேல் துலங்கிடும்விர்த்திமேன்மை. 21

தந்தைக்குமூவேழாண்டுள் தருமுடல்சிலந்திதன்னால்
வந்திடுமரிஷ்டமொன்று வருந்தினேனதுவும்நீங்கி
பிந்தியமுப்பான்ரெண்டுள் பிதுர்தனக்கரிஷ்டமொன்று
சுந்தரமுகத்தோனெங்கள் சொல்லியகந்தர்வாக்கே 22

ஈன்றமாதுக்கோ னீரெட்டோடொன்றினுள்
தோன்றிடுமுடல் சூட்டினால்கெண்டமும்
நீன்றிடுமது நீங்கிமையேழினுள்
சான்றிடுநிமை தாய்தனினாத்துமம். 23

பாலகன்றனக் காறினில்பீடைபோம்
சீலமுண்டுட னேழினில்பீடையாம்
சாலவேயிரு வாறினில்முன்பமாம்
கோலமுமைந்துள் கொண்டிருமமைப்புபோம். 24

முதலாவது துலா லக்கினம் முற்றிற்று.

	சந்திர		
சனி கேது	2 – வது துலா ராசி		
			ராகு குரு
சுக்ரன்	புதன் சூரிய செவ்	லக்ன	

2-வது துலா லக்கினம்

சந்திரன் புகரில்நின்று சனிசிகிசாடிமேவ
புந்தியுமலரியாறல் புகழ்ந்திவர்தேளில் நிற்க
சுந்தரச்சுங்கன்வில்விற் சூழ்பணிமன்னன் சிங்கம்
இந்தவாறுநவக்கோள்நின்று இலக்கினம்கோளிலுற்றால். 1

வீதியுங்கிழக்குமேற்கு விளங்கிடும்தெற் தவாசல்
ஓதுவோம்கீழ்பால்சந்து வுயர்புவிஞாங்காரன்
தீதிலாகடரையில்லம் திறந்தனுவில்லாணை
மானெனுஞ்சத்திமேட மருவிடும் சூழிகோணம். 2

இந்தநல்லடையாளங்க ளிலங்கியசித்தூர்தன்னில்
முந்திசெய்தவத்துவேளான் முயல்தவச்சேயாமுன்னேன்
முந்துநாள்செய்தவத்தின் முதிர்வினையின்னதென்று
வந்திடும்நவக்கோளாலே வரைகுரேம்கந்தர்வாக்கே. 3

இந்தசேய்செனனமுன்னு ளிருந்தவாருரைப்பேன்கேளீர்
சிந்துசூழ்பெண்ணைதென்பால் செந்திருவெண்ணெய் நல்லூர்
சுந்தரத்தோளனுக்கு சுதனிவனாகத்தோன்றி
வந்தவைசெல்வமோங்கி வளமுறக்கல்விதேர்ந்தான். 4

தங்கமோடாரமுத்து சவளியற்றிவைகள்நான்கும்
துங்கமாவாணிபங்கள் சுகமுறசெய்துநாளும்
மங்கைதன்செல்வமிக்க மடைந்தார்பெண்கள்என்று
தங்குலத்தவர்க்குமேலாய் தந்தையாய்சுற்றமிக்க 5

மணம்புரிமா தியோடு மகிழ்வுறதுணேவர் தம்முள்
குணமருள்வேதந்தேர்ந்த குணமுளமறையோர் தங்கு
பணியுளாரொருவர்வந்து பாலகனெருவனுக்கு
மணமதுபுரியசெய்யை தைத்தனனடவுதாக. 6

வாங்கினுல் நிதியுஞ்கொஞ்சம் வாங்கியசூதிகாலம்
பாங்கதுவந்துமன்னுல் அவனிவன்பாகஞ்சேர்ந்து
தோங்கியபொன் ணைப்பெற்று திட்டியமுரிதாலென்ன
ஆங்கவர்கெடுவனென்று ஆதியாய்முரிதந்தேனி. 7

இன்றிவன் துணேக்குகேடாய் ஈய்வனேஈயேனென்று
அன்றவன்தனக்குகூற அவ்வுரையவர்க்குச்செப்ப
நன்றியும்தயவில்லானுய் நற்றுணேமனதுபோலே
இன்றுரையாயம்போருன் யிவ்வுரைபுகலாநின்றேன். 8

தவத்தவனீசர்க்கோரி தன்னுடனிருக்கைசார்ந்தான்
அவற்றுநற்றுணேவன்சொல்லே அன்புடன்மகிழ்ச்சிகொண்டான்
பவத்ததுசெய்யவங்கு பலகாலும்துன்பத்துற்று
மவத்துவைமலரோன்கையால் மதுவியலக்கந்தாக்கி. 9

வையகந்தன்னில்வந்த வயதினிற்பிறவியாக
செய்திடவந்தோனிந்த சீவனுமிவனேயாகும்
மெய்சிவசமயந்தன்னில் விளங்கியசேயாமின்னேன்
கைதவன்நொந்தபாவம் பிடித்திவன்வந்தானென்றே. 10

தேசறச்செய்யும்வாரும் விளம்பிடக்கேளுமம்மா
மாசறதுணேவர்கட்கு மைந்தர்கள்கன்னியாகும்
பாசமாய்தரித்திடாது பகர்பிறசெய்யிலேகும்
வாசமாய்வடிவேலேந்தும் வறுமுகன்கந்தர்வாக்கே. 11

இதையன்றிபிதாவினுக்கு யிடுக்கங்கள்மிகவேகாட்டும்
அதையெலாந்தீரமுந்நோள் அகற்றிடவேண்டுமென்றுல்
நவையுறவுள்ளன்போடு நலந்தரும்பழநிக்கேகி
சுவையுறகனிபாலோடு கந்தஞ்சவ்வாதுபன்னீர். 12

இவ்விதம்கந்தனுக்கு இம்முடிதனக்கேயாட்டி
கொவ்வையாம்தெய்வயானே குருநிகர்வள்ளியம்மை
திவ்வியயாலஞ்சாற்றி தீங்கறசமுகத்தேத்தி
ஏவ்வமுமகலவென்று வருமறைக்கன்னம்மீயேல் 13

முற்பவமகன்றுபோகும் முதுபொருளிவனுக்குண்டாம்
சொற்படிசெய்யானுகில் சொன்னசொல்துன்பங்காட்டும்
விற்பனவிவேகமுள்ள விளங்கியயிந்நாடன்னில்
சொற்பனங்குடும்பச்செய்கை சொல்லுவோம்கந்தர்வாக்கே. 14

தந்தையின் துணைகளே ந்தில் தானதுரெண்டே தீர்க்கம்
தந்துணை நவமதன்னுள் ஆணுலுகன்னிமூன்று
வந்தவாண்பாலிலின்னேன் வளம்பெறும்மூத்தோனுகும்
முந்தியகன்னியொன்று உதித்திடுமிவன்பின்னுலே. 15

அன்னகைகும்பவிர்த்தி யறைகுவேன்கந்தர்வாக்கு
உன்னிதமிருசிகப்பு வுயரமுமுணர்த்தலாகும்
நன்னயமிருதுவாகும் நயப்பொருயிஞ்சொல்மிக்கான்
மன்னியகல்வியொன்று மதிவெகுயூகவானே. 16

வித்தையும்நாடகங்கள் விளம்புவன்தனமுமுண்டு
புத்தியால்ஞானந்தன்னே புகலுவோனறிவுள்ளோர்க்கு
சுத்தத்தார்சேர்க்கையுள்ளான் சுகமிருகுடும்பமாதி
உற்றநற்றுணையார்தன்னுல் உயர்நிதியுண்டாமென்றே. 17

சொல்லுவான்வசனமேலாய் சுத்தமாய்சொகுசுங்கொள்ளான்
வெல்லுவான்எதிரிதன்னே வீண்வழக்கோரஞ்சொல்லான்
அல்லலுமுன்னுலுண்டு அதுஇவன்பிறந்தபின்னுல்
நல்லவன்அன்னைதன்னுல் நலம்பெறும்செல்வமுண்டாம். 18

கைமுதல்பின்னுலுண்டாம் கருதுசெய்வியாபாரத்தால்
உய்வதுபூமிசெல்வம் உயர்மாதுதுணைவன்தன்னுல்
அல்லலையகற்றியில்லும் அன்புடன்செய்யுமீய்வான்
தொல்லையுமகன்றுபோகும் துணையினுல்நன்மையாகும். 19

தந்தையால்தனஞ்செய்லாபம் தாயவள்தன்னுல்யோகம்
மைந்தனுல்யோகமுண்டு மகிழ்துணைமனைவிமைந்தன்
சுந்தரமாகவாழ்வான் சுகமுறுங்கன்னிமூன்றும்
சுந்தரகணவன்தன்னுல் சுகமுறுந்துணைவருண்டாம். 20

முன்னுறும்பிதாவின்வேருய் முதிர்பிதிரில்வாழ்வன்
அன்னையும்புத்திசாலி அன்புடன்அன்னமீய்வாள்
நன்னயப்பணிநற்றூசும் நாணயயாவுநந்தி
வன்னியத்துணைவனுலே மகிழ்ச்சியையடைவாள்மாது. 21

மைந்தன்வந்துதித்தபின்னல் மருவிடும்செல்வமுண்டாம்
சுந்தரத்தோழனுக்கு சுகமுறும் அன்னைதன்னல்
வந்திடுஞ்செல்வமென்று வகுத்தனன்பலனையாங்கள்
சுந்தரதிசாபலத்தைச் சொல்லுவோம்கந்தர்வாக்கே. 22

இன்னிலக்குடும்பச்செய்கை யிசைந்தனன் நவக்கோளாலே
நன்னியதிசாபலத்தின் நயந்தனையுரைக்கக்கேளாய்
மன்னியகுதிரைரெண்டில் மகிழ்சிகிமுற்பாகத்தில்
தன்னிலேயுதித்தசேயன் தவமுரைகந்தர்வாக்கே. 23

அன்னையேசிகிமுற்பாகம் அன்னையுந்தந்தைநன்மை
மன்னியதுணைகளுண்டாம் மாதவன்தன்னல்யோகம்
அன்னையாலதிகநன்மை அரும்பிதாவலைச்சல்நஷ்டம்
தன்னுடதனுவில்பீடை தன்துணைவிவர்க்குப்போமே. 24

சுங்கனுமலரியாலோன் சுகமுறும்வித்தையோதல்
தங்கையும்தம்பியுண்டாம் தன்னுடவர்க்குகண்டம்
இங்கிதமானுலும் யெழிலுளமணஞ்செய்யுண்டாம்
மங்கலயுறவுமன்னன் மகிழ்துணைசெய்யாலுண்டாம். 25

தன்னுடவர்க்குகண்டம் தாயுடவர்க்குநஷ்டம்
மந்நியசுகங்களுண்டாம் மகிழ்துணிதந்தைநன்மை
அந்நியவழக்குசெய்தால் அணுகிடும்நன்மையுண்டாம்
நந்நயமந்தன்புத்தி நற்சிகிபலனைக்கேளே. 26

முந்தியவழக்குதீரும் வுறுதியாம்செல்வமெய்தும்
சுந்தரப்பாட்டிகெண்டம் திகமுறும்பிதாவினுலே
வந்திடும்வியாபாரத்தால் வருநிதியன்னையாலே
சொந்தமாய்நிதிகைகூடும் சுகமுறும்சுகமுண்டாமே. 27

கலனறவழக்குதீரும் கருதியவர்க்குபீடை
அலரியின்தற்பாகத்தி:லலைச்சலும்துணைக்குவேட்டல்
நலனுறுபுதல்வருண்டாம் நற்பிதுரவர்க்குநஷ்டம்
குலமதிலுற்ருர்கேடு கொடும்பகைவழக்குதீரும். 28

அன்னையாலதிகநன்மை ஆலவனுறில்ராகு
மன்னிடுஞ்செய்யலாபம் மாதுலரவர்க்குகண்டம்
கன்னியாந்துணைக்குமைந்தர் கனபிதுர்தனக்குகண்டம்
அன்னையுமரிஷ்டபீடை அழகியசெய்யலாபம். 29

மன்னவன் மந்தன்புத்தி மகிழ்துணையொன்றுகண்டம்
தன்னுடன்மாதுவர்க்கம் தந்திடும்கண்டமொன்று
மன்னியபுதல்வருண்டாம் மகிழ்பிதுர்மன்னன்கண்டம்
பொன்ளெடுவெங்கலங்கள் பூமியாலதிகநன்மை. 30

சிகியொடுசுன்னும்பானும் சிவதலம்தீர்த்தவாசம்
நகையொடுவெங்கலங்கள் நாணயவியாபாரங்கள்
பகைபிணிதுணைவன்மைந்தன் பிராணனையடைவர்கண்டம்
துகையதாய்தனமுண்டாகும் தூயன்னைவருக்குகண்டம். 31

இங்கிதற்செய்யுமாத்தி யெழில்பெருமில்லஞ்செய்வான்
சங்கரனருள்வந்தெய்தும் சாற்றுவோம்பிற்பாகத்தில்
பொங்கமாய்செல்வமோங்கி புகழ்பெறவாழ்வானென்று
திங்களையணிந்தோன்மைந்தன் திகழொளிகந்தர்வாக்கே. 32

பணியொடுமன்னன்மைந்தன் பாக்கியஞ்செய்யலாபம்
அணிபணியாடையுண்டாம் அலங்கிர்தசேயிலுண்டாம்
துணியொடுமகவும்வேட்டல் தூய்தனம்செய்யிலுண்டாம்
கணிதமாம்புதல்வனாலே கனம்பெருஞ்செல்வமுண்டாம். 33

புந்தியும்சிகியும்சுன்னும் புகலொடுகீர்த்தியுண்டாம்
சுந்தரமணைவிபீடை சுகமுறும்மகவுங்கேட்டல்
வந்திடுங்கதிக்குசெய்யும் வளம்பெறும்லாபமுண்டாம்
சொந்தமாய்துணைகள்வேருய் சுகம்பெறும்செய்யலாபம். 34

அலரியுமாலோனுரல் அற்புதச்செல்வமுண்டாம்
நலமுறும்வதனந்தன்னில் நலமுறமகவுக்கீவான்
சலமுறமானின்திங்கள் சதுர்த்தியில்சடம்விட்டாவி
நலமுறும்பிதுர்வாழ்லோகம் நாடிபின்பூமிசேர்வான். 35

2–வது துலா லக்கினம் முற்றிற்று.

			சந்திர
சனி செவ் கேது	1-வது விருச்சிக ராசி		
			குரு ராகு சுக்ரன்
	லக்ன	புதன்	சூரிய

1-வது விருச்சிக லக்கினம்

சந்திரன்வீணைமேவ சார்ந்திடபானுங்கன்னி
மந்தன்சேய்சிகியுஞ்சாடி மருவிடபுந்திகோளில்
அந்தணன்பணியுஞ்சுங்கன் அமர்ந்திடபுவியில்தானும்
இந்தவாறுநவக்கோள்நின்று யிளவனும்தேளிலுற்றால். 1

இத்தகைநவக்கோள்நின்று யிருநிலமுதித்தசேய்க்கு
பெற்றிடும்பலன்களெல்லாம் பேசுவேன்கீழ்மேல்வீதி
சத்தியம்தென்பால்நோக்கம் சார்ந்திடுமில்லமாகும்
அத்திமாமுகனுக்கிளைய வறுமுகன்கந்தர்வாக்கே. 2

சனித்திடும்பேருராகும் சாற்றுவேன்பலதெய்வங்கள்
குணிக்குமில்லடையாளத்துள் குலசவுராஷ்டவம்சம்
தொனித்திடுமிந்தபாலன் துலங்கியேசனிப்பானென்று
நவித்திடும்நவக்கோளாய்ந்து நவின்றனனின்னுடன்றே. 3

தந்தையின்குடும்பச்செய்கை தானெடுத்தியம்பக்கேளு
பிந்தியுமவனின்வர்க்கம் பேசவேவாண்பால்மூன்று
வந்திடுங்கன்னிரெண்டு வளமுடன்நிலைக்கும்செல்லு
ஏந்தலேயிதங்குமேலா யியம்புவேன்பலமுறுது. 4

சாதகன்துணைவராண்பால் சாற்றுவேன்மூவராகும்
ஏதவேகன்னியைந்தே யிலகிடும்தீர்க்கமாக
போதவேயிதற்குமேலாய் புகலுவேனினாத்திடாது
காதலையகற்றினேனே கருதியபாலன்தீர்க்கம். 5

இன்னவனிறங்குணத்தை யியற்றுவேன்மெய்யதாகும்
மன்னியவிந்தபாலன் மகிழுடாசமதேகத்தான்
வின்னமாய்நீட்சியுள்ளான் விளங்கிடுமுஷ்ணபேதி
கன்னலிஞ்சுவைபோலொத்த கழறியகந்தர்வாக்கே. 6

மனமதுவழுத்தமுள்ளான் மங்கையர்மோகனுகும்
வினமதாய்எதிரிதன்னை யின்புறசெயிக்கவல்லான்
தனமதுகையிரண்டு தரித்திடுமற்பப்பொய்யன்
முனிவிலா அரசர்நேயம் முன்சினமுள்ளோனுமே. 7

அந்தணன்தெய்வபக்தி யனுதினங்கருத்தில்கொள்வன்
ஏந்தலேதமிழுந்தேர்வன் இலகியபாஷைகற்பன்
விந்தையாய்பேசவல்லான் வெகுசனபட்சமுள்ளான்
கந்தரின்வாக்கிதாகும் கழறிடயின்னங்கேளே. 8

இன்னவன்மணத்தின்காலம் இயற்றுவேநிலேமேலப்பா
சொன்னதோர்புவியுங்கோணம் துவங்கிடவுடுத்தான்நன்னே
மன்னனேபத்தொன்பதாண்டுள் மகிழினும்மணமேகொள்வன்
கன்னலிற்சுவைபோலொத்த கந்தரின்வாக்கிதாமே. 9

இன்னிலமுடையானுக்கு யியற்றுவேன்புத்திரபாக்கியம்
நண்ணியவாண்பால்ரெண்டு நலமுளகன்னிரெண்டு
சொன்னனேயிதற்குமேலாம் தோர்விலாசனித்தபோதும்
கன்னியநிலேயாதென்று மாட்டினேனின்னுடன்னில். 10

முன்னிவனிருந்தசென்மம் மொழிகுவோம்கழுக்குன்றில்பால்
சொன்னதோர்சிற்றூரொன்றில் சூழ்குலம்வேளாளனுகி
மன்னனேதனத்தின்மேலா யனுசுதன்வாழும்நாளில்
வன்னியஊழிவந்த வாறதைச்சொல்வேன்கேளாய். 11

பொன்னெடுபணிதியோங்கி புகழ்பெறவாழுநாளில்
சொன்னதோர்பாலன்ருனும் சிநேகிதன்கன்னியொன்றும்
வின்னமாம்போகத்துய்க்க விளங்கியகருவுண்டாகி
மன்னியபண்டிதத்தால் வளமுடனதனைமாய்த்தான். 12

அவ்விததோஷந்தானு மற்புதன்தன்னைச்சூழ்ந்து
பவ்வமாயிருப்பதாலே பகருவேன்கிரியையொன்று
ஒவ்வியபாலன்ருனும் வரமுளமனையாளோடு
திவ்வியமானபாலன் திறமுளவருணைக்கேகி. 13

தீர்த்தத்தில்தோய்ந்துபின்னும் தேவியுந்தானுமாக
கூர்ந்திடுபரனைப்போற்றி குணமுளரசிதந்தன்னால்
வீர்த்திடமதலைபோல விளங்கியவுருவஞ்செய்து
ஓர்த்துளமறையோருக்கு உணவுடன்சுவையளித்து. 14

இருவரும்மனதுவொத்து யெழிலுறுமறையோருக்கு
திரமுடனுடைகந்த செப்பிடுமடைக்காயேலம்
குறைவருதானமீந்து குணமுடனுமைச்சொல்லி
உறமுடன்பொருத்தேனென்று மறையவராசிசேர்த்து. 15

இவ்விதகிரியைசெய்து எழிலுளவூனல்மீண்டு
திவ்வியசஷ்டிநோன்பு திறமுடனுண்டுமூன்று
பவ்வமாயனுஷ்டிசெய்தால் பகர்ந்திட்டபுத்திரபாகம்
ஒவ்வியேநிலைக்குமென்று உரைத்திட்டேன்யோகங்கேளே. 16

சனித்திடுஞ்சனனந்தொட்டு சாற்றிடுமொருபதாண்டு
குனித்திடும்பிதுர்க்குயோகம் கொண்டிடும்நயமதாக
கனித்திடும்தொழிலும்விர்த்தி கருதிடும்கீர்த்திமேன்மை
தனித்திடுஞ்செல்வமோங்கும் தானுறைகந்தர்வாக்கே. 17

வந்திடும்பணிதிபாத்திரம் வழுத்திவாண்டின்பமேலாய்
ஏந்தலேவோரைந்தாகு மிலகியசமயோகந்தான்
சிந்தையில்கலக்கம்நேரு சிலபொருள்விர்த்தியுண்டாம்
கொந்தலர்மனத்தனுகும் குணமுறும்யாவுநன்மை. 18

சொல்லியவாண்டினுள்ளே சுகபலன்விரையங்கொஞ்சம்
வல்லவாவந்துதீரும் வழுத்தியவாண்டின்மேலாய்
வல்லவாவொருமூன்ருண்டும் விளங்கிடும்பலத்தயோகம்
அல்லலுமடைந்திடாது வணிதனம்விர்த்தியுண்டே. 19

குலபலவிதத்தினலும் பெருகிடும்குடும்பவிர்த்தி
பலவியபதின்மேல்விர்த்தி கூறுவாயீரெட்டாண்டும்
நலமுடன்பொருளும்வாக்கும் நவின்றிடுங்கிருஷியோங்கும்
கலகமொன்றடைந்தபோதும் கனிவுடநிவர்த்தியாகும். 20

சொல்லியவாண்டின்மேலாம் சுகமுளவோரெட்டாண்டும்
வல்லவாசமயோகந்தான் வளர்ந்திடும்நாணயங்கள்
நல்லவாங்கீர்த்திமேன்மை நல்கிடும்பெரியோர்நேயம்
தொல்லையும்வந்திடாது தோணுமேமேலுங்கேளே. 21

பிரபலங்கீர்த்தியோங்கும் பின்வரும்நிதியுஞ்சேரும்
திறமையாயடுமையாட்கள் சேர்ந்திடுங்கன்றுகாலி
குறைவது அடைந்தபோதும் குணமுடன்நிவர்த்தியாக
தரை தருஞ்செல்வஞ்சேரும் சாற்றியமொழிகுன்றுது. 22

தந்தையுமிருபத்தெட்டில் தரித்திடாதரிஷ்டமாவான்
பிந்தியவன்ஐனகண்டம் பேசுவேனெருபானேமுன்
பைந்தொடிமேனியாரும் பாரும்விண்ணுலகைச்சேர்வள்
சுந்தரன்கண்டகாலம் சொல்லுவேனினிமேலப்பா. 23

உதித்ததோராண்டில்மாந்த மொருமூன்றிலைந்திலேழில்
கதித்திடுமரிஷ்டகண்டம் கண்டதுநிவர்த்தியாகும்
துதித்திடுமதின்மேலாக துவளுமேகெண்டமெல்லாம்
விதித்திடும்பண்டிதத்தரல் விளங்கிடாநிவர்த்தியாமே. 24

சாதகனுயுள்தன்னைச் சாற்றுவேனறுபதாண்டுள்
ஏதவேகும்பமாகும் இலகிடும்பூர்வபக்கம்
போதவேயுடலம்வாடி பொன்னனேகைலைசேர்வன்
தீதிலாஇவன்பின்சன்மம் செப்புவேன்கந்தர்வாக்கே. 25

கலி விருத்தம்

இன்ன வன்மறு சென்மத்தைச் சொல்லுவேன்
வின்ன மில்லா விளங்கும துரையில்
மன்ன னேயிவ னணிகுலச் சைவனுய்
தன்னல் போலிந்த காளையும் வாழ்பனே. 26

முதலாவது விருச்சிக லக்கினம் முற்றிற்று.

சூரிய	சனி புதன் சுக்ர		ராகு
	2 - வது விருச்சிக ராசி		சந்திர செவ்
கேது	லக்ன குரு		

2-வது விருச்சிக லக்கினம்

சந்திரனரல்நண்டில் சனிபுதன்சுங்கன்மேடம்
சுந்தரமன்னன்தேளில் சூழ்சிகிதனுவில்நிற்க
வந்திடும்பணியும்வீணை வளர்கதிமீனமேவ
இந்தவாறுநவக்கோள்நின்று இலக்கினம்தேளதாகில். 1

சொல்லுவேன்பாலன்வீதி சுவையொடுகிழக்குமேற்கு
மன்னரும்வடக்குவாசல் மகிழ்ந்தொருபாலிலுண்டாம்
அன்னிலம்கட்டுகோப்பு அதன் குடக்கதனில்சூழி
நன்னியஅதனையில்மாயன் நலமுற்றுமேற்கேகாரி. 2

சத்தியம்தெய்வமென்று சகம்புகழ்யானைமீனம்
முத்தியையருளுமீசன் உதித்திடும்சிற்றூர்தன்னில்
பத்தியில்மிகுந்தவேளான் பாலகன்பகருமுன்னோன்
முத்தியின்முன்னோன்செய்கை முதிர்வினையுரைப்பன் கேளே. 3

முன்னிவனிருந்தசென்மம் மொழிந்திடகந்தர்வாக்கு
பொன்னியின்தென்பாலாக புகழ்பெறும்திருவந்திதன்னில்
மன்னியவேளானுக்கு மகவெனவந்துதோன்றி
பொன்னெடுமனைவிமைந்தர் புரவிமென்பாடியில்லம். 4

அன்னகர்தனக்கு இன்னோன் அரசதுசெலுத்திவாழ்நாள்
பொன்னதால்பலவியாபாரம் பெருக்கதனால்செய்யலாபம்
தன்னினத்தவர்க்குமேலாய் தனிகனாய்வாழும்நாளில்
கன்னியால்கலக்கம்வந்த கதையதைகழறுவேனே. 5

தன்னிடமாமனீன்ற தையல்தாயாரைக்கேட்டு
பெண்ணையும்பணிதியீய்ந்துபெறும்நாளும்வைத்தார்
அன்னவனழகைக்கண்டு வணைந்திட மனதிலுன்னி
கன்னிகைகளவுசெய்து காணக்கூடாதிடத்தில்வைத்தான். 6

அன்னவன்போகவேண்டி அர்த்தராத்திரியில்சென்று
கன்னியைப்புணர்ந்துஇன்பம் கண்டுபின்னில்விற்சேர்வாள்
தன்னுடன்மாமன்மாமி தையலைத்தேடிக்காணுர்
யின்னனம்செய்தாரோவென்று இரங்குநாளந்தநாளில். 7

பொன்னதைப்பணிதியீந்த புகழ்பெறுவேளான்வந்து
கன்னியின்தந்தைதாய்க்கு கழறிடக்கன்னிதன்னை
இன்னகர்தன்னில்யாரோ இருட்டினில்களவுசெய்தான்
அன்னவன்தன்னைவிசாரித் தரும்பொருள்தருவேனென்ருன். 8

இவ்வுரைகேட்டன்னோர்கள் இசைத்திலாமறியல்செய்தார்
அவ்வுரைஇவளுங்கேட்டு அறைகுவேனன்றேமாதே
வொவ்வியுமுக்கேயீந்தோம் வுறமுறையாவுங்காண
யிவ்விதிதனக்கேயாங்க ளெய்திடும்கருமமாதோ 9

என்றுமேகனிந்துகூவம் யிறுதியுமக்கரிஷ்டம்
சினமுடன்ஆளையறி செல்கெனவோட்டிவிட்டான்
மனதுயரகன்றடைந்தான் மணமதுதவிர்ந்ததாலே
சினத்துமுன்னறனுக்கோதி செய்யிலாதடைந்தானில்லம். 10

கன்னியும்கருவுண்டானுள் கருவதையழிக்கச்சொன்னுன்
அன்னவள்தன்னுற்றுன்ப மடைந்ததுமெத்தவுண்டு
பின்னையுமவனைச்சேர்ந்து பெருஞ்சிசுவருக்கத்தோடு
அன்னவள்தன்னைச்சூழ்ந்து யரும்பிணியதனுல்மாய்ந்தான். 11

சண்டனுருலகிற்சார்ந்து சாற்றுநாள்நரகடைந்து
முண்டகத்தோன்கையால் முதிர்விதியமத்திவிட்டான்
கண்டெனுமொழியினுளை காணவுமிவனுமின்னேன்
பண்டுசெய்பாவத்தாலே பாலகனிவன்தானுமே. 12

இந்தநற்சின்னுள்தன்னில் இணங்கிடும்குத்தம்கேளு
சுந்தரமனைவிமைந்தர் சுகங்களைச்சோர்வுசெய்யும்
வந்திடும்அவத்தைநீங்கி வளம்பெறவேண்டுமானுல்
வந்திடும்கன்னிதென்பால் வாஞ்சியமதனிற்சென்று. 13

அன்னமேதேளின்திங்கள் ஆதியின்வாரம்தன்னில்
சென்னியாறுடையானுக்கு சிறப்புடனபிஷேகித்து
மன்னியவெள்ளியாலே மதனைப்போல்பலமுமொன்றால்
நன்னயமாகச்செய்து நான்மறைக்கன்னிக்கீயே. 14

அந்தணர்நூறுபேர்க்கு மன்னமுமன்பாய்ச்செய்தால்
முந்தியபாவம்நீங்கும் உதித்தசேய்தீர்க்கமாகும்
சுந்தரமனைவிதீர்க்கம் சுகமுறும்தந்தையாலும்
முந்தியதமரினாலும் வுறுதியாய்ச்சுகமுண்டாமே. 15

அன்னைகேள்தந்தைமூன்றில் ஆணதிற்றலைவன்தந்தை
தன்னுடதுணைநவத்துளாணிரண்டரிவைமூன்றில்
உன்னதுங்கன்னியொன்று ஊழ்வினைக்கின்னுள்மாயும்
மன்னியதந்தைதன்னால் மகிழ்பணிசெய்யுமுண்டாம். 16

இன்னிவன்குடும்பத்தேர்க்கை யியம்பிடகந்தர்வாக்கு
வுன்னிவமிருசிகப்பு வுயர்ந்திடென்றூலமல்ல
நன்னயமிருதுவாகும் நயப்புளான்சமைந்ததிரேகம்
உன்னிதக்கல்வியொன்றில் வுரைப்பதில்சமர்த்தனுவான். 17

வித்தையுமற்பமாகும் விண்வார்த்தைவம்பிற்செல்லான்
புத்தியில்பெரியோர்நேயன் புகலுவனற்பகோபி
சுத்தத்தாற்சேர்க்கையுள்ளான் சுகமிகுதுடும்பமாகும்
உற்றனற்றுணைவரோடும் உயர்ச்சியாய்வாழ்வானன்றே. 18

அன்னையின்கிருபையாலே அயிஸ்வரியமிவனுக்குண்டாம்
தந்தையின்செய்யில்லாது தமயனால்பூமிகொள்வான்
வந்திடுமதனுலின்பம் வளமதுமெத்தவுண்டாம்
சுந்தரன்கட்டில்மெத்தை சுகம்பெறவனுபவிப்பான். 19

தந்தையின்புகழைச்சொன்னோம் தன்துணைமூத்தோனுக்கு
சுந்தரமனைவிமைந்தர் சுகம்பெறும்செய்யலாபம்
வந்திடும்கன்னிமூன்று வளம்பெறக்கணவனோடும்
சுந்தரமாகவாழ்வான் சுகமுறும்புதல்வருண்டாம். 20

அன்னையுங்கற்பின்மிக்காள் வழக்குள்ளாளன்னமீய்வாள்
சொர்னமும்பணிநற்றூசும் சுகம்பெறும்தந்தைதன்னால்
மன்னியமைந்தராலே மகிழ்ச்சியும்செல்வமுண்டாம்
தன்னிடதுணையேழைந்தில் தானிரண்டரிவைமூன்றே. 21

திசா பலன்

இன்னிலங்குடும்பசெல்வ மிசைத்தன நவக்கோளாலே
நன்னியதிசாபலத்தின் நயந்தனையுரைக்கக்கேளாய்
மன்னியபூசம்நான்கில் மந்தனில்லரவுபுத்தி
தன்னிலேயுதித்தசேயின் தவத்தினையுரைப்பன்கேளே. 22

பணியொடுமன்னன் தன்னில் பருந்தந்தையன்னைநன்மை
பிணியுறும்சிறியதந்தை பெரும்பகைசெய்வானுசம்
மணியெனச்செந்நெலுண்டாம் மாதுலன்வர்க்கபீடை
கணியெனுங்கந்தர்வாக்கை காசினியிலுரைத்திடாயே. 23

புந்தியும்சிகியும்சுன்னும் புகழுறும்வித்தையுண்டாம்
வந்திருவருக்கரிஷ்டம் வளங்களும்செய்யலாபம்
தன்துணை தனக்குண்டாகும் தானியம்விர்த்தியுண்டாம்
தன்துணை தனக்கரிஷ்டம் சார்வொடுபணிதிகூரும். 24

அலரியனுலோன் ஆரல் அற்புதச்செல்வமுண்டாம்
கலகமுமற்பமுண்டாம் கதித்தஆண்தனக்குவேட்டல்
நலமுறுமவர்க்குவேட்டல் நற்பணி நளினமற்றூசும்
பிலமுறுதந்தையன்னை பெறுங்கண்டம்சிலவுண்டாமே. 25

தந்தையின்துணைவன்கண்டம் தையலாள்பாகம்வேரும்
பிந்தியதந்தையாலே பெரும்பகைவந்துசேரும்
மைந்தருமக்களோடு மருவருந்துணைவர்நன்மை
தந்தையால்வழக்கையெல்லாம் தனியராய்தனினுல்வெல்வான்.

பணியொடுமன்னன்மந்தன் பருந்துணைதனக்குன்மைந்தன்
அணிபணிஆள்களாலும் அமர்ந்திடுவழக்குந்தீரும்
துணியொடுதுணைக்குவேட்டல் துக்கமுமகன்றுபோகும்
மணிபொன்னும்துணைக்குமைந்தர் மகிழ்தந்தைவாய்வால்பீடை.

மைந்தனுக்கரிஷ்டப்பீடை மகிழ்கன்னிமங்கலங்கள்
சுந்தரசிகிமுற்பாகம் சுகமுறும்தலவாசங்கள்
வந்திடுபணிதராவும் வளம்பெறுநந்திதூசும்
தந்தையினரிஷ்டப்பீடை தாயவள்தனக்கரிஷ்டம். 28

அன்னமேதீர்த்தவாசம் அரும்பணிசெய்யலாபம்
மன்னரால்நன்மையுண்டாம் மங்களம்தனக்குவேட்டல்
தன்னகர்கணக்குவாங்கல் தாரமும்வந்துசேரும்
பொன்னுறும்செந்நெல்தன்னுல் புதைவதும்பின்னுலுண்டாம். 29

வன்னியபிற்பாகத்தில் மாதுருவருக்கண்டாம்
கன்னியும்பெறுவாள்பிள்ளை கனம்பெரும்தந்தைவாய்வால்
அன்னியதலமும்தீர்த்தம் அருந்திடும்சிலவுண்டாகும்
அன்னமேஅமரர்லோகம் அடைகுவன்தந்தையென்றே. 30

சுங்கனுமலரிமாலோன் சுகமுறும்புதல்வர்கன்னி
இங்கிதமாகவெய்தும் யெழிலுள்ளபூமிசேரும்
பங்கதுபாகமாக பகருவன்பலகால்லாபம்
தந்தையாலரிஷ்டம்தந்தை தன்துணையருக்குகண்டம். 31

ஆரலுமாலோன்மன்ன னற்புதசெல்வமுண்டாம்
ஏர்பெறுதுணைவன்மூத்தோன் பிலமரப்பாதுமீய்வன்
சீர்பெருமனைவிமக்கள் செம்பொன்னும்நந்திஆவும்
தார்மொழிசெய்யின்னுளும் தன்தனமுண்டாமென்றே. 32

மைந்தனுக்கின்பம்வேட்டல் மகிழ்கன்னிதனக்குவேட்டல்
மைந்தனும்புந்திகேது மக்களால்செல்வமுண்டாம்
தன்துணைதனக்கரிஷ்டம் தாய்குலம்அடையுங்கண்டம்
செந்திருகடாக்ஷத்தாலே செய்யிலும்பலமாய்ச்செய்வன். 33

அலரிவில்தந்தைவர்க்கம் அடைந்திருவர்க்குகண்டம்
நலமிகுபுதல்வன்கண்டம் நற்றுணையொன்றுகண்டம்
கலகமுமதிகமாகும் கனதனச்சிலவுண்டாகும்
இலமுறும்பிற்பாகத்தில் பிரபலன்துணைவரிஷ்டம். 34

தனதனுவதனிற்பீடை தையலால்தனக்கரிஷ்டம்
சுகமிகுமதனுல்கண்டம் துன்பமும்பிணியுஞ்சேரும்
சுந்திரசுபங்களுண்டாம் சுகமுறுமைந்தனலே
தந்தையினருளால்செய்யால் தனமதிரெண்டாமென்றே. 35

மன்னனுமந்தன்புத்தி மருவிடுமரிஷ்டகண்டம்
சென்னியாறுடையான்தன்னல் சீக்கிரமகலவேண்டும்
மன்னியபுதல்வன்தன்னல் மகிழ்ச்சியையடைவான்தாதை
முன்னுறுதமையன்கண்டம் உதித்தசேயரிட்டமாமே. 36

ஆரலின்திசையதன்னில் அற்புதச்செல்வமுண்டாம்
பேர்பெருங்கீர்த்தியாவும் பெற்றுளபுதல்வன்தன்னல்
சீர்பெரும்பிற்பாகத்தில் சிறுபிணிதனக்குண்டாம்
கோரமாய்வாய்வால்தேகம் குறுகிடுமனையவர்க்காம். 37

அன்னமேபிற்பாகத்தில் ஆவணிதிங்கள்தன்னில்
நண்ணுதனலிவாலிந்த நற்சுதன்சடம்விட்டாவி
பின்னுறும்பிதுர்வாழ்லோகம் புகழுதுமிருந்துபூமி
தன்னிலேவணிகன்சேயாய் தனுவதுஎடுப்பானென்றே. 28

2-வது விருச்சிக லக்கினம் முற்றிற்று.

	ராகு	சந்திர சனி	
	1 - வது தனுசு ராசி		
சூரிய புதன்			குரு
லக்ன	சுக்ர	கேது	

1-வது தனுசு லக்கினம்

சந்திரன்காரிபுல்லம் சார்ந்திடத்தகரில்ராகு
புந்தியுமலரிபானில் புகழ்துலைசிகியுமேவ
சுந்தரமன்னன்புவியில் சூழ்ந்திடதேளில்சுங்கன்
இந்தவாறுநவக்கோள்நின்று இளவலும்வில்லிலுற்றால். 1

வீதியும்கிழக்குமேற்கு வீடதுமேன்பால்நோக்கு
ஆதியேதென்பாலாக அமர்ந்திடும்தீயுமாகும்
ஓதினேனரனின்கோட்ட முற்றிடுஞ்சேயின்ராசி
நீதியாம்பலதேசூழும் நிறைந்திடும்சமவூர்தன்னில். 2

உதிப்பன்காராளனாக உண்மைகேளிவனின்யோகம்
பதித்திடுந்தந்தையோகம் பாரியஅன்னையோகம்
விதித்திடுமிவன்முன்சன்மம் விளங்கியபலன்களெல்லாம்
கதித்திடும்நவக்கோளாலே கழறுவேன்கந்தர்வாக்கே. 3

முன்னிவனிருந்தசென்மம் மொழிகுவேன்முற்றுங்கேளு
அன்னையேவருகன்பக்க லணுகியசித்தூர்தன்னில்
நன்னயச்செட்டியாக நலமொடுவாஸ்திபூஸ்தி
தன்னிலேமிகுத்துஇன்னோன் தரையிலேவாழும்போது. 4

பந்துவெண்மணிகள்கொண்டு பாரினில்கடைகள்வைத்து
உன்னிதமாகநாளும் உறுதியாய்வாழும்போது
கன்னியாளொருத்திதானும் கற்புடமாதுவந்தாள்
நந்நயவிவன்கடைக்கு நல்மணிவாங்கவந்தாள். 5

கன்னியைப்புணரவென்று களிப்புடனிச்சைகூற
அன்னவள்கோபங்கொண்டு அற்புதமுடியாதென்று
வின்னமாபலாத்காரத்தால் விரும்பியேபோகந்துய்த்தான்
பொன்னொடிகரத்தாள்நொந்து பூமியில்படிந்துசொல்வாள். 6

பாவியேயென்னை நீயும் பகரொண்ணாகொடுமைசெய்தாய்
நோவதாய்செனனந்தோறும் நுவல்சுதனற்றுமண்மேல்
தாவியேதனபிமாய்தான் மேகரோகங்கொள்வாய்
காவிகன்மாதுகூறி கடுகெனகுளத்தில்வீழ்ந்து. 7

உயிரதைமாய்த்துக்கொண்டு வொண்டொடிபதவிசேர்ந்தாள்
வாயிலமாமாதுசாபம் வதக்கலப்பாலன்றன்னை
நலமொடுசூழவின்னோன் நவிலுவேன்மரணமாகி
பயணமாய்நரகிற்புக்கி பாலனும்வருத்தமானான். 8

பிரமனுமனமிரங்கி பேசுவேன்சலிக்காவிட்டால்
மரமதுசெய்தவின்னோன் வழுத்துவேனிவனேயப்பா
பெருமையாஞ்சாபந்தானும் பேசுமிப்பாலனோடு
உரிமையாயிருப்பதாலே வுரைப்பனேகிரியைகேளே. 9

சேர்ந்ததோர்மறையோர்க்கன்னம் சோர்விலாதீந்துபின்னால்
நந்நயவாடைதந்தால் நாடாதுமுன்னாலூழி
அன்னதுசெய்யானாகி லவனுடல்மேகம்வாய்க்கும்
நன்னயமனைவிசாவாள் நலம்பெரும்சுதனில்லாதே. 10

தந்தையின்துணைகளாண்பால் சாற்றுவேனேகனாதும்
பிந்தியும்கன்னிரெண்டு பேசுவேனிதற்குமேலாய்
ஏந்தலுஞ்சனித்தபோது இருந்திடாதரிட்டமாகும்
கந்தரின்வாக்கீதென்று கழறுமிவ்வொளிகுன்றாது 11

சாதகன்றுணைகள்தன்னைச் சாற்றுவேனினிமேலாக
ஏதவேயாண்பானாலு மிலகிடுங்கன்னியொன்று
போதவேயிதற்குமேலாய் புத்திரர்சனித்தபோதும்
நாத்தியாபோகுமென்று நவின்றிடுங்கந்தர்வாக்கே. 12

இன்னவன்மற்றகால மியம்புவேனினிமேலப்பா
மன்னனேயிருபானெட்டுள் மங்கையாழ்மாதுவொன்று
தன்னியன்மனமேகொள்வன் சாற்றியமொழிகுன்றாது
சொன்னயபுத்திரவிர்த்தி சொல்லுவேன்கந்தர்வாக்கே. 13

நித்திரைப்பிரியனவன் நீரினிற்ரேயவாஞ்சன்
சத்தியம்பிறர்சொற்கேழ்ப்பன் சாருநன்மனத்தன் பாரு
வெத்தியவழக்குதன்னை விளங்கிடச்சிக்கவல்லன்
பித்தமாம்தேகியாவன் பேசவேனின்னங்கேளே. 14

பாலகனிருசிகப்பன் பகருவேனூகைசாலி
சீலமாஞ்சிவத்தின்மீதும் சிவனடியார்கள்மீதும்
கோலமாம்பக்தியுள்ளான் கோபங்களணுகிடாது
வேலினைக்கையிலேந்தும் விளம்பியகந்தர்வாக்கே. 15

இசையதிலிச்சையுள்ளான் இனசனப்பிரியன்மிக்க
வசையதாயொருவர்தன்னை மைந்தனுங்கூறமாட்டான்
நிசமதைப்பகர்வான்மிஞ்சி நீட்டுவேன்பொய்பேசானே
கசமுகன்தனக்கிளைய கதிர்வடிகந்தர்வாக்கே. 16

திசா பலன்

இன்னவன்யோகந்தன்னை யியற்றுவேனினிமேலாக
மன்னனே தந்தைக்கேதான் மறுகியலொருபதாண்டு
பொன்னனேகிருஷிதன்னால் பொற்புதன்தனக்குயோகம்
நன்னயமாகவாக்கும் நவிலுவேன்கன்றுவாவி. 17

பொன்னொடுபணிதியாகும் பூமியால்பலனுண்டாகும்
வின்னமொன்றணுகிடாது விளம்புவேன்தனமேற்பத்தும்
நன்னயகுடும்பவிர்த்தி நல்லோர்களுறவுவாய்க்கும்
சொன்னனேகிருஷியோங்கும் சோர்விலாதினமேற்பத்தும். 18

பாலகன்தனக்குயோகம் பாங்கதாயோங்கும்பாரு
சாலவேபொருளுஞ்சேரும் சஞ்சலமடைந்திடாது
கோலமாயதின்மேலைந்துங் கூறுநற்பலனைக்கேளு
காலனையுதைத்தோன்மைந்தன் கழறியகந்தர்வாக்கே. 19

அதுமுதல்தசமதாண்டு மணுகியபலனைக்கேளு
கெதமுளதனங்கள்வாய்க்கும் கேவலமடைந்திடாது
விதியுளகிருஷியோங்கும் வித்தகன்தனக்குசெல்வம்
பதியிலேவாய்க்கும்பாரு பகர்ந்திடுங்கந்தர்வாக்கே. 20

வகாரவித்தையுமேவாய்க்கும் வளமுளபெரியோர்தன்னால்
சிகாரமுந்தெரிவான்பாரு சிறுவனும்யோகசாலி
பகாரமாயெடுத்துச்சொன்னேன் பாலகன்பலன்களெல்லாம்
அகாரமாமதின்மேல்போற்ற வற்புதன்வாழ்வான்பாரே. 21

சொல்லியவாண்டுதொட்டு சுகமுளவாயுள்மட்டும்
வல்லனே நல்லயோகம் வாய்த்திடுமென்றுகூறு
அல்லலுமடைந்திடாது யவனுமேயோகவானும்
நல்லவாங்கன்றுகாலி நலமுடன்சேரும்பாரே. 22

இவனுடதந்தைகால மியற்றுவேன்முப்பானைந்துள்
கவனமாய்க்கயிலைசேர்வான் கழறுவேனன்னைகாலம்
சிவனதுவருளினலே செப்புவேனுற்பானுண்டுள்
இவனுமேகையிலைசேர்வ னியற்றுவேனிவன்காலம். 23

அறுபத்திரெண்டாமாண்டு ளரிவையின்தாதன்தன்னில்
திரமுளபூர்வபட்சம் செப்பியவருக்கன்வாரம்
மரமுதுதுதிகைதன்னில் மைந்தனும்வயிறுபோக்கால்
விரதமாய்க்கைலைசேர்வன் விளம்புவேனிவன்பின்சென்மம். 24

பாலகன்பிறந்தசென்மம் பகருவேன்கந்தர்வாக்கு
சீலமாஞ்சேதுதன்னில் அசப்பியமறையோனுக
நீலமாஞ்சனித்துவாழ்வு நீட்டுவேனுபாயசாலி
போலவேபிசகிராதே புரிந்தனன்கந்தர்வாக்கே. 25

முதலாவது தனுசு லக்கினம் முற்றிற்று.

	செவ்	கேது	
சந்திர	2-வது தனுசு ராசி		
சூரிய சுக்ரன் புதன்			
லக்ன	ராகு	குரு	சனி

2-வது தனுசு லக்கினம்

சந்திரன்சாடிமேலே சனிபெருங்கன்னிதன்னில்
சுந்தரவல்லிசுங்கன் சூழ்புதன்மானிற்றேளில்
வந்திடும்பணியிநந்தி வளர்சிகிதுலையில்மன்னன்
சுந்தரமேடமாரல்சுதனவன்தனுவிதித்தால் 1

இந்தசேய்பிறந்தவீதி யியம்புவேன்கிழக்குமேற்கு
அந்தமில்தெற்குவாரம் அதின்குடக்கதனில்சந்தாம்
சங்கரத்துலேயில்மாயன் சூழ்கரிசத்தியொன்று
வந்திடுங்குடும்பங்காரி வாழ்சத்திகடகஞ்சூழி. 2

இந்தவாரிசைந்தேகாட்டி விணங்கியபலத்தைத்தீர
சொந்தநற்குடும்பச்செல்வம் சொல்லிடக்கேளுமேலும்
தந்தையின் துணை நவத்துள் ஆறென்றுகன்னியொன்று
தந்துணையைந்துதீர்க்கம் தானென்றுமுன்னேறென்றே. 3

அன்னவனிறஞ்சிகப்பு அளவிலன்சமமேதிரேகம்
கன்னலின்சுவைபோல்வார்த்தை கருதுவானினியபாஷை
மன்னியசெல்வமுள்ளான் மகிழ்தந்தைதன்னுல்யோகம்
நன்னயமிருதுவாகும் நலமுளான்சேனைதன்னுல். 4

வரும்பிதுர்பூமிசெல்வம் வகுக்குரோமதணைக்கேளும்
திருவருளிதனுலுண்டு செயம்பெறுசெய்யலாபம்
வருவரைவசித்துவெல்வன் மனதினில்யூக வானும்
சிறுவணையுறவுகொள்ளான் சினேகிதநேயனுகும். 5

தன்னுடநாளில்பூமி தானுண்டுபிதுர்நாடுண்டு
பின்னங்குமணையுங்கொண்டு பிரபலவில்லஞ்செய்வான்
பொன்னுதார்பூமிகொண்டு புகழுளசெல்வம்பெற்று
பின்னெடுபிறப்பின்பேரில் பெருமிகநேயமுண்டாம். 6

நற்சுகம்தந்தைசெல்வம் நலம்பெருபகைக்கக்கேளாய்
எற்புரிதாகஅங்கு வெழிலுறவில்லமெய்தி
சொற்பிசகன்றிபல்லோர் சுயமதியுள்ளோர்நேயன்
உற்பனவிவேகத்தாலே வுயர்செல்வம்பெற்றுவாழ்வான். 7

வரும்பிதுர்செல்வமற்பம் வண்டியும்நந்தியுண்டு
பெருமிதயாவுமாகும் பிரபலசேர்க்கையுள்ளான்
குருவொடுமறையோர்பல்லோர் குணமறிந்தீயவல்லான்
அருமையாம்கட்டில்மெத்தை அழகுளமனிதராவும். 8

தந்தையும்தனமுமற்பம் தனித்தசேயில்லமுண்டாம்
தந்தையின்தாரமைந்தன் தனமொடுபுதல்வரோடு
சுந்தரமாகவாழ்வார் சுகந்தருமவன்றன்நாளில்
வந்திடுமிரண்டாந்தாரம் மைந்தனிலொருவன்யோகம். 9

முந்தியதாரமுன்னோன் முதிந்ததுக்கங்கொடாது
பிந்தியமைந்தன்தன்னால் பிலத்திடும்பூமிசெல்வம்
வந்திடும்வழக்கைவெல்வான் வளம்பெறுஞ்செந்நெலுண்டாம்
பிந்தியமனையாள்தன்னால் பெருஞ்செல்வமுண்டாமென்றே. 10

தந்தையின்புகழைச்சொன்னோம் தன்னுடதுணையில்மூத்தோன்
சுந்தரச்செல்வம்யாதும் சொல்லுவோமவன்குறிப்பில்
பிந்தியவன்னைமைந்தன் பிலமில்லையொன்றுகண்டம்
வந்திடும்துணைகளொன்று வளர்த்தினைக்குறிப்பில்சொல்வோம்.

அன்னையும்புத்திசாலி அம்மையிலடைவாள்கண்டம்
பின்னுறுமாதுநல்லாள் பெற்றதாய்சமதையாகும்
அன்னவன்தன்னால்யோக மடைந்திடும்செல்வமுள்ளான்
தன்னுடகணவன்சொல்லைத் தடையிலாநடத்தைசெய்வாள். 12

திசாபலன்

இன்னவன்குடும்பச்செல்வ மிசைந்தனன் நவக்கோளாலே
நன்னியதிசாபலத்தை நயந்தனையுரைக்கக்கேளாய்
மன்னியசதையமொன்றில் மகிழ்பணிமன்னன்புத்தி
தன்னிலேயுதித்தசேயின் தவமுறைகந்தர்வாக்கே. 13

மன்னவன்மந்தன்புத்தி மாதவள்பிணியால்கண்டம்
தன்னுடதுணையில்நன்மை தந்தையின்வர்க்கந்தீதாம்
பின்னுறுசுகமுண்டாகும் பிறதுணையின்மாதுகண்டம்
சொர்னமும்செய்யுமுண்டாம் சோர்விலாக்கந்தர்வாக்கே. 14

சிகியொடுசுன்னும்பானும் சிவதலம்தீர்த்தவாசம்
நகையொடுவெங்கலங்கள் நாணயஞ்செய்யுண்டாகும்
பகையிடரதனலுண்டாம் பாக்கியஞ்செய்யலாபம்
பிகலுறுதுணையுண்டாகும் யிருவர்க்குசுபாசுபங்கள். 15

தந்தனுவர்க்கப்பீடை தந்துணைநஷ்டமாகும்
வந்தநற்வழக்குதீரும் வருமதியில்லந்தன்னிற்
சுந்தரதுணையுங்கண்டம் சுகம்பெறவர்க்கநன்மை
பிந்தியதுணையுண்டாகும் பெருந்தமயனுக்கரிஷ்டம். 16

மன்னவன்மந்தன்புந்தி மாதுலனவற்குநன்மை
தன்னுடன்வர்க்கவேட்டல் தனமுறுமுன்னோன்வேட்டல்
தன்னுடதனுவில்பீடை தந்தைதாயரிஷ்டப்பீடை
செந்நெலும்செல்வமுண்டாம் செப்பியகந்தர்வாக்கே. 17

சந்திரன்ஆறில்ராகு சகலசம்பத்துமுண்டாம்
தந்தையின்வர்க்கங்கெண்டம் தந்தையுமடைவன்கண்டம்
பிந்தியமாதுமைந்தன் பிரபலமணங்களுண்டாம்
வந்திடுமில்லந்தோன்றும் வளம்பெறப்பிரித்துவாழ்வாள். 18

மந்தனும்புந்திகேது மற்றந்ததுணைவர்க்கங்கள்
சுந்தரமைந்தன்கன்னி சுகம்பெறவந்துதோன்றும்
சிந்தையிலெண்ணம்போலே செய்வதையறிந்துசெய்வான்
தன்துணைவிரோதத்தாலே தனமதுசிலவாமென்றே. 19

சுங்கனுமலரிதன்னால் சுகமிலைதந்தைவர்க்கம்
அங்கமில்லற்பப்பீடை வற்பலபகையுண்டாதல்
வெங்கலம்பணிதிசெம்பொன் வியப்புறச்செய்யாலெய்தும்
தங்கள்தன் இனத்தாராலே சலிப்பதுவந்துநேரும். 20

சந்திரனாரல்ராகு சார்ந்தசித்தன்னைகண்டம்
மைந்தற்குமணமுண்டாகும் மங்கையர்தனக்குவேட்டல்
பிந்தியதாரமைந்தன் பிரபலமாம்மனைவிகெண்டம்
சந்ததியொன்றுநஷ்டம் சகலரும்புகழவாழ்வான். 21

மன்னவன்புந்திகேது மாரகப்பிணியரிஷ்டம்
தன்னுடதுணைக்கரிஷ்டம் தையலாள்துணைக்கரிஷ்டம்
பின்னொடுமகவும்கண்டம் பிரபலவிவகாரங்கள்
மன்னவன்தன்னால்நன்மை மகிழ்ச்சியையடைவானென்றே. 22

சுங்கனுமலரியாலோன் சுகங்களுமெத்தவுண்டு
பங்கினால்பலனுண்டாகும் பருஞ்சுதன்தன்னால்யோகம்
இங்கிதமைந்தன்தன்னா லெழில்பெறச்செல்வமெய்தும்
மங்கையர்தன்னால்யோகம் மருவிடுந்துணைக்கரிஷ்டம். 23

ஆரலுமரவுமன்னன் அற்புதச்செல்வமுண்டாம்
பேர்பெருவற்குண்டாகும் பின்னொடுபலவானுதம்
சீர்பெறவொருவன்செய்கை செழிப்புறவதுக்கிக்கொள்வான்
நேர்பெரும்தெண்டமுண்டாம் நிலைத்திடும்பெரியோனாலே. 24

மந்தனின்கேதுதன்னில் மைந்தனாலதிகயோகம்
செந்திருகடாட்சமுண்டாம் செய்யொடுபணிதியாவும்
வந்திடும்சகடம்நந்தி வளம்பெருஞ்செய்யலாபம்
சுந்தரபுதல்வனாலே சூழ்ந்திடுந்தந்தைக்கென்றே. 25

இந்தநற்செல்வமெல்லாம் இன்புறவவற்குஈவான்
தந்தனுயிளைத்துவாடும் தையலதுநவமிகூடில்
இந்தநற்சடம்விட்டாவி யெழில்பிதுருலகஞ்சார்ந்து
வந்திடும்வருண நான்கில் வந்திவனுதிப்பானென்றே. 26

இந்தநற்பலனையாங்க ளிசைத்தனம்நவக்கோளாலே
முந்தியகருமகாண்டம் முறைப்படிபவமொழித்தால்
சுந்தரன் தனக்குச்சொன்ன சுகமெலாமனுபவிப்பான்
இந்திரன்சுதனுள்நேயன் இயம்பியகந்தர்வாக்கே. 27

2-வது தனுசு லக்கினம் முற்றிற்று.

சனி			
	1 – வது மகர ராசி		ராகு
லக்ன			சந்திர
		புதன் செவ் சந்திர	சூரிய குரு கேது

1-வது மகர லக்கினம்

சந்திரன்புவியில்நிற்க சனியவன்மீனம்பெற்ற
புந்தியுமாரல்சுங்கன் புகழ்துலைஅலரிமன்னன்
விந்தையாங்கன்னிகேது விளமன்னன்பணியுநண்டில்
இந்தவாறுநவக்கோள்நின்று இலக்கினமானிலுற்றால். 1

வீதியுங்கிழக்குமேற்கு விளங்கிடும்கெற்துவாசல்
ஓதுவோம்ஒருபால்வீடு உயரில்லம்கூரையாகும்
சீதளசூழிமேல்பால் சிறுநணிமாயன்மானில்
காதலால்காரிசத்தி கதித்தமீன்யானையென்றே. 2

முந்தியபவங்கள்நீங்கும் மொழிகுவோம்குடும்பச்செய்கை
தந்தையின் துணைகள்மூன்று தனயனின்பிதாவுமொன்று
தந்துணை நவத்திற்தீர்க்கம் ஆணென்றுகன்னியொன்று
தந்தைதாய்சுகங்களற்றுத் தந்தையின்துணையால்நன்மை. 3

வந்தவனிறஞ்சிவப்பு வளர்த்தியில்சமதிரேகம்
சுந்தரவடிவனுகும் சுற்றத்தார்மெத்தவுண்டு
தந்தைதாய்யோகமற்பம் தாய்துலம்விர்த்தியில்லை
தந்தையாவில்லஞ்சேயுந் தானியந்தனமுண்டாமே. 4

வித்தையுமொன்றுதீர்க்கம் வினோதமாயுரைப்பான்வார்த்தை
சத்தியவசனனுகும் சஞ்சலபுத்தியில்லான்
புத்தியுமதிகமுண்டு புகழெங்கும்கீர்த்தியுண்டு
வெத்தியாம்தொடுவழக்கு வெகுநிதியின்னுண்டாமே. 5

வாலிபம்தன்னில்வேறு மாதரைப்போகஞ்செய்வான்
பாலகன்பசுக்கள்நந்தி பலித்திடும்செம்பாளையுந்தான்
ஏருளதந்தைநாளே எழில்பெருஞ்செல்வமுண்டாம்
சீலனும்வன்னுள்தன்னில் செய்யினுற்பொருளுண்டாமே. 6

பனையொடுகயற்பெருக்கம் பாக்கியம்பசுப்பிற்காடி
இணைசுகம்சயனமெத்தை யிகலுறும்பணிதிகூடும்
பணைதுயில்புதையலுண்டாம் பொருந்தியசெய்யலாபம்
இனமுறுமொருவராலே யெழினலஞ்சாஸ்தியுண்டே. 7

பூமியல்லால்வேறுதொழி லிவனுக்கில்லை
புண்ணியனும்பிறந்தபின்னும் பூமிசேரும்
காரியத்தில்வெகுவாக முயற்சிசெய்வன்
கனமானகாரையினை வில்லமுண்டாம்
நேமியிலேமானிடரும் நேயமுண்டாம்
நெஞ்சிரக்கமுடையனுமாம் ஈதலுண்டு
ஆமிவனுக்கற்பகெண்ட மணுகிடாது
அணுகுவதுமேகமொன்று அணுகும்பாரே. 8

மித்திரர்தம்மைச்சேர்ந்து விவேகமுந்தெரிந்துகொள்வான்
புத்திரவாஞ்சைமிக்கான் புகழ்தயவுடையான்தந்தை
தந்தையர்க்கன்பனுவன் தாயாதிபலமாய்வாழ்வன்
சுத்தமும்கீர்த்தியொப்பான் சிவனடிக்கன்பனுமே. 9

தந்தைபின்முன்னேன்செய்கை தராதலம்புகழவாழ்வான்
சந்ததிமிகவேயுண்டு சாஸ்திரபுராணமோர்வான்
செந்திருகடாக்ஷமுண்டு செய்யினுல்செல்வம்பெற்றேன்
தந்தைக்குமவனுற்செய்யும் தனமதுவளிக்கப்பெற்றுன். 10

இன்னொருதந்தையுண்டு இன்பமுமமடைதல்லாபம்
பொன்னொடுபொருளுமுண்டு புகழ்பெரியோற்குநேயன்
அன்னியர்க்குதவிசெய்வான் அருந்துணைபகைவிரோதம்
நன்னயமுந்தனமுமற்பம் நறுந்துணைமைந்தன்சேயாம். 11

அன்னையுங்கற்பின்மிக்கான் அழகுளாளன்னமீவாள்
மன்னியகணவனோடு மருவியும்பலமாய்வாழ்வாள்
தன்னுடதுணைகளேழில் தானுரெண்டரிவைமூன்று
தன்னுடமைந்தர்தீர்க்கம் ஆணென்றுகன்னியொன்றே. 12

திசாபலன்

இந்நிலக்குடும்பச்செய்கை யிசைந்தனன்நவக்கோளாலே
நண்ணியதிசாபலத்தின் நயந்தனையுரைக்கக்கேளாய்
மன்னியபூரம்ரெண்டில் மகிழ்சுங்கன்யரவின்புத்தி
தன்னிலேயுதித்திசேயின் தவமுறைகந்தர்வாக்கே. 13

அணியொடுமன்னன்மைந்தன் அருமன்னை தந்தைநன்மை
பிணியதுயற்பமுண்டாம் பெருஞ்செல்வம்பிதுராலெய்தும்
அணிபணியாடையாவும் அலங்கிர்தநந்தியுண்டாம்
மணியொடுவெங்கலங்கள் மருவியவர்க்கம்வேட்டல் 14

புந்தியும்சிகியதன்னில் புகழுறவிந்தையோதல்
நந்தியுமாதுமுண்டாம் நற்றனம்செந்நெலுண்டாம்
பிந்துணை நன்னியுண்டாம் பிதுருக்குப்பீடையுண்டாம்
முந்தியதுணைவர்க்கத்தில் முதிர்சுபாசுபங்களுண்டாம். 15

அலரியின்முற்பாகத்தில் மன்னையுமடைவாள்கண்டம்
நலமிலைசெய்யலாபம் நற்பிதுரடைவன்கண்டம்
குலமதிலுற்றார்கேடு கொம்பனால்தனக்குப்பீடை
நலமுறும்பெரியதந்தை நன்னயமாமனாலும். 16

சுந்தரன்தனக்குச்செல்வம் சூழ்ந்திடவுபசரிப்பான்
பிந்தியவருளிதன்னால் பெருஞ்செல்வம்செய்யாலெய்தும்
வந்திடும்வழக்குசண்டை வலிவிலைவிரையமுண்டாம்
முந்தியபிதுரால்யோகம் முயற்சியையடைவனாகும். 17

சந்திரனாரல்ராகு சற்குருமங்கைசொத்து
சொந்தமாம்முதலுமீந்து சுகமதையனுபவிப்பான்
தந்தனம்பெரிதாயீவான் தாய்துணை தனக்குவேட்டல்
சொந்தமாய்பரியுங்காடி சுகம்பெறச்சேகரிப்பான். 18

சந்திரனாரல்ராகு சாற்றுவோம்ஞாங்கள்கன்னி
தன்னிடயினத்தோர்கன்னி தனிவனம்செய்வானாகும்
அன்னவன்வந்தபின்னால் அணிபணியாடையாலும்
சொர்ணமும்பணிநற்றூசும் சுகமுறுஞ்செய்யலாபம். 19

மன்னவன்மந்தன்புத்தி மகிழ்சுதன்ஒன்றுண்டாகும்
முன்னுறும்பவத்தைநீக்கி உதித்ததேசேய்தீர்க்கமாகும்
தன்னியும்தீர்க்கமுண்டு கனத்தசேய்பின்னாலுண்டாம்
நன்னயசெல்வஞ்செய்யால் நற்பொருள்வரவுண்டாமே. 20

சிகியொடுசுன்னும்பானுள் சிவதலம்தீர்த்தவாசம்
நகையொடுவெங்கலங்கள் நாணயம்நந்திநாடி
பகையொடுதுணைக்குவேட்டல் பணியொடுவர்க்கவேட்டல்
இகலுருமற்பப்பீடை யேழையாள்சுதனும்பீடை. 21

தந்தையின்துணையரிட்டம் தையலாள்தனக்குப்பீடை
வந்தராமுன்பிற்பாகம் வளர்பிதுர்துணைவன்கண்டம்
சுந்தரதுணைவர்க்கங்கள் சுகமுறும்சேய்வந்தெய்தும்
மைந்தரும்வந்துதிக்கும் மலினமாய் வழக்குண்டாமே. 22

பிந்தியபாகந்தன்னில் பெரும்பரிசேயுண்டாகும்
மைந்தனுமொன்றுநஷ்டம் மருவிடும்தந்தைபீடை
செந்திருகடாக்ஷமுண்டாம் சேயினால்பலனுண்டாமே
நந்தியும்பரியும்தூசும் நற்பணியுண்டாமென்றே. 23

பணியொடுமன்னன்மந்தன் பாக்கியம்தந்தைகண்டம்
அணிபணியாடையாவும் அலங்கிர்தசேயிலுண்டாம்
மணியொடுவெங்கலங்கள் மருவிடும்மங்கைபீடை
கணிதமாதுகையுஞ்செந்நெல் கனம்பொருளுண்டாமென்றே. 24

புந்தியுஞ்சிகியுஞ்சுன்னும் புகழொடுகீர்த்தியுண்டாம்
சுந்தரமணவியுண்டாம் சுகமுறுமதிகலாபம்
தந்துணைவர்க்கமைந்தர் தந்திடும்செய்யலாபம்
வந்திடுமொருவன்சேயில் வாங்குவான்விலைக்குமென்னே. 25

அலரியின்மாலோனால் அற்புதச்செல்வமுண்டாம்
நலமுறுமைந்தன்வேட்டல் நற்றனஞ்செந்நெல்லாபம்
பிலமுறும்பலவியாபாரம் பெருந்துகைசெய்யலாபம்
கலமுறுமற்பநஷ்டம் காரிழைதனக்குப்பீடை. 26

மன்னவன்மந்தன்புத்தி மக்களால்சம்பத்துண்டாம்
நன்னயவில்லந்தன்னில் நற்பரிநந்திநாடி
சொர்ணமும்செந்நெலுண்டாம் சுகமுறும்பெரியோனாலே
நன்னயசிகிசுன்பானுள் நற்பலனுண்டாமென்றே. 27

மைந்தனாலதிகயோகம் மக்களும்சம்பத்துண்டாம்
செந்திருகடாக்ஷத்தாலே செயம்பெறநினைத்ததெல்லாம்
வந்திடும்வாழ்வுண்டாகும் வணிகனாற்றெண்டமுண்டாம்
தந்தனங்கொடுக்கல்வாங்கல் தனிகனாய்வாழ்வானென்றே. 28

சந்திரன்ஆரல்ராகு சகலரும்புகழவாழ்வன்
தந்தனுயரிஷ்டபீடை தையலாள்தனக்கரிஷ்டம்
மந்திரதந்திரங்கள் மைந்தனாலதிகயோகம்
தந்தையின்யோகமேலாய் தனிகனாய்வாழ்வான்மைந்தன். 29

மைந்தன் தன்சடத்தில்ரோக மருவிடுமாடித்திங்கள்
இந்துரை நவமிதிதியில் இச்செடமாவிநீத்து
இந்திரலோகமெய்தி யின்பழமடைந்துசின்னுள்
பந்தமாய்ப்பூமியுற்றுப் பருமறைகுலத்துதிப்பான். 30

இந்தநற்பலனையாங்க ளிசைந்தனன் நவக்கோளாலே
முத்தியகருமகாண்டம் முறைப்படிபவமொழித்தால்
சுந்தரன் தனக்குச்சொன்ன சுகமெலாமனுபவிப்பான்
இந்திரன்சுதனுள்நேயன் இயம்பியகந்தர்வாக்கே. 31

முதலாவது மகரலக்கினம் முற்றிற்று.

	கேது		
	2 - வது மகர ராசி		
லக்ன செவ்			சந்திர
குரு சூரிய சுக்ரன்	சனி புதன்	ராகு	

2-வது மகர லக்கினம்

சந்திரன்புவியின்துன்ன சார்ந்திடதுலையில்ராகு
மந்தனும்புந்திதேளில் மருவிடசிகியும்மேடம்
அந்தணன்அலரிசுங்கன் அமர்ந்திடவில்வில்தானும்
சுந்தரசேயுமானில் லக்கினமதுவேயுற்றால். 1

இந்தசேய்கீழ்மேல்வீதி யியம்புவேன்உத்திரனேக்கு
விந்தையாம்கீழ்பால்சந்து விளங்கிடாமேல்பாலில்லம்
அந்தையின்யெதிரதாக அமர்ந்திடுங்கண்ணன்கோயில்
பிந்தியின்கீழ்பால்கூபம் பொங்கியவியப்பாலுண்டே. 2

இவ்வடையாளத்துள்ளா யிருந்திடுமில்லில்வந்த
திவ்வியமுடையபாலன் சிறந்திடும்தந்தைவர்க்கம்
ஒவ்வியேயுரைப்போம்யாங்கள் உற்றிடுமாண்பாலைந்து
மைவிழியுண்டுசொன்னேம் வரவரச்சிலதுசயும் 3

பாலகன்றந்தைசெய்தி பகர்ந்திடிவில்லையற்பம்
கோலமாம்பூமிகொஞ்சம் குறித்திடும்சமமேசெல்வம்
சீலமாம்பாலன்வர்க்கம் செப்புவோம்மூவராமே
சாலவேகன்னியொன்றில் தானிவன்சேஷ்டனென்று. 4

பூமியிலிருந்துசின்னாள் பொருந்தியமணமுமின்றி
காமியேயீவான்சொன்னேம் கருத்துளசுதனின்மேவி
நாமினியுரைக்கக்கேளாய் நவின்றிடும்சிவப்பனுவன்
நேமமேதிரேகநீட்சி நிகழ்த்துவோம்சமமாநிற்பன். 5

வித்தையும்தமிழிற்றேர்வன் வெகுளியாம்கணக்கில்வெல்வன்
புத்திநல்லறிவுமுள்ளான் பிதுர்மொழிதள்ளானுகும்
சித்திரவிநோதமுள்ளான் சிறுவரில்தோஷமுள்ளான்
சுத்தமாமின்னுடன்னில் சொல்லிடும்கந்தர்வாக்கே. 6

சிறுவனின்யோக முரைத்திடக்கேளாய்
செப்பிய விருபதுமட்டும்
தாமிலையற்ப யோகமேயாகும்
தானதின் மேலதாய்ப்பாலன்
நிரமதுபலவாஞ் சுரக்கதுதன்னால்
நெடிகிலுமாவணத் தொழிலால்
வருகுமேபொருள் சேர்க்கையதாக
வளமுளமுப்பது மட்டே. 7

உரைத்தநாள்மேலாய் யோகமும்சமமாய்
உற்றிடும்பொருள் சிலவுண்டாய்
நிரையுளவன்னை காலத்தையாங்கள்
நிகழ்த்துவோ மந்தாண்டில்பீடை
முரைப்படியீரைஞ் சாண்டினிற்கெண்டம்
மேற்றிச வாண்டினிற்றுன்பம்
கரையுளவாண்டு இருபத்தினுளில்
காலைபின் தாய்தனக்கவதி. 8

செப்பியவாண்டு இருபத்தியேழும்
சிறுவனின் அன்னையுமாய்வன்
ஒப்பியதந்தை காலத்தையுரைப்போம்
ஒன்பதாமாண்டினில் கண்டம்
தப்பிடுமிருபா னெட்டதில்துன்பம்
தானுண்டு நாலேழுவுள்ளாய்
கப்பலித்திடவே சொல்லுவேநன்றாய்
கழறூர்கனம்மா வுனக்கே. 9

ஏற்றமாஞ்சுதனிற் றந்தையின்கருமம்
எய்திடுமிவன் கண்டம்சொல்வோம்
தோற்றியவாண்டில் மாந்தத்தால்பீடை
துயருண்டுநாலினிற் சொன்னேம்
வேற்றுமையில்லாபத்து பனிரெண்டில்
வெப்பினல் பீடையுந்தப்பும்
போற்றியவாண்டு பத்துடனெழில்
புரிகுவோம் துன்பமும்நீங்கும். 10

நீங்குமேபாலர்க் குயிரிருபான்மூன்றில்
நிகழ்த்திேனம் வெப்பத்தினல்பீடைதானு
ஓங்குமேயிருபத்தி யாறில்ரோகம்
உயர்வாகஅதுதீரு மதின்பின்னுக
பாங்குடனேமுப்பதினிற் கெண்டங்காட்டும்
பதிலாகமேல்ரெண்டில் அரிஷ்டந்தப்புந்
தீங்காகநாற்பதா மாண்டிலேதான்
சிறுவனுக்குபலத்ததொரு கண்டமுண்டே. 11

கெண்டமதுதீர்ந்தபின்னு ளாயுள்தன்னை
கிளத்திடுவோமறுபதா மாண்டினுள்ளே
கொண்டதொரு நிறையானமாகிபலன்
குறைவில்லாதென்னுட்டில் சலனமாகி
அண்டர்போல்மிகுசெல்வம் படைத்துவாழ்ந்து
அறஞ்செய்துநன்மார்க்க வழியையுன்னி
கொண்டனுமதினெடுத்த ஜெனனமுத்தி
சொல்லினுற்பாலனுக்கு கந்தர்வாக்கே. 12

2-வது மகர லக்கினம் முற்றிற்று.

கேது			
லக்ன	1 - வது கும்ப ராசி		செவ்
			சனி
	சுக்ர	சந்திர புதன் சூ-குரு	ராகு

1-வது கும்ப லக்கினம்

சந்திரன்ரவிமால்பொன்னும் சார்துலைதெரிவையாரு
மந்தனுமரியில்மேவ மகிழ்குசன்ரெண்டில்நிற்க
சுந்தரசிங்கன்தேளில் சூழ்சிகண்டைபற்ற
இந்தவாறுநவக்கோள்நின்று இலக்கினம்சாடியுற்றால். 1

வந்தசேய்கீழ்மேல்வீதி வளரில்லம்தெற்குவாசல்
பிந்தியாயிருபாலில்லம் பிழையறமனையுமாடும்
இந்தநற்பாலனுக்கு இயம்பியப்பலனைக்கேளு
சுந்தரவடிவேலேந்தும் சுகமருள்கந்தர்வாக்கே. 2

வந்தசேயிருசிகப்பு வடிவுள்ளமேனியாகும்
முந்தியசென்னஞான முணர்ந்துநல்வழியைத்தேடி
சந்தனவிருட்சஞ்சூழ்ந்த தணிமலைவந்திடோர்க்கு
கந்தன்தொழும்புபூண்டு சொற்படிநடத்திவந்தான். 3

வந்தவனூரிலுள்ள வகையெலாந்தெளிந்துகொண்டு
தந்தநல்லறிவினாலே தாசத்தகன்பின்வைத்து
வெந்திடப்பரிக்ஷைசெய்தான் வெதண்டிவைமுனியுங்கண்டு
நொந்துநீசென்மம்புக்கு நோயினால்மெலிவையென்றான். 4

அம்மொழிகேட்டுப்பாலன் அருளியமுனியைப்போற்றி
யெம்மையாயுடையாயான்செய் யேழமைதவிர்ப்பதல்லால்
அம்மையாலுடையேனுக்கு அனுக்கிரகஞ்செய்வாயென்று
விம்மவாயறத்தினேர்ந்து வீழ்ந்துவீழ்ந்தெழுந்துசொல்வான். 5

அன்னையென்றடைந்ததாயே அறிவிலிசெய்தகுற்றம்
தன்னையுஞ்செய்துசாபம் தவிர்ப்பதுன்பாரமென்ன
முன்னவன்துன்னைப்பெற்ற முனியிளமிரங்கிப்பின்னா
லுன்னிதமானிடற்கு ளுதித்ததுசனனந்தன்னில். 6

மன்னியசைவனுக வந்துநீபிறந்துமண்மேல்
அன்னியவுயிர்கட்கெய்து மகதிகட்குதவிசெய்து
உன்னிதப்பூமியுண்டாம் உகந்துநற்குடும்பம்மிக்க
வன்னியற்சரகுவைத்து வளர்பெறவாழ்போவென்ருன். 7

இந்தசேயிவனேயாகும் இயம்புவேன்பலன்கேளம்மா
சுந்தரமனேயாளோடு துணைவருமிருவனுண்பால்
வந்தவனிண்ணூறு வதித்தவர்மூவர்தீர்க்கம்
முந்தியதுணேவனில்லை முதற்சுதனிவனேயாகும். 8

ஜெனித்திவன்வருகுமுன்னும் கிருபையையுடையோன்தந்தை
தனித்தநாள்முதலாயிந்த காளேயுமுதித்தபின்னுல்
தனித்தனிவருகுஞ்செல்வம் சம்பத்துமிகவேயுண்டாம்
இனித்தமிழறிவன்பாஷை ரெண்டதுமுணர்வானப்பா. 9

சாஸ்திரம்பலவுங்கற்பன் ருதிலும்வைதியங்கள்
ஏத்தியசரக்கதெல்லாம் இசையுள்ளவிடங்கள்வைப்பன்
பாத்திரமறிந்தெவற்கும் பரிந்திடக்கொடுக்கவல்லான்
மாத்திரைவர்க்கங்கட்ட வளம்பெறச்செய்வானப்பா. 10

இருபத்தோராண்டினுள்வா யெழில்பெரும்மேற்குதிக்காய்
வருவதுகன்னியொன்றை மணமதுபுரிந்துமப்பால்
திருவுருகிழக்கிற்பூமி திடம்பெறநிதிகள்கொள்வன்
பெருகியசோதிடங்கள் பேசவும்பிரியனுவன். 11

அக்குணசாலியோர்கள் அருந்தொழிலிவனுஞ்செய்வன்
திக்குளமாந்தர்க்கெல்லாம் சிநேகிதமிவனுமாவன்
பக்குவம்நாற்பத்தஞ்சிற் பரிந்திடும்பிதாவேகண்டம்
முக்கியவதின்மேலைந்தில் மொய்குழலன்னேகண்டம். 12

மைந்தனுமிருபத்தாறுள் வந்திவன்றனக்குகண்டம்
பிந்தியுஞ்சுதன்கள்மூன்று பெண்பாலிரெண்டுண்டாகும்
வந்திடுமிவன்குடும்பம் வருமன்பத்தாறுள்வேருய்
புந்தியும்களிக்கச்செல்வம் பொருந்தியவாழ்வுண்டாமே. 13

அறுபத்தியோராமாண்டில் வடைந்துசந்நியாசியோகம்
மருவருஞானவானுய் மனதுளவழுக்குநீங்கி
குறைவறுதியானம்வந்து கூடியமிவனுக்கப்பால்
நிறையெழுபத்தைந்து நேரிடுமாண்டுதன்னில். 14

பங்குனியமரபக்கம் பதிதிதிநவமிதன்னில்
கொங்கலர்கொண்டமேனி குருபரன்றுளேமேவி
இங்கிதமுணர்வரம்மா ஏகிடும்பிரமலோகம்
தங்கியசடத்துக்கின்னுய் சாமர்த்தியங்கந்தர்வாக்கே. 15

முதலாவது கும்ப லக்கினம் முற்றிற்று.

	குரு செவ்	சந்திர	
லக்ன கேது	2 – வது கும்ப ராசி		சுக்ரன் புதன்
			ராகு
சனி			சூரிய

2-வது கும்ப லக்கினம்

சந்திரன்விடையிலேற சேய்குருதகரில்பற்ற
புந்தியும்சுங்கன் நண்டில் புவிதனில்பணியுநிற்க
மந்திரசிகியுஞ்சாடி மருவிடவருக்கன் கன்னி
இந்தவாறுநவக்கோள் நின்று இலக்கினம்கலசமுற்ருல். 1

பிறந்தவன்வடக்குதெற்கு பெருகியவீதியாகும்
துறந்தவில்முன்முன் னூனம் சொல்லிறுபாலும்பாழாம்
பறந்தனன்மேல்பால்கிருஷ்ணன் அமர்ந்திடும்கோயிலாகும்
சிறந்தவன்முன்சென்மந்தான் செலுத்தியவாறுகேளே. 2

வள்ளுவனொருவன்ஞான வழிதருநூல்களோதி
உள்ளமுந்தெளிந்துவூழை யொழிந்திடவுறுதிகொண்டு
கள்ளவள்குழலாள்மாய்கை கடந்துபோலளைத்துநீங்கி
வள்ளலின் அடியார்பாதம் வணங்கிடவனத்திற்புக்காள். 3

புக்கியேவனங்களெல்லாம் புண்ணியர்கிருபைகாண
திக்கெங்குமலையும்போது தேகம்விட்டாவிநீங்கி
பக்குவகாலம்வந்து பிராணனும்ஞானவானல்
சுக்கையிற்பிறவியற்ற சிறுவனுமிவனேயாகும். 4

வந்தவன்சிவந்தமேனி வலதுகண்கீழ்நோக்காகும்
பிந்தியதுணைவனில்லை பேதையென்றிவனேமூத்தோன்
தொந்தநல்நிதியுண்டு சொல்லுவாய்வழியில்குற்றம்
முந்தியவன்னையொன்று முதலவக்காண்பாலொன்றே. 5

பனிரெண்டுபிராயத்துள்ளாய் பலகலைதமிழையோதி
இனியமெய்ப்பொருளிலின்பம் யிருக்குதென்றுறுதிகொண்டு
கனிரசவசனவார்த்தை கல்வியில்பத்துஞ்சொல்வான்
மனிதர்க்குளுகவார்த்தை வைத்திடில்பிறவியென்றே. 6

பொய்யுரைபகரானுவால் பிழைகளொன்றெவர்க்குஞ்சொல்லான்
மையரிபறந்தகண்ணு ளாசையும்பொய்யென்னோர்ந்தான்
உய்வகைமெய்யேமெய்யா உணர்த்திடப்பதவியென்று
மெய்யுரைமெய்யேயென்று வீணுரைபகரான்பாரே. 7

அறுசுவைசொகுசு நீக்கி ஆசையென்பதும்போக்கி
வெறுப்பினில்விருப்பம்வைத்து விருப்பத்தில்வெறுப்புமா
பிறப்பகையகற்றிநீக்கி பிரியமுமதன்மேலுண்டாய்
சிறப்பிது இருபதாண்டிற் சிற்றூராமுறிதேடி. 8

துடைப்படைத்தொழிலையெல்லாம் சோர்வுறநிசமதாகும்
திடப்படுமிருபத்தைந்திற் சிற்றிடையன்னைமாய்வாள்
குடக்குளமலையைச்சார்ந்து குருவருள்பெற்றுவந்து
சடத்திலேயான்மாரூபம் தான்தெரிசனமுமுண்டாம். 9

பரசிவநிர்ணயத்தை பார்த்துணர்ந்தாத்மாகூடி
தரத்துளதேவர்கண்டு சற்றணமென்றுகூற
நிறமதாயூழைநீக்கி நீணிலம்பிறவிபோக்கி
பறத்தடிதியானமானேன் பதைபெருவிருத்தின்னேனும். 10

தொண்ணூற்றியைந்தாமாண்டில் சொல்லுவாய்மகரமாதம்
மன்னுநற்சடத்தைநீக்கி வளர்பரத்தொடுங்கியான்மா
விண்ணுளோர்புகழவிந்த மேதினியெவருங்காண
உண்ணிசைசமாதிமேவி வோங்குவான்கந்தர்வாக்கே. 11

இரண்டாவது கும்ப லக்கினம் முற்றிற்று.

	சூரிய	குரு சந்திர	ராகு
	1 - வது மீன ராசி		
			புதன் சுக்ர
கேது	செவ்		சனி

1-வது மீன லக்கினம்

சந்திரன்மன்னன்புல்லன் சார்ந்திடவிணைராகு
புந்தியும்சுங்கன்தேளில் பற்றிடவவரிமேடம்
மந்தனும்தெரிவைசேற மகிழ்சேயும்தேளில்நிற்க
மைந்தநற்சிகியும்வில்லில் மைந்தனும்கெண்டையுற்ருல். 1

வந்தசேய்சூர்யவாஸ்தில் வடக்கில்தெற்குவாசல்
அந்திருபாலும்பாழா மவனில்லம்தனிவீடென்ப
யெந்தையேசிற்றூராகி யிவ்வில்லம்மாமனுக்கு
சொந்தமாயதனில்பாலன் தோன்றில்வேறில்லம்வாழ்வன். 2

வேரூரில்சிங்கதிக்கில் விரும்பியகடிகையெட்டாய்
கூறியதுலவினுள்ளாய் குறித்திடும்பேரூர்தன்னில்
தேரியவடதென்வீதி சிறந்திடுமில்லஞ்சொல்வேன்
சாரியுமேல்பாலாக தரித்திடுங்கிழக்குவாயல். 3

இல்லதிலொருபாவில்ல மிருந்திடும்பொய்கைமேற்பால்
சொல்லதின்வழக்கோர்பொய்கை துலங்கிடாவீசன்திக்கில்
வல்லபைக்கேள்வன்கோயில் வகுத்தனருவனங்கள்
நல்லயில்லடையாளத்துள் நவின்றவில்தனிலேவாழ்வன். 4

தந்தையின்துணையாண்பாலில் தரித்திடுமிருவனன்றி
எந்தையுமொருத்திதீர்க்க மிருந்தபிற்காலமீயும்
இந்தனற்சுதனுமன்றி யிசைந்தனன்தீர்க்கமென்று
செந்தமிழ்ப்பாதல்லோனே செப்புவேன்தொழிலைக்கேளே. 5

குடும்பத்தின்தொழிலேதென்னில் குறித்திடுங்கிருஷிவேலை
திடம்பெறநடத்தியத்தால் சீவனமுரைத்தேன்யானும்
தடம்பெருங்கன்றுகாலி தழைத்திடும்பூமிகொஞ்சம்
ஒடுங்கலாயவர்கட்குண்டு உற்றிடுமதிலுலாபம். 6

இன்னவனிறங்களோடு மிசையுமெய்க்குணங்கள்யாவும்
நன்னயமாகச்சொல்வேன் நன்குமெய்யிருசிகப்பன்
மன்னியஉள்ளனுவன் வகுத்திடில்தூலதேகி
உன்னிதவசனனுகும் உயர்ந்திடும்நாசிகூர்மை. 7

பொய்யுரைவழுத்தநெஞ்சன் புன்னடையுடையோனுகும்
செய்யநற்றதியும்பாலும் சேர்ந்திடுமுலத்தல்மேலும்
வெய்யவேபிரியனுவன் விகடமாய்அடைக்காய்நேயன்
துய்யநற்பரத்தைபோகன் துய்ப்பனேவாலிபத்தில். 8

அன்னியஸ்திரீயன்மோகன் அன்புடன்சிறியவுண்டி
தன்னிலேமிகவுமுண்டு சர்ச்சனர்துஷ்டசேர்க்கை
கென்னியவன்போல்டம்பம் கிளருவாய்ச்சாலனுகும்
அன்னையேதமிழுமற்ப மறிந்திலன்வெகுளியாமே. 9

ஈன்றதோர்பிதுரின்தோழி யிழிவதானையாடன்றல்
பூண்டிடும்களத்திறனை புகன்றனனுதையமப்பா
வேண்டியகுதுதன்மேல் விருப்பனுமெக்காலத்தும்
தூண்டியமெய்யுளானே துலங்கிடும்கந்தர்வாக்கே. 10

வேறு விருத்தம்

இருந்துஇவன்சிரேஷ்டபிதா தன்பாலாக
இயல்பாகயிவன்றனக்கு மணத்தைச்சொல்வேன்
பொருந்திடவேயிருபத்தி மூன்றுமாண்டுள்
புகலுவேனிவறுதித்த வில்லிற்ருனும்
வருந்திநிற்குமீன்றதாய் வர்க்கமாதை
வளப்பமுடன்மணஞ்செய்ய அவனுமிக்க
பொருந்திகொள்மனவருத்த மவளாலுண்டு
பெற்றசிசுநிலையாது பேசினேனே. 11

நாற்பத்திநாலாண்டுள் ஏந்தயில்வில்
நங்கையிவள்கிளையவளை வதுவைசெய்வன்
தீர்க்கமதாயிருவருக்கும் குழவிகாணும்
செப்பியமுன்சாந்திசெய்தால் குழவிகிட்டும்
வேற்கண்ணுய்குடும்பபல னெடுத்துச்சொல்வேன்
விளங்கியநற்கீழ்பாலின் பூமிதன்னுல்
சேற்பவயல்தன்னுடைய பூமிதானும்
செய்திடுநற்கிருஷியினுல் சீவனந்தான். 12

தானியத்தின்விர்த்தியுறுங் கன்றுகாலி
தழைத்திருக்குமாளடுமை பலிதமாக
ஈனமிலேசேஷ்டபிதா கருமமின்னேன்
இசைந்திடுவ னதனுலும்பலிதமுண்டு

மானமதாய்நிதிகுணங்க ளணுகிட்டாலும்
மசலறியாதீர்ந்துவிடு மீசனாலே
மோனமுடனில்லமது புதிதாய்செய்வன்
விரும்பியநல்விஷயத்தில் செலவுசெய்வன். 13

செய்திடுவான் இவன்யோக மாண்டிற்சொல்வேன்
சேயேகேள்நெடுநாளும் சமமேயோகம்
உய்திடுமேநாற்பத்தி யேழின்மேலாய்
உரைத்தபலன்சுகமுண்டு யாவுமப்பா
பெய்திடவேயதினுள்ளாய் விவகாரங்கள்
பெரும்பலனும்கலகமுண் டதுவுந்தீரும்
செய்புகழுமவனன்னை காலங்கேளு
செப்புவேன் எந்நாளு மாருள்வீவன். 14

சேட்டமதாய்க்கருமமெண் ணுறுள்சொன்னேன்
செப்புவேனிவன்கண்டந் திரமாயானும்
வாட்டமதாயோராண்டுள் சூட்டால்துன்பம்
மன்னவனேயீரைந்தில் சலத்தாலச்சம்
நாட்டமுடனீரெட்டில் உஷ்ணபித்தம்
நன்னிருமேயதுநீங்கி யிருப்பான்ரெண்டில்
தேட்டமுளவசீரணத்தால் துன்பம்நீங்கி
தீரமாம்முப்பத்தி ரெண்டுள்கண்டம். 15

வந்திடுமேல்திரியாலு மதுவும்நீங்கும்
வன்மையாய்முப்பத்தி யெட்டில்பீடை
தந்திடுமேயதுநீங்கி நாற்பானுறுள்
தானுண்டுசேத்துமத்தால் ஸ்திரீயும்நாசம்
விந்தையதாய்வாய்வினால் அரிஷ்டமுண்டு
விளம்புவேன்மலமாசி யதுவும்நீங்கில்
நொந்திடுமேயன்பத்தி யொன்றில்கண்டம்
நுவன்றிட்டேனதுநீங்கி பின்னால்சொல்வேன். 16

மேகாண்டுயிருபதுள்ளாம் மெலிந்துடல்வாடியிந்த
பாலகனுவிநீங்கி பண்புறுங்குடந்தைமேற்பால்
சீலமாம்சித்தூர்தன்னில் செனிப்பனேவன்னியனுக
கோலமாமயில்மேலேறும் குமரவேல்கந்தர்வாக்கே. 17

முதலாவது மீனராசி முற்றிற்று.

லக்ன	கேது	சுக்ரன்	
	2-வது மீன ராசி		செவ் சூரிய
			சந்திர புதன்
குரு		சனி ராகு	

2-வது மீன லக்கினம்

சந்திரன்புந்திசிங்கம் சார்ந்திடவில்லில்மன்னன்
மந்தனும்பணியுங்கோளில் மருவிடவிடையில்சுங்கன்
விந்தையாலரியாரல் வீற்றிடநண்டில்தகரில்
மந்திரசிகியும்நிற்க இலக்கினம்மீனமுற்றால். 1

இந்தசேயுதித்தவீதி யியம்புவேன்கீழ்மேல்வீதி
நந்திலாவடக்குவாசல் நவிலிருபாலில்பாழாம்
எந்தையேதனித்தயில்ல மிருந்திடும்துலாத்தில்பொய்கை
நின்றிடும்பரதன்கோயில் நிகழில்லாமாதுலந்தான். 2

தோன்றுமில்சித்தூராகும் தொகுப்புடனுரைப்பேன்பிர்மம்
நீன்றிடுசுதனும்தோன்றும் கால்நிதியதுவென்னில்லில்
ஆண்டிவனுதிக்கக்கேட்டு அத்தனுமவடஞ்சேர்வான்
தூண்டியகந்தர்வாக்கு சுதன்பிதுரொன்றுதீர்க்கம். 3

மைந்தனின்துணைவனுனும் வகுத்திடவாண்பால்ரெண்டு
எந்தையுமூவராகு மிசைப்பனேயினிகேள்நன்றாய்
கந்தருமுரைத்தவாக்கு காளையின்பிதுரேமிக்க
நந்துறும்சமர்த்தனவன் நவிலுவேன்கீர்த்தியுள்ளான். 4

வழித்திடான்புலிகடன்ணை வாணிபச்சமர்த்தனுகும்
நழித்தலேகையில்செம்பொன் நண்ணிடுமென்மேலாக
குழப்பிலாமனத்தனுகும் கூறுவேன்சுதன்நிறத்தை
தொழுப்புளமிருசிகப்பன் குலங்கமேய்குள்ளனென்றே. 5

வாதத்தில்சார்ந்ததேகி வருந்தமிழ்சமமதாகும்
போதொத்தகணக்கில்வல்லன் புத்திமான்றகுந்தசீலன்
போதித்தேயார்க்குநேயன் புறஞ்சொலான்புரைகள்கூறுன்
வேதனைச்சிறையிலிட்ட வேலவன்வாக்கிதாமே. 6

வாணிபசமர்த்தனுவன் வழுத்தினன்பொறுமையாக
கோணியவீகையற்பம் துட்டரைநேசங்கொள்ளான்
வேணியில்கங்கைபூண்டான் வேலவன்சுதனின்மேலும்
நாணயசிரத்தையுள்ளான் நன்மார்க்கமுடையானென்றே. 7

அத்தன்மேல்பிரீதியுள்ளா னன்னைக்குநண்பனுகும்
கத்தலர்தன்பால்நேசன் கருத்தினிலமைப்பானின்னேன்
உத்தரேதார்கனிஷ்டன்தன்பால் ஒற்றுமையுடையோனுகும்
சித்தியாமிவனின்யோகம் செப்புவேன்கந்தர்வாக்கே. 8

ஓதுவேனிருபானுண்டில் உற்றிடுமகரதிக்கில்
தோதுளயிடத்தில்வந்த தோகையாமாதுதன்னை
நீதியால்வதுவைசூட்டி நீட்சியைப்புரிவானுகும்
ஆதியாவுள்ளோனுதும் அறையக்கேள்கந்தர்வாக்கே. 9

வேறு விருத்தம்

சொல்லுவேனிவன்றனது யோகந்தன்னை
சோர்வில்லைமூவேழு இரண்டுமட்டில்
நல்லவனுய்ப்பலமதுவும் சமமேயாதும்
நானுய்த்தேனதின்யீதில் ஈரெட்டாண்டும்
நலனில்லைதானியத்தால் பொருளுஞ்சேர்க்கை
நாணதின்மேலாயுள்மட்டுங் கந்தர்வாக்கு
தொல்லையில்லையோகமது வலுத்துநிற்கும்
துப்புறுவர்நற்பொருள்சேரும் பூமிகூடும். 10

செய்திடுவன்பணிதிபாத் திரங்கள்மேன்மேல்
செழிப்புண்டுளப்பலனுந் திறமாச்சொன்னேன்
நைதிடுவோன்மனைவியின்றி சுகித்துவாழ்வன்
நவின்றிடுவேனிவன்றனது தொழிலைக்கேளு
பொய்யில்லைமீனந்தா னறிக்கிலப்பா
பொழிந்திடுவேன்வாரியதின் கரையின்மேற்காய்
எய்திடுநற்பேரூரில் நெடுநாள்நின்று
இன்பமதாமாடைமுதல் பலவீனத்தால். 11

உற்றிடுமோர்தொழில்புரிவோ னுழிக்கப்பால்
ஒண்டொடியால்வாணிபங்கள் நடத்தலுண்டு
சித்தியாமதனுலும் பலன்களுண்டாம்
சிறப்புடனேவாழ்ந்திடுவன் தேவிசொல்வாய்
உற்றதொருவெண்மைமஞ்சள் நிறந்தானப்பா
உறும்பலகலையோர்ந்தானுல் சாந்தசீலன்
கற்றறிந்தோர்நேயமுரை யருளேயன்பன்
கவலையிலானென்றுரைத்தேன் கந்தர்வாக்கே. 12

இன்னவன்றந்தையா னுரைக்கக்கேளாய்
எழிலானவிரெண்டு மாண்டுதன்னில்
நன்னயமாம்திங்களா மூடலந்தன்னில்
நாடியவன்மரணமதாய் விழுவான்சொன்னேன்
அன்னையவன்முப்பத்தி யொன்பானுண்டுள்
யணுகிடுமேசேத்துமத்தால் அவளும்வீழ்வள்
பின்னையுமேபாலகனின் கண்டகாலம்
பேசிடுவேன்கந்தரவர் மொழிந்தவாக்கே. 13

மைந்தன் தன்கெண்டாதி காலந்தன்னை
வகுத்திடிலோர்மூவாண்டில் சூட்டால்பீடை
இந்ததோர்மூவாண்டில் சிலேத்துமம்போக்கால்
எய்திடுமேநீராலுந் துன்பமுண்டு
பந்தமில்லையதன்மேலு ஆருண்டிற்றுன்
பகருவாயுஷ்ணத்தால் கெண்டம்நீங்கும்
நன்மையுடனதின்மேலு மேழாமுள்ளே
நாட்டுவேன்மேகமது வாய்வால்பீடை. 14

வேறு விருத்தம்

முப்பத்திரெண்டாமாண்டுள் மொழிகுவேன்வெப்புநீங்கும்
தப்பில்லையடுத்தவாண்டுள் தானுறுஞ்சூட்டால்பீடை
மெய்ப்படியிருபத்தொன்பான் மேல்வருஷத்தில்பீடை
துப்புறநாலெட்டாண்டுள் சொல்லினேன்சூட்டால்பீடை. 15

இத்தரைமைந்தாமாண்டு லிசைத்தனனுஷ்ணவாய்வாய்
முத்தியபீடையுண்டு முனந்தறக்கப்பால்மூண்டு
சுத்தமாம்சிலேத்துமப்பீடை தாங்கிடும்நாற்பாற்சூடும்
புத்திமாநாற்பானைந்தில் பிலயில்லசிலேத்துமத்துன்பம். 16

நாற்பத்தியெட்டாமாண்டுள் நவில்சுதன்பிணக்குசூட்டால்
பார்கண்ணேய்பலத்தகண்டம் பகருவேனதுவும்நீங்கி
மார்க்கமாயன்பத்தொன்பாம் வருஷத்தில்மரணமாகி
தீர்க்கமாசோழநாட்டில் சனிப்பனேயாகூர்மேற்பால் 17

2-வது மீன லக்கினம் முற்றிற்று.

கந்தர் நாடி முற்றிற்று.

திருமகள் அச்சகம் சென்னை—1. 1979.